விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 04 வெள்ளிக்கிழமை (21.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 245

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## ரணில் இன்று பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

நாட்டின் புதிய அரசாங்கத்தின் அடுத்த பிரதமராக, ரணில் விக்கிரமசிங்க இன்று பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று காலை 10 மணியளவில் நடைபெறும இந் நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் இவர் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளதாக ஐக்கிய தேசியக்

24 ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் வேண்டாம்! ஒதுங்குகிறார் பசில்

(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ முழுமையாக அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் பின்னா செயற்பாட்டு அரசியலில் இருந்து விலகிக் கொண்டு ஓய்வு பெற்றுக்கொள்ள எடுத்த தீர்மானத்தில் மாற்றமில்லை என அவர் தெரிவித

23 ஆம் பக்கம் பார்க்க....

# தேசிய அரசாங்கம்



## மக்கள் நலனை முன்னிறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்

(கொழும்பு)

**நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சகல தீர்மானங்களும், நாடு மற்றும் மக்களின் வெற்றியை நோக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பாராளுமன்றத்துககு தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஒரு விசேட சந்திப்பில் கலந்து கொண்டனர்.

புதிய பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால இச்சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தற்போது நாட்டின் தேவைகளை அறிந்து நாட்டுக்காக ஸ்ரீலங்கா சுத

23 ஆம் பக்கம் பார்க்க....

## பொறுப்புக்கூறலை வலியுறுத்தி ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை

### புதிய அரசாங்கத்திடம் விடுத்தது

(கொழும்பு)

நாட்டில் நடைபெற்ற போர் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச் செயல்களுக்கு பொறுப்புகூறுதல் மற்றும் மெய்யான நல்லிணக்கம் ஆகியனவற்றை உறுதி செய்ய புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 17-ம் திகதி இலங்கையில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் நியாயமான முறையில் நடத்தப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றியப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசாங்கம் நல்லாட்சி கொள்கைகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

மனித உரிமை மற்றும் சட்டம் ஒழுங்கு, குற்றச்செயல்களுக்கு பொறுப்புகூறுதல் மற்றும் மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகியன குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இதற்கு அனைத்து அரசியல் கட்சித் தரப்புக்களும் ஆக்கபூர்வமான முறையில் பங்களிப்பு வழங்க முன் வரவேண்டும் என தெரிவித்த

23 ஆம் பக்கம் பார்க்க....

## தேசிய அரசாங்கத்தை அமைக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவு

(கொழும்பு)

நாட்டில் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான ஆதரவைத் தருவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று தீர்மானித்துள்ளது.

நேற்றுக் காலை அக்கட்சியின் மத்தியக் குழுக் கூட்டம் கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது சம்பந்தமாக ஆராயப்பட்டதாக ஊடகங்களிடம் கூறிய அக்கட்சியின் துணைசசெயலாளர் துமிந்த திசாநாயக்க,



ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைய பெரும்பான்மை ஆசனங்களை பெற்ற ஐக்கிய தேசிய கட்சியு

24 ஆம் பக்கம் பார்க்க....

## வாக்குகளில் சந்தேகமிருப்பின் நீதிமன்றத்தை நாட உரிமையுண்டு

### மீளவும் எண்ண முடியும் என்கிறார் வேதநாயகன்



(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முடிவுகள் அறிவிக்கப்பட்டபின் வாக்குகள் எவையும் மீள எண்ணப்படவில்லை,

அதில் யாருக்கும் சந்தேகம் இருப்பின் அவர்கள் நீதிமன்றத்தை நாடும் பட்சத்தில் மன்றின் கட்டளைப் படி வாக்குகளை மீள எண்ண முடியும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற தேர்தல் யாழ்.

24 ஆம் பக்கம் பார்க்க....


## எதிர்க்கட்சித் தலைவர் பதவி சம்பந்தனுக்கு கிடைக்க வாய்ப்பு

(கொழும்பு)

புதிதாக கூடவுள்ள எட்டாவது நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைக்கலாமென தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் பிரதமராக மீண்டும் பதவியேற்கவுள்ள ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில், ஸ்ரீலங்கா சுதந்



திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட

24 ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### கந்தையா பொன்னுத்துரை

(மனோ நகை மாளிகை உரிமையாளர்)

நீர்வேலி வடக்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னுத்துரை நேற்று 20.08.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வனும் தங்கம்மா, நல்லம்மா, பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், துரைச்சாமி-நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக்கணவரும், சிவமுருகன், சிவகுமரன், சிவசக்தி (சுவிஸ்), சிவசிந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகலட்சுமி, பாரதி, நிர்மலன் (சுவிஸ்), கஜேந்திரன் (பொது முகாமைத்துவ உதவியாளர்-கச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவினா, தரணியா, நிறோஜினி, நிறோஜா, சிவப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2015) பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாசுவன் காலியான் மேடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்
0774457331

(1548)

## வேலையாட்கள் தேவை

தையல் வேலை தெரிந்த அனுபவமுள்ள ஆண்கள் உடன் தேவை.
தங்குமிட வசதி இலவசம்
(50,000 மேற்பட்ட சம்பளம்)
தொடர்புகளுக்கு:-0756293417
(லதுசன்), கிளிநொச்சி

(1547)

## திருவெண்காட்டில் தெய்வீக உரை

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் இடம்பெறும் தெய்வீக உரையில் இன்று இரவு 7 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கு.பாலசண்முகன் உரை ஆற்றுவார்.

இதேவேளை நேற்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலை உப அதிபர் ச.லலீசனின் தெய்வீக உரை இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ந)


ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சுமொழியைபிரெஞ்சுமுறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.யாழ்.பல்கலைக்கழகபிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழி பெயர்புகள். யாழ், வன்னி, மன்னார் தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படித்தே FRANCE, CANADA...செல்கிறார்கள். யாரும் படிக்கலாம்.

13.09.15 சனி,ஞாயிறு11-1pm உடன்பதியுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


# பாராளுமன்றத் தேர்தல்-2015
## யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

### என் அருமை தமிழ் பேசும் மக்களே!

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போதிய பிரசார வசதிகளோ, நிதி வளங்களோ இன்றி மிகச் சொற்ப நாட்கள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் முன்னெடுத்த பரப்புரையை ஏற்று எமக்கு வாக்களித்த அன்பு நெஞ்சங்களுக்கு இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்து கொள்ளும் அதேவேளையில், மக்கள் தேர்தலில் அளித்த தீர்ப்பை பின்வரும் காரணத்துக்காக தலைவணங்கி புத்துயிர் பெறும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஏற்றுக் கொள்கிறேன்.

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக மக்களை சரியான வழியில் வழிநடத்தும் பொருட்டு தமிழர் தாயகம், சுயநிர்ணயம் போன்ற கோட்பாடுகளை பற்றுதலுடன் தொடர்ச்சியாக பறை சாற்றி வரும் கட்சியை அடையாளம் காணுமாறு, மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை தமிழ் பேசும் மக்களின் விடிவெள்ளியாக தோன்றியுள்ளார் என அடையாளப்படுத்திய வடமாகாண முதலமைச்சரும் எனது சட்டக் கல்லூரி விரிவுரையாளருமாயிருந்த, நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களின் அறைகூவலை ஏற்று, தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதான அங்கமாக 1976ஆம் ஆண்டிலிருந்து இயங்கிவரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரசாரப் பீரங்கியான அண்ணன் அமிர்தலிங்கம் 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் தோல்வியடைந்திருந்த நிலையில் அவரின் பிரசாரப் பணியை தளர விடாது வியக்கத்தக்க வகையில் தொடரச் செய்து தமிழரசுக் கட்சியை வீறுகொள்ளச் செய்த திருவாளர் தர்மலிங்கம் அவர்களின் தவப்புதல்வன் சித்தார்த்தன் உட்பட தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டவர்களையும் மொத்தமாக ஐவரை வெல்லவைத்த வரலாற்றுக் கடமைக்கு மனப்பூர்வமான நன்றிகளை தெரிவிக்கிறேன்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்கள் நலனே முதன்மையானது என்ற இலக்குடன் செயற்படுவதற்கு பரிபூரண ஒத்துழைப்பு வழங்கத் தயங்கமாட்டோம் என இதய சுத்தியுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் உறுதியளிக்கிறேன். அவ்வாறு ஒற்றுமையாய் ஒரு குடையின் கீழ் செயலாற்றுவதற்கு உறுதி பூண்டுள்ளமைக்கு எடுத்துக் காட்டாக, அண்ணன் அமிர்தலிங்கம் அரசியலில் அர்ப்பணிப்புடன் களமிறங்கிய நாள் முதல் அவருடன் இணைந்து பக்கபலமாக இருந்து இன்றும் இலட்சியவேட்கையுடன் இயங்கிக் கொண்டிருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை தேசியப் பட்டியல் வேட்பாளரான, வாழ்நாள் பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களை கடந்த தேர்தலின் பின் புறந்தள்ளியது போல் அல்லாது, இத் தேர்தல் பரப்புரையில் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக்குவது தவிர்க்க முடியாத செயற்பாடு என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.



தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தேர்தல் கடமைகளை பொறுப்பேற்று செயற்பட்ட அன்பு இதயங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**இ.த.விக்னராசா**
(இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதிபதி)
தமிழர் விடுதலைக் கூட்டணி

(-1872)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### செல்லையா-பானுதேவன்

(முல்லை வடக்கு ப.தெ.வ அபிவிருத்திச் சங்க கிளை முகாமையாளர்-வலைஞர்மடம்)



மண்ணுலகில் 06 - 06 - 1969

விண்ணுலகில் 21 - 08 - 2012

அன்பின் சிகரமாய் பண்பின் திருவுருவாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் குடிமக்களின் தோழனாய்
உயர்வான சிந்தனையுடனும் உன்னதமான செயற்பாட்டுடனும்
ஊர் போற்ற வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே-நீ
மறைந்து மூன்றாண்டென்ன மூவாயிரம் ஆண்டானாலும்-எம்
நினைவு உன்னை விட்டு அகலாது என்றும்.

உன் நினைவுடன் வாழும் மனைவி, பிள்ளைகள்
(சுசி, பானுஷன், சுஜிந்தன்)
செல்வபுரம், முல்லைத்தீவு.

(1542)

## வட மாகாண கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும்-2015

கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் வட மாகாண உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக தொழிற்துறைத்திணைக்களத்தினால் வருடாவருடம் கண்காட்சியும் போட்டியும் நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக இவ்வாண்டும் வட மாகாண கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும் வட மாகாண தொழிற்துறை திணைக்களத்தினால் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற ஆக்கங்கள் தேசிய மட்ட போட்டிக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் மாகாண மட்டத்தில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

**இடம்:-யாழ்.கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்**
**காலம்:-செப்ரெம்பர் மாதம் 4ம், 5ம், 6ம் திகதிகளில்**
**நேரம்:-காலை 8.00 மணி முதல்-மாலை 8.00 மணிவரை**

பின்வரும் வகைகளின் கீழ் கைப்பணிகளை மேற்கொள்ளும் கைப்பணியாளர்கள் தங்கள் பிரதேச செயலகங்களில் உள்ள தொழிற்துறை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தொடர்பு கொண்டு அவர்கள் மூலமாக தங்கள் ஆக்கங்களை 24.08.2015ற்கு முன்னர் கையளிப்பதன் மூலம் கண்காட்சியில் பங்குபற்றி பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

01.கைத்தறி நெசவு உற்பத்திகள்
02.களிமண் உற்பத்திகள்
03.தும்பு, ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள்
04.தும்பறை வடிவங்கள் (சணல், பருத்தி
05.பிரம்பு, மூங்கில் குழாய் சார்ந்த உற்பத்திகள்
06.உலோக கைப்பணிப் பொருட்கள்
07.ஆபரணங்கள் (உலோக, கற்பதித்த, நானாவித ஆபரணங்கள்)
08.முகமுடிகள் மற்றும் பாவைகள்
09.செதுக்கிய முகங்கள்
10.சங்கீத உபகரணங்கள்
11.துணிகள் மற்றும் துணிகளினாலான கைப்பணிப் பொருட்கள் (தையல் எம்புரொயிடர், இயந்திர எம்புரொயிடர், துணிகளில் வர்ணம், பெச்வேக், பாரம்பரிய துணி வேலைப்பாடு)
12.பற்றிக் (Batik)
13.ரேந்தை
14.வெண்கல மற்றும் சேசத்
15.மர உற்பத்திப் பொருட்கள்
16.தோற் பொருட்கள்
17.கற்கள் மூல கைப்பணிப் பொருட்கள்
18.பாரம்பரியக்கலை வரைபுகளும் சிற்பங்களும்
19.தென்னை, பனை சார்ந்த உற்பத்திகள்
20.நானாவித கைப்பணிப் பொருட்கள் (கடதாசிப் பொருட்கள், பல்ப் சார்ந்த உற்பத்திகள், மரத்தூள் பொருட்கள், சிப்பி ஓடுகள், பலதரப்பட்ட மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப் பட்ட கைப்பணிப் பொருட்கள்)
21.நினைவுச் சின்னங்கள்.

**மேலதிக தகவல்களுக்கு பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

தொழிற்துறை திணைக்களம்,
முதியோர் இல்ல வளாகம்,
கண்டி வீதி, கைதடி.
தொ.பே.இல:-021 753 8381
தொலைநகல்:-npinddept@gmail.com

(சி-1870)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு மகிழ்ச்சியான மறுவாழ்வு கிடைக்க வேண்டும்

## தினத்தந்தி சுட்டிக்காட்டு

**இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு மகிழ்ச்சியான மறுவாழ்வு கிடைக்க வேண்டும் எனவும் தமிழர் நலன்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கம் முழுமூச்சாகக் கொண்டு செயற்பட வேண்டுமெனவும் இந்தியாவிலிருந்து வெளிவரும் தினத்தந்தி பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.**

பிரதமராக ரணில் விக்ரமசிங்க மீண்டும் தெரிவாகியுள்ளார். இலங்கையில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள்? என்பதை, இலங்கையில் உள்ள தமிழர்கள் மட்டுமல்ல, தாய் தமிழக தமிழர்கள் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் அனைவரும் ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். மொத்தம் 225 எம்.பி.க்களுக்கான தேர்தல் இது. இதில், 196 எம்.பி.க்களைத் தான் மக்கள் நேரடியாக தேர்ந்தெடுத்தார்கள். மீதமுள்ள 29 எம்.பி.க்கள் இந்தத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் பெற்ற வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்தலில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணிக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையேதான் பலத்த போட்டி நிலவியது. இந்தத் தேர்தலில் ஒரு பெரிய ஆச்சரியம் என்ன வென்றால் ஏற்கனவே இலங்கையில் இருமுறை ஜனாதிபதியாக இருந்து, கடந்தமுறை நடந்த தேர்தலில் தோல்வியை தழுவிய மகிந்த ராஜபக்ஷ போட்டியிட்டதுதான்.

இந்தியா உட்பட பெரும்பாலான ஜனநாயக நாடுகளில் நாட்டின் தலைமைப் பொறுப்பில் ஜனாதிபதி இருந்தாலும், அவருக்கு நாட்டை நடத்தும் நிர்வாக அதிகாரங்கள் கிடையாது. பிரதமருக்குத் தான் நிர்வாக அதிகாரங்கள் உண்டு. ஆனால், இலங்கையில் ஜனாதிபதிதான் சர்வ அதிகாரம் படைத்தவர். ஜனாதிபதிக்கு இணையான அதிகாரம் பிரதமருக்கு கிடையாது.

யார் வரவேண்டும் என்பதைவிட, யார் வரக்கூடாது என்பதில்தான் அதிக ஆர்வம் காட்டி இலங்கை மக்கள் வாக்குப்போட்டனர். தமிழர்களை பொறுத்தமட்டில், ரணில் விக்கிரமசிங்க மீதும் பெரிய நம்பிக்கை இல்லாவிட்டாலும், தமிழர் பகுதிகளில் தேர்தல் பிரசாரம் செய்யும் போது அவர் கொடுத்த வாக்குறுதிகளால் ஏதாவது செய்வார் என்ற எதிர்பார்ப்பு இருககிறது.

மகிந்தவுக்கு எப்போதுமே தமிழர் விரோதபோக்கு உண்டு என்பதில் எள்ளளவும் யாருக்கும் சந்தேகம் இல்லை. 2009 இல் தமிழர்கள் கொதது கொத்தாய் படுகொலை செய்யப்பட்டதும், தடை செய்யப்பட்ட வெடிகுண்டுகளும், ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டு போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதும், தமிழர்களின் மனதில் இன்னும் ஆறாகாயமாக இருக்கிறது.

மைத்திரி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியில்தான் மகிந்த போட்டியிட்டார். ஆனால், இருவருக்கும் ஏழாம்பொருத்தம். சுதந்திர கட்சி பெருவாரியாக வெற்றிபெற்று இருந்தால்கூட அவரை ஜனாதிபதி பிரதமராக அனுமதித்து இருக்கமாட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவும் தனிப்பெரும்பான்மையோடு வெற்றிபெறாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவோடுதான் ஆட்சி அமைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழர்களின் ஆதரவோடு பிரதமர் பதவியை ஏற்கப்போகும் ரணில் விக்கிரமசிங்க, தமிழர் நலன்கள் காப்பாற்றப்படவேண்டும் என்பதையே முழுமூச்சாகக் கொண்டு செயற்படவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு மகிழ்ச்சியான மறுவாழ்வு கிடைக்கவேண்டும்.

மீனவர்கள் பிரச்சினை தீர்க்கப்படுமா? என்று ரணிலிடம் கேட்டதற்கு, அதைவிட பெரிய பிரச்சினைகள் இருக்கிறது. முதலில் எங்கள் நாட்டு பிரச்சினைகளை முடித்துவிட் டுத்தான், மீனவர் பிரச்சினைக்கு வருவோம் என்று சொன்னது தான் அதிர்ச்சியை அளிக்கிறது. அந்த நிலைப்பாட்டை அவர் மாற்றிக்கொள்ள வேணடும். ஆதரவு தெரிவிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கை-இந்திய தமிழர்கள் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வுகாண வைப்பதையே தங்கள் தலையாய கடமையாகக் கொண்டு பணியாற்ற வேண்டும் என்பதுதான் தமிழர்களின் கோரிக்கையாகும்என மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)


# நன்றி நவில்கிறேன்

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில்
தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில்
இலங்கை தமிழரசு கட்சி சார்பாக வன்னி தேர்தல்
மாவட்டத்தில் இலக்கம் 3ல் போட்டியிட்ட
**இ.சாள்ஸ் நிர்மலநாதன்**
ஆகிய என்னை
வன்னி மாவட்ட வேட்பாளர்களில்
அதிகூடிய விருப்பு வாக்குகளால் (34620)
முதன்மை பெற வைத்து வன்னி மாவட்டத்திலிருந்து
பாராளுமன்றத்திற்கு உங்கள் பிரதிநிதியாக
அமோக வாக்குகளால் வெற்றியடையச் செய்த
மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா
வாழ் மக்களுக்கு எனது மனம் நிறைந்த
நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



"தமிழர்களின் தாகம்
வடக்கு கிழக்கு இணைந்த தாயகம்"

என்றும் உங்கள்
இ.சாள்ஸ் நிர்மலநாதன்
பாரளுமன்ற உறுப்பினர்
(வன்னி மாவட்டம்)


## அஜித் நிவாட் கப்ரால் நிதிக்குற்றவியல் பிரிவில்

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவில் நேற்று பிரசன்னமாகியுள்ளார்.

நகர அபிவிருத்திச் சபையினால் தனியார் நிறுவனமொன்றை கொள்வனவு செய்த போது ஏற்பட்ட நிதி மோசடிகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

இது தொடர்பிலான விசாரணைகளில் வாக்கு மூலமொன்றை அளிக்க நேற்று அவர் இவ்வாறு நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவில் பிரசன்னமாகியுள்ளார். (இ-7)

## சஷி வீரவன்ச நிதி மோசடி விசாரணை பிரிவில் ஆஜர்



முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்ச பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவிற்கு வருகை தந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

காணி கொடுக்கல்- வாங்கல் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்காக பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய நேற்று சஷி வீர வன்ச பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவில் ஆஜராகியுள்ளார்.

இதேவேளை தேர்தல் நிறைவடையும் வரையில் அரசியல்வாதிகள் தொடர்பில் எவ்வித விசாரணைகளும் மேற கொள்ளப்பட கூடாதென தேரதல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய பொலிஸாருக்கு அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தேசியப் பட்டியல் தொடர்பில் ஜே.வி.பி.கட்சிக்குள் முறுகல்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய பட்டியல் ஊடாக உறுப்பினர்களை தெரிவு செய்வதில் மோதல் நிலை ஒன்று ஏற்பட்டுள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியில் போட்டியிட்ட சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் கே.டீ.லால்காந்த ஆகியோர் தோல்வியடைந்தனர்.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த சுனில் ஹந்துனநெத்தி மற்றும் கே.டீ.லால்காந்த ஆகியோர் தேசிய பட்டியலில் நியமிக்கப்பட வேண்டும் என ஒரு குழு தீர்மானித்துள்ளதாகவும், தற்போது தயாரிக்கப்பட்டுள்ள அரசியல் சார்பற்ற பட்டியலில் முன்னிலையில் இருக்கின்ற நல்லாட்சி செயற்பாட்டாளர் மற்றும் முன்னாள் கணக்காய்வாளர் சரத் சந்திரசிறியை அதற்காக நியமிக்க வேண்டும் என இன்னும் ஒரு குழு தீர்மானித்துள்ளது.

இந்த காரணத்தினால் மக்கள் வடுதலைமுன்னணியினுள் மோதல் நிலை ஒன்று தோன்றியுள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-7)

## குண்டுத்தாக்குதலுக்கு ஜனாதிபதி கண்டனம்



பாங்கொக் குண்டுத் தாக்குதலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட அப்பாவி மக்களின் உயிர்களைக் காவு கொள்ளும் வகையில் கடந்த திங்கட்கிழமை பாங்கொக் நகரில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் பற்றி அறிக்கை ஒன்றின் மூலம் ஜனாதிபதி தனது இரங்கலையும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார்.

தாய்லாந்தின் பும்போல் அதுல் யாதேவ் மன்னருக்கு இந்த இரங் கல் செய்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இலங்கை அரசாங்கமும், மக்களும் தாய்லாந்து அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இதயபூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது. உயிரிழந்தவர்களின் குடும்ப ங் களுக்கு ஆழ்ந்த அனுதாபங்க ளைத் தெரிவிக்கின்றோம்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்கின்றோம். இந்த இழிவான மலேச்ச னத் தனமான தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்த நெருக்கடியான நிலையில் தாய்லாந்து மக்களுக்கு வழங்கப் படக் கூடிய சகல உதவிகளையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம் என ஜனாதிபதியின் இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத சம்பவத்துடன் தொடர்புடையவர்களை தாய்லாந்து அரசாங்கம் தண்டிக்கும் என எதிர் பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 259

## அஹங்காரத்தை விடுதல்

...உங்கள் முழுத் தோற்றமும் சரிந்துவிழுந்து விடக்கூடும் என்றும் பிறகு உங்களைச் சமூகத்தில் தாங்கி நிறுத்த எதுவும் இல்லையென்றும் அஞ்சுகிறீர்கள். இதுதான் சமூக அஹங்காரம் என்பது.

நீங்கள் மிகவும் சிரமப்பட்டு உருவாக்கிய தோற்றம், உங்கள் அடையாளமாகிவிட்ட, உங்களை சமூகத்தில் அடையாளம் காட்டுகிற தோற்றம், ஆபத்தில் இருக்கிறது. அது மற்றவர்களை விட உங்களுக்கே ஒரு பெரிய அடையாளமாக இருக்கிறது! நீங்கள் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் உங்களை உள்ளபடியே வெறுமனே காட்ட முடியுமானால் இன்னும் தளர்வாக இருப்பீர்கள். ஏனெனில், அப்பொழுது எதையும் மூடி மறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்காது.

ஸ்வாமிஜி, இவைகளை நாங்கள் இரகசியமாக வைத்துக் கொள்ள விரும்புவதன் காரணம், மக்கள் இவற்றைப் பற்றி வம்பளக்க ஆரம்பித்துவிடுவார்கள். அதில் எங்களுக்கு விருப்பமில்லை என்று நீங்கள் சொல்லக்கூடும். நான் சொல்கிறேன், ஒருவருக்கும் இன்னொருவரைப் பற்றிப் பேசத் தகுதி கிடையாது. அப்படிப் பேசுவார்களாயின், அவர்கள் முட்டாள்கள். இதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். பிறகு தானாகவே நீங்கள் அவர்களுக்குக் கொடுத்திருக்கும் சக்தியும், அவர்களது பேச்சும் வெறுமனே மறைந்துவிடும். நீங்கள்தான் உங்களை பாதிக்கும் சக்தியை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். இல்லையா? இப்பொழுது அந்த சக்தி



காணாமல் போய்விடும்.

வெறுமனே ஒரு திறந்த புத்தகம் போல் வாழத் தீர்மானித்து அதன் படியே வாழுங்கள். அவ்வளவே. உங்கள் தைரித்தையும் உடல் மொழியையும் பார்த்து மக்கள் தானாகவே உங்களைப் பற்றி வம்பளப்பதில் எந்த பிரயோஜனமும் இல்லை என்பதைப் புரிந்துகொள்வார்கள்! உங்கள் சமூக அஹங்காரத்தை விடுத்து, எந்த விதமான அந்தரங்கமும் இல்லாமல் வாழ்வதே ஒரு மிகப்பெரிய விடுதலைதான் என்று சாமி சொல்கிறேன்.

நமது சமூக அஹங்காரத்தினால் நாம் எப்பொழுதும் நம்மைப் பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறோம். இதற்குக் காரணம், மக்கள் எப்பொழுதும் நம்மைப் பார்த்து நம்மைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பதாக நாம் எண்ணிக் கொண்டு இருப்பதுதான். மிகவும் தெளிவாக இருங்கள்.... நீங்கள் உங்களைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தால் மிகவும் அஹங்காரம் உள்ளவர்களாகிறீர்கள். உங்களை ஏதோ பெரிதாக நினைத்துக்கொண்டு எல்லாரது கண்களும் எப்பொழுதும் உங்கள் மீதே இருப்பதாக நினைக்கிறீர்கள். அதனால்தான் உங்களைப் பற்றியே எண்ணிக் கொண்டிருகிறீர்கள்.

நீங்கள் உங்களை இல்லாதவர் என்று எண்ணும் பட்சத்தில் உங்களைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பீர்களா? நீங்கள் உங்களை யாரோவாக எண்ணிக் கொண்டிருப்பதால்தான் உங்களைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் ஒருபடி மேலே சென்று, உங்களைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பதன் மூலம்தான் நீங்கள் தன்னடக்கத்தைக் காட்டுகிறீர்கள் என்று வேறு நினைக்கிறீர்கள். உண்மையில் இது உங்களுக்குத் துன்பத்தையே அளிக்கிறது என்பதைக்கூட நீங்கள் அறிந்து கொள்ளாத ஒரு விடயம். நீங்கள் வெறுமனே கண்ணியமாகவும் அடக்கத்துடனும் இருப்பதாகத் தொடர்ந்து நினைக்கிறீர்கள்; அதுபோன்றே தொடர்ந்து இருந்தும் கொண்டிருக்கிறீர்கள். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

**சிறைச்சாலைக்குள் போதைப் பொருள் கடத்திய புறா... காவலர்களிடம் வசமாக சிக்கிய பரிதாபம்!...**









சிறைச்சாலையொன்றுக்குள் போதைப்பொருள் கடத்திய புறாவொன்று அந்த சிறைச்சாலைக் காவலர்களிடம் வசமாக சிக்கிய சம்பவம் Costa Rica-வில் இடம்பெற்றுள்ளது.

போதைப்பொருள் சகிதம் சான் ராபயல் டி அலஜ {யலா நகரிலுள்ள லா றிபோர்மா சிறைச்சாலைக்குள் பிரவேசித்த மேற்படி புறாவைப் பிடித்த சிறைச்சாலைக் காவலர்கள் அதனை காவலில் வைத்துள்ளனர்.

அந்தப் புறாவின் மார்பில் இணைக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் பையில் சுமார் 14 கிராம் நிறையுடைய கொக்கேயின் போதைப்பொருள் மற்றும் அதே நிறையுடைய கஞ்சா போதைப் பொருள் என்பன இருந்துள்ளன.

அந்தப் போதைப்பொருட்களின் பெறுமதி 180 ஸ்ரேலிங் பவுணாகும். மேற்படி புறாவுக்கு செய்திகளைக் காவிச் செல்வதற்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளது.

# சமைப்போம் சுவைப்போம்

## கரட் கூட்டு



**தே.பொருட்கள்:**

கரட் - 1 கப்
(பொடியாக நறுக்கியது)
பாசிப்பருப்பு - 1 1/2 டேபிள் ஸ்பூன்
துவரம் பருப்பு - 2 டேபிள் ஸ்பூன்
பெரிய வெங்காயம் - 1
(பொடியாக நறுக்கியது)
மஞ்சள் தூள் - 1 சிட்டிகை, உப்பு - தே.அளவு, துருவிய தேங்காய் - 2 டேபிள் ஸ்பூன், சீரகம்- 1 டீஸ்பூன், எண்ணெய் - 1 டீஸ்பூன், கடுகு - 1 டீஸ்பூன், உளுத்தம் பருப்பு - 1/2 டீஸ்பூன், பெருங்காயத் தூள் - 1 சிட்டிகை, கறிவேப்பிலை - சிறிது, பச்சை மிளகாய் - 1 (நறுக்கியது)

**செய்முறை**

முதலில் பாசிப்பருப்பை பாத்திரத்தில் போட்டு பொன்னிறமாக வறுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதனை குக்கரில் போட்டு, அத்துடன் துவரம் பருப்பு, 1 கப் தண்ணீர், உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து அடுப்பில் வைத்து, 2 விசில் விட்டு இறக்கி, மசித்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பின்பு மிக்ஸியில் தேங்காய் மற்றும் சீரகம் போட்டு, தண்ணீர் ஊற்றி நன்கு மென்மையாக அரைத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு, உளுத்தம் பருப்பு, பச்சை மிளகாய், பெருங்காயத் தூள், கறிவேப்பிலை சேர்த்து தாளித்து, பின் வெங்காயத்தைப் போட்டு பொன்னிறமாக வதக்கி விட வேண்டும்.

பின் அதில் தேவையான அளவு உப்பு மற்றும் கரட்டை சேர்த்து, பச்சை வாசனை போக சிறிது நேரம் வதக்கி, பின் அதில் வேக வைத்த பருப்புக்கள் மற்றும் தண்ணீர் ஊற்றி, கேரட் நன்கு மென்மையாக வேகும் வரை வேக வைக்க வேண்டும். கரட் நன்கு வெந்த பின்னர், அதில் அரைத்த தேங்காய் பேஸ்ட் சேர்த்து, நன்கு பச்சை வாசனை போக கொதிக்க வைத்து இறக்கினால், கரட் கூட்டு ரெடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் போட்டியிட்ட 150 பௌத்த பிக்குகளில் ஒருவரும் தெரிவாகவில்லை

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 150 பௌத்த பிக்குகளில் ஒருவரும் நாடாளுமன்றிற்கு தெரிவாகவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலின் போது பல்வேறு கட்சிகள் மற்றும் சுயா தனக் குழுக்களின் ஊடாக சுமார் 150 பௌத்த பிக்குகள் போட்டியிட்டனர்.

எனினும், நாடாளுமன்ற உறுப்பு ரிமை பெற்றுக்கொள்ளும் அளவிற்கான வாக்குகளை எந்தவொரு பௌத்த பிக்குவும் பெற்றுக்கொள்ளவி ல்லை.

பொதுபல சேனா அமைப்பு இம் முறை நாடாளு மன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன என்னும் பெயரில் போட்டியிட்டது.

குறைந்தபட்சம் பத்து ஆசன ங்களை வெற்றிகொள்ள முடி யும் என நம்பிக்கை வெளியிட்டிருந்தது.

எவ்வாறெனினும், மிகவும் சொற்ப அளவிலான வாக்குக ளையே நாடு முழுவதிலும் பொதுஜன பெரமுன கட்சி பெற்றுக்கொண்டிருந் தமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஒமல்பே சோபித தேரர் மற்றும் அத் துரலிய ரத்ன தேரர் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் பெயரிடப்பட்டுள்ளனர்.

எனினும், இவர்களுக்கு தேசியப் பட்டியல் ஊடாக வாய்ப்பு வழங்கப்படக்கூடிய சாத்தியங்கள் குறைவாகவே காணப்படுகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு தேசியப்பட்டியல் ஊடாக சந்தர்ப்பம் வழங்கப்படாவிட்டால் புதிய நாடாளுமன்றில் ஒரு பௌத்த பிக்குவும் அங்கம் வகிக்க வாய்ப்பில்லை என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# கட்சியைப் பலப்படுத்த நாமல் பாடுபட்டாராம்



கட்சியை பலப்படுத்தும் வகையில் பாடுபட்டேனே தவிர, எனது விருப்பு வாக்குகளை அதிகரித்துக் கொள்ள அல்ல எனவும் அக் காரணத்தினாலே அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றதென நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டவர்,

சஜித் பிரேமதாஸ விருப்பு வாக்குகளை அதிகரித்து கொள்ள முயற்சித்தமையினாலே அவரால் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெற்றியீட்ட முடியவில்லை.

அரசாங்க அதிகாரம் மற்றும் அமைச்சரவை அதிகாரத்தை கொண்டிருந்த போதிலும், ஐக்கிய தேசிய கட்சி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தோல்வியடைந்தது.

அதற்கு காரணம் கட்சியை விட தங்களை குறித்து சிந்தித்தமையினாலே அவர்கள் தோல்வியடைந்தார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷ அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 127,201 வாக்குகளை பெற்று கொண்ட நிலையில் சஜித் பிரேமதாஸ 112,645 வாக்குகளை மாத்திரமே பெற்று கொண்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 4 ஆசனங்களை பெற்று கொண்டது. எனினும் ஐக்கிய தேசிய கட்சியினால் 2 ஆசனங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## விளையாட்டு விழா

கோப்பாய் சமூக சேவா சங்கத்தின் கீழ் இயங்கிவருகின்றபாலர், பகல் விடுதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாலர்பகல்விடுதிவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. வே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விளையாட்டுவிழாவுக்குவிருந்தினர்களாக கோப்பாய்வைத்தியஅதிகாரி வைத்திய கலாநிதி ரி.ஜெயசீலன் தம்பதிகள், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப்பிள்ளை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெயா தம்பையா, கோப்பாய் வடக்கு கிராம உத்தியோகத்தர் செ.வசந்தகுமார், கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அதிகாரி க.கமலதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)


## கேள்வி அறிவித்தல்
## நெடுந்தீவு பிரதேச சபை சுற்றுலாத்துறை அபிவிருத்தி மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை -PSDG-2015

| வேலையின் பெயர் | ஒப்பந்த இல. |
|---|---|
| 01. நெடுந்தீவு புறாக்கூடு அமைப்பினை அழகுபடுத்தலும் பாதுகாத்தலும் | NP/14/41(7)/02/01/PSDG/01 |
| 02. நீர் விநியோகத்திட்ட கிணறு புனரமைப்பும் valve chamber புனரமைப்பு | NP/14/41(7)/02/01/PSDG/02 |

01.மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் PSDG 2015 நிதியின் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, நெடுந்தீவு பிரதேசசபை, நெடுந்தீவு தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03.தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List)சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வேலை அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், நெடுந்தீவு பிரதேசசபை, பிரதான வீதி, நெடுந்தீவு, (தொலைபேசி: 021 221 5211, 021 320 2304) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 07.09.2015 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் செயலாளர், நெடுந்தீவு பிரதேச சபை, பிரதான வீதி, நெடுந்தீவு எனும் இடத்திலிருந்து 21.08.2015 ஆம் திகதியிலிருந்து 7.09.2015 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07.கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர், நெடுந்தீவு பிரதேசசபை, பிரதான வீதி, நெடுந்தீவு எனும் முகவரிக்கு 7.09.2015 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும் கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தி ஏழு-23.11.2015) நாட்கள் வரை செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். அனுமதிக்கப்பட்ட வங்கி முறி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| இல. | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்வி பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/41(7)/02/01/PSDG/01 | நெடுந்தீவு புறாக்கூடு அமைப்பினை அழகுபடுத்தலும் பாதுகாத்தலும் | 1.5m | 2 மாதம் | C9 அல்லது அதற்கு மேல் | 15000.00 | 21.12.2015 |
| 2 | NP/14/41(7)/02/01/PSDG/02 | நீர்விநியோகத்திட்ட கிணறு புனரமைப்பும் Valve champer புனரமைப்பும் | 1.0m | 2 மாதம் | C10 அல்லது அதற்கு மேல் | 10000.00 | 21.12.2015 |

1) கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 31.08.2015 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு நெடுந்தீவு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எந்தவிதமான கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைக்குழு, நெடுந்தீவு, பிரதேச சபை. 21.08.2015


## ராசி பலன்

21.8.2015
(ஆவணி 04, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சஷ்டி முற்பகல் 7.35 மணிவரை
சுவாதி பிற்பகல் 4.46 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை | | செவ் |
| | | | சூரி, புத குரு, சுக் |
| | | சந் சனி | ராகு |

**மீனம்:** குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை உருவாகும், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்:** வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், விருந்தினர் வருகையுண்டு, மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும்,வியாபார விருத்தியுண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** தொழிலில் உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பிரியமானவ களின் சந்திப்புகள் இடம்பெற லாம்.

**கடகம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களின் ஒத்தாசைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மகரம்:** கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், புதிய திட்டங்கள் கைகூடும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், உற்சாகமான நாள்.

**சிம்மம்:** கடவுளை வழிபட்டு காரியங்களை சாதிப்பீர்கள், நண்பர்களால் நன்மையுண்டு, மனை சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயங்கள் கிடைக்கலாம், போசன சுகமுண்டு.

**தனுசு:** எண்ணங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, அதிர்ஷ்டகரமான நாள்.

**விருச்சிகம்:** புதிய திருப்பங்கள் ஏற்படும் நாள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், காரியங்களில் வெற்றிபெற கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம், திடீர் பயணத்தால் பணவரவுகள் கிடைக்கலாம், சுற்றனை மிகுதியான நாள்.

**கன்னி:** தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது, உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கோவளம் கடற்கரையில் நிறுவப்பட்ட பிள்ளையார் சிலை

(தும்பளை)

பருத்தித்துறை கற்கோவளம் கடற்கரைப் பகுதியில் திடீரென பிள்ளையார் சிலை ஒன்று நிறுவப்பட்டு மாலை அணிவிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரையும் இல்லாத பிள்ளையார் சிலை திடீரென நிறுவப்பட்டுள்ளமையால் அங்குள்ள மக்கள் அவ்விடத்தில் கோவில் ஒன்றைக் கட்டி வழிபடுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த சிலை கடலிலே மிதந்து வந்திருக்கலாம் என்ற நம்பிக்கை அம்மக்களிடம் காணப்படுவதாலே அப்பிள்ளையார் சிலையினை கோவில் அமைத்து ஆதரிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5-19)




# இலட்சிய தாகத்தை வளர்த்துக் கொள்பவர்கள் போற்றப்படும் தலைவர்களாக உருவாகுகிறார்கள்

(யாழ்ப்பாணம்)

சிறுவயது முதலே பொதுப் பணிகளில் ஈடுபட்டு, இலட்சிய தாகத்தை வளர்த்துக்கொள்பவர்கள் பின்னாளில் அனைவராலும் போற்றப்படும் தலைவர்களாக உருவாகுகிறார்கள். இவர்கள் அரசியல் தலைவர்களாகவும் பரிணமிப்பது உண்டு. இதற்கு அமரர், மாமனிதர் சிவமகாராசா ஓர் உதாரணம். ஆனால், இன்று அரசியல்வாதிகள் பெரும்பாலும் உருவாக்கப்படுகிறார்கள் என்று வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

அமரர்சி.சிவமகாராசா கூட்டுறவுத்துறையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியதோடு, இரண்டு தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தவர். 'நமது ஈழநாடு' பத்திரிகையின் நிர்வாக இயக்குநராகவும் இருந்த இவர் 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 20 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். விடுதலைப்புலிகளால் 'மாமனிதர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட அன்னாரது நினைவேந்தல் நிகழ்ச்சி நேற்று வியாழக்கிழமை தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

அமரர் சிவமகாராசா நல்ல தலைவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஒருவர். தனது 22 ஆவது வயதில் மாவிட்டபுரம் கிராம முன்னேற்றச் சங்கத்தின் செயலாளராகப்பொதுவாழ்வில் பிரவேசித்த சிவமகாராசா 68 ஆவது வயதில் சுட்டுக்கொல்லப்படும் வரை தனது வாழ்நாளைத் தமிழ்ச் சமூகத்தின் மேம்பாட்டுக்காக அர்ப்பணித்த ஒரு சிறந்த சமூக சேவையாளர். மாவிட்டபுரம் விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கத் தலைவர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், வலி. வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர், வலி. வடக்கு பிரசைகள் குழு ஒன்றியச் செயலாளர், வலி. வடக்கு புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் என்று இளவயது முதலே தன்னலமற்ற பொதுவாழ்வில் ஈடுபட்டபடியால்தான் தமிழ்ச் சமூகம் மதிக்கும் தலைவர்களுள் ஒருவராக அவரால் உயர முடிந்தது. அவ்வாறு அவரை மக்கள் அடையாளம் கண்டதால் தான் அவரை அரசியலிலும் வெற்றி பெற வைத்து இரண்டு தடவைகள் நாடாளுமன்றத்துக்கும் அனுப்பி வைத்தார்கள்.

ஆனால், இன்றைய சூழ்நிலையில் ஒருவர் திடீரென அரசியலில் நுழைந்து வெற்றி பெற முடிகிறது. சமூகத்துக்கு கடந்த காலங்களில் அவர் ஆற்றிய பணி என்ன என்பதைவிட தேர்தலுக்குச் செலவழிக்க இப்போது அவரிடம் உள்ள பணம் எவ்வளவு என்பதே வெற்றியைத் தீர்மானிக்கிறது. நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்கள் மில்லியன் கணக்கான ரூபாய்களை தங்களை விளம்பரப்படுத்துவதற்காகச் செலவிடவேண்டியிருந்தது. சிவமகாராசா போன்ற சமூகப் பணியாளர்கள் அரசியலில் பிரவேசிப்பதற்கான கதவுகள் அடைக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# யாழ்ப்பாண தூய ஆரோக்கியநாதர் ஆலயத் திருவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தூய ஆரோக்கியநாதர் ஆலயத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதற்கமைய திருப்பலி நிகழ்வுகளில் இன்று இறைவார்த்தை எமக்கு அர்ப்பண வாழ்வைக் கற்றுத் தரும், நாளை சனிக்கிழமை சாட்சிப் பணியில் தொடரும் உயிருள்ள விசுவாசம், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை குடும்பத்தில் இறைவழி வாழ்வு , எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை செபம் தரும் பலம், 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எல்லையற்ற கடவுளின் மன்னிப்பு, 26 ஆம் திகதி புதன்கிழமை உறவை வளர்க்கும் உணவு, 27 ஆம் திகதி வியாழக்கிழமை புனிதர் வழியில் புதிய வாழ்வு எனும் கருப்பொருளில் மறையுரைகள் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வில் ஆயத்த வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகவுள்ளது.

நற்கருணை விழா மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும் திருவிழா திருப்பலி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூபப்பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறும். (இ-5)

## அனுமதி அட்டை இன்று பெறமுடியும்

நீர்வேலிசி.சிதமிழ்க்கலவன் பாடசாலைமாணவர்களுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை அனுமதி அட்டை இன்று வெள்ளிக்கிழமைகாலை 9 மணி முதல் வழங்கப்படவுள்ளது.

எனவே புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் தத்தமது பெற்றோர்களுடன் வருகை தந்து பரீட்சை அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளும்படி பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (இ-5-136)

# அரியாலை, பூம்புகார், நாவலடி பகுதிகளில் சட்டவிரோத மண்ணகழ்வு தொடர்கின்றது

(கொழும்புத்துறை)

யாழ். அரியாலை பூம்புகார், நாவலடி மற்றும் முள்ளிப் பகுதிகளில் இரவுவேளையில் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மண்அகழ்வுகள் இடம் பெறாது இறுக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இம்மண்ணகழ்வு இடம்பெற்றுவருகிறது.

குறிப்பாக இரவுவேளைகளில் உழவியந்திரங்களை கொண்டு வந்து சிலர் மண் ஏற்றி செல்கின்றனர் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இம் மண்ணகழ்வினை பொதுமக்கள் கவனித்தாலும் அச்சம் காரணமாக இது தொடர்பில் மண்ணகழ்வில் ஈடுபடும் நபர்களிடம் விசாரிப்பதில்லை.

பொலிஸ் பாதுகாப்புக்கள் முன்னர் பலப்படுத்தப்பட்டிருந்த வேளை இவ்வாறான சட்டவிரோதமண்ணகழ்வு இடம்பெறவில்லை எனவும் பொலிஸ் பாதுகாப்பு இல்லாத சமயம் பார்த்து மண்ணகழ்பவர்கள் இரவு நேரங்களில் தமது மண்ணகழ்வுச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறான மண்ணகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறுவதால் காணி உரிமையாளர்கள் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்குகின்றனர்.

எனவே மேற்குறித்த பகுதியில் இரவுநேரங்களில் இடம்பெற்று வருகின்ற மண்ணகழ்வு செயற்பாடுகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் தடுத்து நிறுத்தவேண்டும்.

அத்துடன் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-51)

## நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு

# மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலுக்காக அனுமதிப் பத்திரம் பெற்ற மதுபான விற்பனை நிலையங் களை மூடி கண்காணிப்பதற் காக கடந்த 16 ஆம் திகதியில் இருந்து 19 ஆம் திகதி வரை அனைத்து மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களின் விடுமுறையும் இரத்துச் செய்யப் பட்டிருந்ததாக வட மாகாண உதவி மதுவரி ஆணையாளர் கிறிஸ்ரீன் யோசப், தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ,

பொதுத் தேர்தல் தொடர்பான பாதுகாப்பிற்காக தேர்தல் ஆணையாளரின் கட்டளைக்கிணங்க மதுவரி ஆணையாளர் உத்தரவின் பேரில் நாடு முழுவதிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நாட்களில் அனுமதிப்பத்திரம் பெற்ற மதுபான விற்பனை நிலையங்களை பூட்டியும் அவற்றை மேற்பார்வை செய்வதற்கும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

அந்தவகையில் யாழ். மாவட்டத்தில் எந்தவிதமான சட்ட மீறல்களும் இடம் பெறவில்லை.

அத்துடன் சட்ட விரோதமான முறையில் கசிப்பு, சாராயம் விற்றவர்கள் எமது உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட மேற் பார்வையில் கண்டுபிடிக்கப்பட்டு சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் சுன்னாகம் - கந்தரோடை வீதி காணப்படுகின்றது

(கொழும்புத்துறை)

சுன்னாகம்-கந்தரோடை வீதி நீண்டகாலமாக திருத்தப்படாது காணப்படுவதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

சுன்னாகம் நகரப் பகுதியில் இருந்து அளவெட்டிக்கு செல்லும் குறித்த வீதியே திருத்தப்படாதுள்ளது.

குறித்த வீதியூடாக தினமும் 20 நிமிடத்திற்கு ஒரு முறை தனியார் பேருந்துச் சேவையும் ஒரு மணித்தியாலயத்திற்கு ஒருமுறை இ.போ.ச. பேருந்து சேவையும் இடம்பெற்று வருகின்றன.

ஆனால் இவ் வீதியானது மேடு பள்ளமாக காணப்படுவதால் பேருந்துகள் சீரான போக்குவரத்துச்சேவையினை மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ளன.

தினமும் பேருந்துகளில் பயணிக்கின்ற நோயாளர்கள், கர்ப்பிணிகள் எனப் பலர் பல தரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ் வீதியானது வரலாற்றுச் சிறப்புமிக்க நகுலேஸ்வர ஆலயத்திற்குச் செல்லும் பிரதான வீதியாக காணப்படுகின்றது.

நகுலேஸ்வர உற்சவ காலத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சென்று வருகின்றனர்.

அத்துடன் பாடசாலை மாணவர்கள் இவ்வீதியை தமது போக்குவரத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே கவனப்பாரின்றி காணப்படும் குறித்த வீதியினை சம்பந்தப்பட்ட தரப்பினர் திருத்தித்தருமாறு அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-51)




கோப்பாய் ஆசிரிய கலாசாலை முத்தமிழ் மன்றத்தின் வெளியீடாக அமைந்த ''வற்றுப் பெருக்கு'' குறும்படத்தின் வெளியீட்டு விழா அண்மையில் கலாசாலையின் ரதிலக்ஷ்மி மண்டபத்தில் இடம்பெற்றது. அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு குறும்படத்தை வெளியிட்டு வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தைகளின்றி நல்லாட்சியுடன் தமிழ்க் கூட்டமைப்பு இணைய முன்வரும்

## ரவி கருணாநாயக்க நம்பிக்கை

(கொழும்பு)

**நல்லாட்சிக்கான அரசாங்கத்தின் கொள்கையை ஏற்றுக் கொண்டு எம்முடன் இணைந்து செயற்பட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்வரும் என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு நாம் அழைப்பு விடுக்கவோ? பேச்சுவார்த்தை நடத்தவோ வேண்டிய அவசியமில்லை. நல்லாட்சிக்கான கொள்கையை ஏற்று அவர்கள் செயற்படுவர் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

தற்போது ஐக்கிய தேசிய முன்னணியிடம் 106 ஆசனங்கள் உள்ளன. முதற் கட்டமாக நல்லாட்சிக் கொளகையை ஏற்றுக் கொண்ட 20 பேர் எம்முடன் இணையவுள்ளனர். மேலும் பலரும் வரவுள்ளனர். அதனுடன் நாம் அரசாங்கம் அமைப்போம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த அவர்,

எமக்கு 106 ஆசனங்கள் கிடைத்துள்ளன. அத்துடன் சுமார் 20 பேர் எம்முடன் இணையவுள்ளனர். அத்துடன் நல்லாட்சிக்கான கொள்கையை ஏற்றுக் கொண்டு ள்ள பலர் எம்முடன் இணைவர் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிந்தனைக்கமைய நாம் அனைவரும் இணைந்து சிறந்த நாடு ஒன்றைக் கட்டியெழுப்ப முடியும்.

அனைத்து மக்களும் சுதந்திரமும் மகிழ்ச்சியுமாக வாழக்கூடிய நாட்டை உருவாக்குவதே எமது எதிர்கால இலக்கு.

ஜே.வி.பியினர் அரசாங்கத்துடன் இணையப் போவதில்லை என தெரிவித்து வருகின்றனரே என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் ரவி கருணாநாயக்க அவர்கள் எம்மோடு இணைய வேண்டியதில்லை. ஏற்கனவே அவர்கள் எமக்கு உறுதுணையாக செயற்பட்டனர். எதிர்காலத்திலும் எம்முடன் இணைந்து செயற்பட முடியும்.

ஜனாதிபதியின் கோட்பாட்டுக்கு அமைய எமது நல்லாட்சி அரசாங்கத்துடன் பலர் இணைவர் என்ற நம்பிக்கை எமக்குண்டு.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை மேற்கொள்ளவுள்ளதா? என கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேச வேண்டிய அவசியமில்லை.

அவ்வாறு பேச்சு, நடத்தினால் அது வேறு பல விமர்சனங்களைத் தோற்றுவிக்கும் சிலவேளை நாம் நாட்டைப் பிரிக்கப் போகிறோம் என்றும் விமர்சிக்க இடமுண்டு. உண்மையில் நாம் அவ்வாறு நாட்டைப் பிரிப்பவர்கள் இல்லை. அவர்கள் எம்முடன் நட்புறவுடன் இணைந்து செயற்படுபவர்கள்.

தேர்தலில் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக சில அடிப்படைவாதிகள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தனர். தோல்வி கண்ட பின்பும் இது போன்ற விமர்சனங்களை முன்னெடுப்பதே அவர்களின் நோக்கம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். ஜனவரி 8 ஆம் திகதி ஆரம்பித்த நல்லாட்சிக்கான பயணத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான விடயங்கள் அங்கு கலந்துரையாடப்பட்டன. அதற்கான செயற்பாடுகள் தொடரும்.

அனைவரையும் இணைத்துக் கொண்டு செயற்படப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதற்கிணங்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அழைக்கப்படுவாரா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், பிரதமர் கூறினால் அதற்கு மாறாக நான் எதனையும் கூறமுடியாது. எனினும் திருடர்களுக்கு நல்லாட்சியில் இடமில்லை.

கறை படியாத கைகளை உடையோருடன்நாம்இணைந்து செயற்படத் தயாராகவுள்ளோம்.

ஊழல் மோசடியற்ற தூய்மையான நல்லாட்சியை அமைப்போம் என்ற வாக்குறுதியை நாம் மக்களுக்கு வழங்கியுள்ளோம். அதற்கிணங்கவே செயற்படுவோம். தேசியப் பட்டியல் தொடர்பில் குறிப்பிட்ட அமைச்சர் அது தொடர்பில் கட்சியின் செயலாளர் மற்றும் முக்கியமானவர்கள் கலந்துரையாடி முடிவெடுப்பர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


சரவணா ரெக்ஸ்

st Saravana Tex

சரவணா ரெக்ஸ் நல்லூரில் மட்டும் தான் உள்ளது

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு
ரெடிமேற் சல்வார்கள், கொட்டன் சாறிகள்
மாபெரும் மலிவு விற்பனை



நீங்கள் ரெடிமேற் சல்வார்
வாங்குவதற்கு (கொட்டன் பிளற் மொடல்)
6000/-
தேவையா? இல்லை 3500/- போதுமே...
சேமிப்பு 2500/- செப்டெம்பர் 15 வரை

திரட்வேக் கொட்டன் சாறி
2300/-1650/-







சரவணா ரெக்ஸ்
நல்லூர்
526,529,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(சிவன் கோவில் அருகில், யாழ்ப்பாணம்)



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 24 செவ் 7 இல்<br>உயரம்: 5'2''<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/1145 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 34 செவ் 2 இல்<br>உயரம்: 5'3''<br>தகைமை/தொழில்: BFA<br>தொ.இ: G/1885 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 8 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/1146 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 80 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: GAQ/ தனியார் தொழில்<br>தொ.இ: G/1890 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 13 1/4 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: பிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/1150 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 23<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1895 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 31<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/1154 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 52<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/1896 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டின் சுவர் வீழ்ந்து குடும்பஸ்தர் மரணம்

(மல்லாவி)

பழைய வீட்டின் சுவரை இடித்து அகற்ற முற்பட்டவேளை குடும்பஸ்தர் மீது எதிர்பாராத விதமாக சுவர் வீழ்ந்ததில் உடல் நசுங்கி சம்பவ இடத்தில் அவர் பலியானார்.

இச்சம்பவம் கடந்த 18ஆம் திகதி மாலை 5மணியளவில் பளைப்பகுதியில் இடம் பெற்றது.

இதில் பளைப்பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மகேந்திரன் (வயது-56) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பிரஸ்தாப நபர் தற்போது திருகோணமலையில் குடும்பத்துடன் வசித்து வருகின்ற நிலையில் நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பில் ஈடுபடுவதற்காக பளைக்கு வந்துள்ளார்.

வாக்களிப்பில் ஈடுபட்ட பின்னர் யுத்தத்தின்போது சேதமடைந்திருந்த தனது வீட்டின் சுவரை இடித்து அகற்றி புதிய வீடு அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை எதிர்பாராத விதமாக இடிக்கப்பட்ட சுவர் அவரின் மேல் வீழ்ந்தது.

இதனால் அவர் மூச்சுத்திணறி சம்பவ இடத்தில் பலியானார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பளை பொலிஸார் சடலத்தை மீட்டு கிளிநொச்சி வைத்திய சாலையில் ஒப்படைத்ததுடன் விசாரணைகளையும் மேற்கொண்டனர். (2-15)

# மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு முடிந்தளவு உதவிகளை செய்வேன்

## பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தான் தெரிவிப்பு

(மல்லாவி)

வன்னி மாவட்டத்தில் கல்வி செயற்பாடுகளில் மிகவும் பின்தங்கி வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு என்னால் முடிந்த அனைத்து செயல் முறைகளையும் முன்னெடுப்பேன் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்று முடிந்த பாராளுமன் றத்தேர்தலில் வன்னித் தொகுதியில் போட்டி யிட்டு வெற்றி பெற்றுள்ள காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

எனது ஐந்து வருடங்களுக்குரிய பாராளுமன்ற உறுப்பினரு க்கான மாதாந்த சம்பளப் பணத்தை வன் னியில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு வழங்குவேன்.

வன்னி மாவட்டத்தில் கல்வி செயற்பாடுகளில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களினது கல்வி வளர்ச்சிக்கு என்னால் முடிந்த உதவிகள் அனைத்தையும் முன்னெடுக்கவுள்ளேன்.

அத்துடன் எனது ஐந்து வருடகால பாராளுமன்ற உறுப்பினருக்கான சம்பளபணம் அனைத்தையும் மாணவர்களின் கல்விக்காகவே செலவிடவுள்ளேன். மேலும் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவுடன் இணைந்து எமது பிரதேசத்தின் அபிவிருத்தி, மீள்குடியேற்றம், மக்களின் அடிப்படைப் பிரசினைகள் என்ப வற்றிற்கான தீர்வை எவ்வித இன, மத பேதமின்றி அனைத்து மக்களுக்கும் பணியாற்றுவத ற்காக எனது முழு நேரத்தையும் செலவிடவுள் ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (2-15)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேச சமூகம் ஆதரவு வழங்க வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான பேச்சுக்கு சர்வதேச சமூகம் ஆதரவு வழங்க வேண்டும் என பகிரங்கமாக வேண்டுகின்றோம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மக்களின் வாழ்வாதார பிரச்சினை, காணாமல்போனோர் தொடர்பான பிரச்சினைகள், அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் மீள் குடியேற்றம் உட்பட நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் உள்ள இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பன தொடர்பாக உடனடி நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

இதற்காக புதிய அரசாங்கத்துடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையை நடத்துவோம். இந்த பேச்சுவார்த்தைக்கு சர்வதேச சமூகம் பூரணமான ஆதரவை வழங்க வேண்டும் என பகிரங்கமாக கோரிக்கை விடுக்கின்றோம் என்றார்.

இதேவேளை தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு கிடைத்துள்ள இரு தேசியப் பட்டியல் உறுப்புரிமையும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையில் பகிரப்படவேண்டும் என செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது,

நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு அமோக ஆதரவை தந்துள்ளதுடன் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற அந்தஸ்தையும் வழங்கியுள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் இரு தேசியப்பட்டியில் ஆசனம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்காக வடக்கு கிழக்கில் களத்தில் நின்ற கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் வேட்பாளர்களின் கடும் பிரயத்தனமாக உள்ளது.

எனவே இரு தேசியப்பட்டியலையும் தமிழரசுக்கட்சி தனது அங்கத்தவர்களுக்கு வழங்காது ஏனைய அங்கத்துவ கட்சிகளாக உள்ள மூன்று கட்சிகளில் எவராவது ஒருவருக்கு ஒரு தேசியப்பட்டியல் உறுப்புரிமையை வழங்க வேண்டும். இதன் மூலமே தமிழ் தேசியக்கூட்டமைப்புக்குள் உட்கட்சி பூசல் நிலவுவதாக தமிழர்களிடம் பொய்ப்பிரசாரம் செய்வோருக்கு வாய்ப்பூட்டு போட்டதாக அமையும் எனவும் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு இணைந்த தாயகப் பிரதேசத்தில் நாம் கௌரவமாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவதன் ஊடாக எமது அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி. சிவமோகன் தெரிவித்தார்.தனது நிலைப்பாடு தொடர்பாக ஊடக ங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதுடன் ஊடாக பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நகர்த்துவதே எனது நோக்கம்.

அரசியல் ஸ்திரத்தன்மை என்பது வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் நாம் கௌரவமாக வாழக்கூடிய வகையில் திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையை நிலை நிறுத்தக்கூடிய வகையில் தீர்வை நோக்கி எனது குரல் பாராளுமன்றத்தில் ஒலிக்கும்.

அத்துடன் எனது பிரதேச கிராமங்களின் அபிவிருத்திக்கு தொழில் முயற்சிகளை ஏற்படுத்தவதுடன் அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி வறுமையில் இருந்து மீட்க நடவடிக்கை எடுப்பேன் எனவும் தெரிவித்தார்.

வவுனியா குருமன்காடு சந்தியில் இருந்து நகரம் வரை செல்லும் புகையிரத நிலைய வீதியை செப்பனிட்டு தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றார். (2)




# கந்தசுவாமி ஆலய மஹோற்சவம்


கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலய வருடாந்த, மஹோற்சவப் பெருவிழா நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெறும்.

மஹோற்சவ பிரதம குருவாக தேவஸ்தான ஆதீன பரம்பரைக் குருவும் சிவாச்சாரிய திலகமுமான சிவஸ்ரீ ஜெக.ஜெகதீஸ்வரக் குருக்கள் கிரியைகளை முன்னெடுக்கவுள்ளார்.

இதில் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும் அன்றைய தினம் இரவு சப்பரத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறும். எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை பத்தாம் திருவிழாவன்று தீர்த்த உற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இரவு பூங்காவனத் திருவிழா திருக்கல்யாண வைபவத்துடன் இடம்பெற்று நிறைவு பெறவுள்ளது என ஆலய நிர்வாக சபை யினர் அறிவித்தல் விடுத்துள்ளனர். (2)

# வவுனிக்குளத்தின் வாய்க்காலின் இருபகுதிக்கும் கொங்கிறீட் அமைக்குக

## விவசாயிகள் கோரிக்கை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலுள்ள வவுனிக்குளத்தின் இடதுகரை வாய்க்காலின் இரண்டு பக்கங்களையும் பாதுகாக்கக்கூடிய வகையில் கொங்கிறீட் வாய்க்கால் அமைக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளம், கடந்த 2013 ஆம் ஆண்டு 600 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டது.

குறித்த குளத்தின் நீரேந்துப்பிரதேசம் அதிகரிக்கப்பட்டமை, அணைக்கட்டு கலிங்கு ஆகியன உயர்த்தப் பட்டதுடன் நீர் விநியோக வாய்க்கால், கழிவு வாய்க் கால்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள் என்பனவும் புன ரமைக்கப்பட்டன.


அத்துடன், குளத்தில் இடதுகரை வாய்க்காலில் மண்ணரிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் இரு பக்கமும் கொங்கிறீட் இட்டு புனரமைக்கப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் ஒரு பகுதிக்கு மட்டுமே கொங்கிறீட் இடப்பட்டுள்ளது.

எனவே, மண் அரிப்பை தடுக்கும் வகையில் இரண்டு பக்கமும் கொங்கிறீட் சுவர்களை அமைத்து குளத்தின் கீழான எஞ்சிய நீர்ப்பாசன வாய்க்கால்கள், நீர்ப்பாசன வீதிகள் உள் ளிட்ட கட்டுமானங்களை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

# சிறுவர் பூங்கா மிக விரைவில் பாவனைக்கு கையளிக்கப்படும்

## பூநகரி பிரதேசசபையினர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முக்கொம்பன் பகுதியில் பூநகரி பிரதேச சபையினால் புறநெகும திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா, இன்று வரை பாவனைக்கு உட்படுத்தப்படாத நிலையில் பற்றைக்காடு மண்டிக்கிடக்கின்றது.

கடந்த 2013 ஆம் ஆண்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான கிராமிய மற்றும் சிறுநகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், பொருளாதார அமைச்சினூடாக 3.6 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த சிறுவர் பூங்கா, தற்போது எந்த வித பயன்பாடுமின்றி பற்றைக்காடாக காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர், அத்துடன் விளையாட்டு உபகரணங்களும் சேதமடைந்து பராமரிப்பு இன்றி துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றன. ஆகவே, இதனை பயன்படுத்துவதற்கு வழி ஏற்படுத்தித்தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக பூநகரி பிரதேசசபையை தொடர்புகொண்டு வினவியபோது, விரைவில் இப்பூங்காவை பொதுமக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தனர்.(2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செய்தி சேகரிப்பதற்குச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்





(கிளிநொச்சி-1)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலைக்கு முன்பாக தனியார் பேருந்துகள் தரித்து நின்று பயணிகளை ஏற்றும் இடத்தைச் சுற்றி முட்கம்பி வேலியை கிளிநொச்சி இ.போ.ச. சாலை நிர்வாகம் இரவோடு இரவாக அமைத்துக்கொண்டமை காரணமாக நேற்று அதிகாலை தொடக்கம் தனியார் பேருந்துகள் வீதியில் தரித்து நின்று பயணிகளை பேருந்துகளில் ஏற்றின.

இது தொடர்பில் நேற்றுக்காலை செய்தி சேகரித்துபுகைப்படங்கள் எடுத்த ஊடகவியலாளர் மீது கிளிநொச்சி இ.போ.ச.சாலை ஊழியர் தாக்குதலை மேற்கொண்டபோது ஊடகவியலாளரை பொதுமக்கள் காப்பாற்றிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

கிளிநொச்சி இலங்கைப் போக்குவரத்துச் சாலை நிர்வாகத்திற்கும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் இடையில் கிளிநொச்சி இ.போ.ச.சாலைக்கு முன்பாக தனியார் பேருந்துகள் தரித்து நின்று பயணிகள் சேவையில் ஈடுபடுவது தொடர்பில் அடிக்கடி முரண்பாடுகள் ஏற்படுவதும் பின்னர் பொலிஸாரும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் தலையீடு செய்து சீர்ப்படுத்துவதுமான நிலை அண்மைக்காலமாக தொடர்கின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தனியார் பேருந்துகள் தரித்து நின்று பயணிகளை ஏற்றும் இடத்தைச் சுற்றி கிளிநொச்சி இ.போ.ச.சாலை நிர்வாகத்தினரால் முட்கம்பி வேலி அடைக்கப்பட்டது.

இது தொடர்பில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் ஊடகங்கள் தொடக்கம் அமைச்சர்கள் வரை அறிவித்தல் விடுத்தனர்.

நேற்றுக்காலை 6.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு செய்தி சேகரிப்பதற்காக சென்ற அச்சு ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளர்கள் மீது கிளிநொச்சி இ.போ.ச. சாலை ஊழியர்கள் தாக்குதலை மேற்கொண்டதுடன் இலத்திரனியல் உபகரணங்களையும் சேதப்படுத்த முற்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வீதியால் பயணித்த பொதுமக்கள் இதனை அவதானித்து ஊடகவியலாளர்களை காப்பாற்றியதுடன் கிளிநொச்சி பொலிஸாருக்கும் தகவலை வழங்கியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வன்னி ஊடகவியலாளர் சங்கங்கள் பலத்த கண்டனத்தை தெரிவித்துள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புபட்ட நபர்கள்மீது பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கையொன்றையும் விடுத்துள்ளனர். (2-15-277)

# ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் பிரமோற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவில் பிரமோற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இதில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் சப்பற த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் இடம் பெறும்.




எதிர்வரும் செப்டெம்பர்மாதம் 6ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழா நடை பெறும்.

உற்சவங்கள் தினமும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நிறைவு பெறும்.

மாலை உற்சவங்கள் மாலை 6மணிக்கு ஆரம்பமாகி இரவு 9மணிக்கு நிறைவுபெறும்.

கொடியேற்றம்,தேர்,தீர்த்த உற்சவங்களில் அதிகாலை 5மணிக்கு ஆரம்பமாகும்.

கொடியேற்றத்திற்கு முதல்நாள் மாலை கொடிச்சீலை உபயகாரர்களுடைய இல்லத்தில் இருந்து ஆலயத்திற்கு ஊர்வலமாக எடுத்து செல்லப்படவுள்ளது.

அத்துடன் கொடியேற்றம் நடைபெறும் தினம் பிற்பகல் 2மணிக்கு ஆலயத்தில் வழமைபோல சிறப்பாக வரலக்சுமி பூசை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# பல்பொருள் வாணிப நிலையத்திற்கு இனந்தெரியாத நபர்களினால் தீ மூட்டல்

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(முல்லாவி)

உதிரிப்பாகங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள், பல்பொருள் வாணிப நிலையம் ஒன்று இனந்தெரியாத நபர்களினால் தீயிட்டு கொளுத்தப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது அழகு சாதன பொருட்கள் விற்பனைப்பகுதி முற்றாக எரிந்ததுடன் உதிரிப்பாகங்கள் வாணிப பகுதியின் ஒருபகுதி தீயில் எரிந்து நாசமாகியது.

இச் சம்பவம் புதுக்குடியிருப்பு கைவேலி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அருகாமையில் நேற்று முன்தினமிரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

நடைபெற்று முடிந்த தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெற்றமையை அடுத்து வாணிப நிலையம் முன்பாக வெடி கொளுத்தி ஆரவாரம் செய்து விட்டு நிலையத்தை மூடிவிட்டு வீடு சென்றிருந்த நிலையில் தீயிட்டு கொளுத்தப்பட்டது.

இது குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் உரிமையாளரினால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

அதில் அவர் பாராளுமன்ற தேர்தலின் போது தமிழ்த்தேசியகூட்டமைப்பிற்கு ஆதரவாக செயற்பட்டதாகவும் இதனால் வேறு கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் முரண்பட்டனர். இவர்களினாலேயே தீ வைப்பு இடம் பெற் றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப் பாட்டை பதிவு செய்தார்.

அத்துடன் சுமார் 3 இலட்சத்திற்கும் அதிகமான பொருட்கள் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைது செய்து நேற்று முல்லைத் தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்திய போது வழக்கினை விசாரணை செய்த நீதிபதி சந்தேக நபரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் [illegible] டார். (2-15)

# வெளியேற்ற முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது

## கமநலசேவைகள் திணைக்களம் எடுத்த முயற்சிக்கு மக்கள் எதிர்ப்பு



வவுனியா, குட்செட், அம்மா பகவான் வீதியில் வசிக்கின்ற மக்களை அங்கிருந்து வெளியேற்ற கமநலசேவைகள் திணைக்களம் எடுத்த முயற்சிக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, குட்செட், அம்மா பகவான் வீதியில் கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் 1997 ஆம் ஆண்டு தொடக்கம் கட்டம் கட்டமாக குடியேறி தற்போது 52 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

நிரந்தரமான வீடுகள், மின்சார தொலைபேசி வசதிகள், நீர் விநியோகம் என அனைத்து வசதிகளும் இப் பகுதி மக்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இப் பகுதியில் மக்கள் நிரந்தரமாக வாக்குரிமையைக் கூட பெற்று வாழ்ந்து வரும் நிலையில் தற்போது வவுனியா கமநலசேவைகள் திணைக்களத்தினர் அப் பகுதி நிலமானது வவுனியா, வைரவபுளியங்குளம் குளத்திற்குரிய காணி எனவும் அதனை வழங்க முடியாது எனத் தெரிவித்து அப் பகுதி மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு எல்லைக் கல் ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனை அப் பகுதி மக்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர். தாம் குடியேறி வீடுகளை கட்டிய போது எதுவும் கூறாமல் இருந்துவிட்டு தற்போது அங்கிருந்து எம்மை வெளியேற்ற முயல்வதை ஏற்க முடியாது என மக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் அப் பகுதி மக்கள் சார்பாக நபரொருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் குளத்தின் அலைகரையை அண்டிய பகுதியில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக வசிக்கின்றோம். இதுதான் தற்போது எங்களுடைய பிள்ளைகளின் சொந்த இடம். இங்குதான் அவர்கள் பிறந்தார்கள். நிரந்தரமான வீடுகள் அமைக்கப்பட்டு வாக்காளர் அட்டைகளும் இப் பகுதி விலாசத்திலேயே உள்ளன. தற்போது கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள் இது குளத்திற்குரிய காணி எனத் தெரிவித்து எம்மை இங்கிருந்து வெளியேறுமாறும் கூறுகின்றனர்.


அத்துடன் இப்பகுதியில் எல்லைக் கல் ஒன்றினை போட முயல்கின்றனர்.

இதேவேளை, சம்பவ இடத்திற்குச் சென்ற வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இது தொடர்பில் மக்களை அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் கமநலசேவை திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உரிய தீர்வைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாக தெரி வித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரக்க சுபாவம்!



வசந்தி இரக்க சுபாவம் கொண்டவள். அவள் சிறுவயது முதலே சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து வந்தாள்.

அவளது தாயார் அவள் சிறுமியாக இருக்கும்போதே இறந்து போனாள். அவளது தந்தை மறுமணம் செய்து கொண்டார்.

வந்தவளோ வசந்தியின் செயல்களில் எந்தவித குற்றம் குறைகளைக் கண்டுபிடிக்க முடியாது போனாலும், அவளுக்குச் சரியாக சாப்பாடு போடாமல் இருந்தாள். வசந்தி கவலைப்பட வில்லை. ஏனெனில், மற்றவர்கள் அவள் தமக்கு செய்யும் வேலைகளுக்காக உணவு கொடுத்து வந்தனர்.

இப்படி இருக்கையில், ஒருமுறை அவளது சிறய தாய் சீதா தன் பிறந்த வீட்டில் யாருக்கோ கல்யாணம் என்று தன் கணவனையும் அழைத்துச் சென்றுவிட்டாள். போகும் போது வசந்தியிடம், "வீட்டைப் பார்த்துக் கொள் என்று எச்சரித்து விட்டுப் போனாள்.

அன்றிரவு காற்றும், மழையுமாக இருந்தது. அதனால் ஜன்னல் கதவுகளை எல்லாம் மூடி விட்டு வாசல் கதவைச் சாத்தி மூட வசந்தி வந்தாள். ஆனால், வீட்டுத் திண்ணையில் யாரோ படுத்திருப்பதைக் கண்டு, "யாரது?" என்று கேட்டாள்.

பதில் எதுவும் வராததால் அருகில் சென்றுப் பார்த்தாள்.

யாரோ ஒருவர் ஈரத்துணிகளுடன் படுத்து முனகிக் கொண்டிருந்தார். வசந்தி அவரைத் தட்டி எழுப்ப முயன்ற போது, அவரது உடல் அனலாய் கொதிப்பதைக் கண்டாள்.

அவரை எழுப்பி, அவர் வைத்திருந்த மூட்டையோடு வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள்.

அவள் அவரது மூட்டையிலிருந்து ஆடைகளை எடுத்து அணிவித்து விட்டுக் கட்டிலில் படுக்க வைத்தாள். கொஞ்சம் சூடான பாலைக் கொடுத்து குடிக்க வைத்த அவள், "நான் போய் வைத்தியரை அழைத்து வருகிறேன். இங்கேயே படுத்திருங்கள்," என்று கூறி விட்டுப் போனாள்.

சற்று நேரத்தில் திரும்பி வந்த அவள், "வைத்தியர் காய்ச்சலுக்கு மாத்திரை கொடுத்திருக்கிறார். இதைச் சாப்பிட்டால் உடம்பு சரியாகி விடும்," என்று கூறி மாத்திரையை சாப்பிட வைத்தாள்.

சற்று நேரத்திற்குப் பின் அவர் கொஞ்சம் குணமடைந்திருந்தார். அவர் எழுந்து உட்கார்ந்து வசந்தியைப் பார்த்து, "நீ யாரம்மா? இவ்வளவு பரிவுடன் பிறருக்கு உதவி செய்கிறாயே. நீ நன்றாக இருக்க வேண்டும்," என வாழ்த்தினார்.

"என் பெயர் வசந்தி," என்று தன்னைப் பற்றிய விவரங்களைக் கூறினாள். அதன் பின் அவர் படுத்துத் தூங்கினார்.

காலையில் அவள் எழுந்த போது, அந்த மனிதன் தன் துணிமணிகளை எல்லாம் எடுத்துக் கொண்டு புறப்படத் தயாராக இருந்தார்.

அவர் வசந்தியிடம், "நீ யார் என்று என்னிடம் சொன்னாய். ஆனால், நான் யார் என்று நீ கேட்கவில்லையே. (தொடரும்)




- 1770 - கப்டன் ஜேம்ஸ் குக் கிழக்கு அவுஸ்திரேலியாவில் தரையிறங்கி அதனை பெரிய பிரித்தானியாவுக்குச் சொந்தமாக்கி அதற்கு நியூ சவுத் வேல்ஸ் எனப் பெயரிட்டான்.
- 1821 - ஜார்விஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1831 - கறுப்பின அடிமைகளுக்குத் தலைமை தாங்கி நாட் டர்னர் கிளர்ச்சியைத் தொட ங்கினார்.
- 1842 - டாஸ்மானியாவின் தலைநகர் ஹோபார்ட் நகரம் அமைக்கப்பட்டது.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புத் தீவிரவாதிகளின் தாக்குதலில் கன்சாஸ் மாநிலத்தில் லோரன்ஸ் நகரம் அழிக்கப்பட்டது.
- 1911 - லியனார்டோ டா வின்சியின் ஓவியமான மோனா லிசா பாரிசின் லூவர் அருங் காட்சியகத்தில் இருந்து திருடப்பட்டது.
- 1920 - சேர் ஏ. கனகசபை இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவானார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின்கிராட் போர் ஆரம்பமானது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சாலமன் தீவுகள் தொடர் சமர் முடிவடைந்தது.
- 1959 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் 50 ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.
- 1963 - தெற்கு வியட்நாமின் குடியரசு இராணுவத்தினர் நாட்டின் பௌத்த தலங்களை அழித்து நூற்றுக்கணக்கானோரைக் கொன்றனர்.
- 1968 - சோவியத் தலைமையிலான வார்சா ஒப்பந்த நாடுகளின் படையினர் செக்கோஸ்லவாக்கியாவைக் கைப்பற்றின.
- 1969 - ஆஸ்திரேலியனான மைக்கல் டெனிஸ் ரொஹான் என்பவன் ஜெருசலேமின் அல் அக்சா மசூதிக்குத் தீ வைத்தான்.
- 1983 - பிலிப்பீன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் பெனீனோ அக்கீனோ மணிலாவில் கொலை செய்யப்பட்டார்.
- 1986 - கமரூனில் நியோஸ் ஆற்றில் காபனீரொட்சைட்டு வளிமம் கசிந்ததில் 1,800 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1991 - லாத்வியா சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1991 - சோவியத் தலைவர் மிக்கைல் கொர்பச்சோவ் மீதான ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி தோல்வியடைந்தது.
- 2007 - சூறாவளி டீன் மெக்சிகோவை 165 மைல் வேகத்தில் தாக்குதலை ஆரம்பித்தது.

**பிறப்புக்கள்**

- **1906 - ப. ஜீவானந்தம், பொதுவுடமைவாதி (இ. 1963)**
- 1917 - லியோனிடு ஹர்விக்ஸ், ரஷ்யப் பொருளியல் அறிஞர் (இ. 2008)
- 1936 - வில்ட் சேம்பர்லென், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர் (இ. 1999)
- 1986 - உசேன் போல்ட், ஜமேக்காவைச் சேர்ந்த தடகள ஆட்டக்காரர்

**இறப்புகள்**

- 1901 - அடோல்ஃப் ஃபிக், தொடு வில்லையைக் கண்டுபிடித்தவர் (பி. 1829
- 1940 - லியோன் ட்ரொட்ஸ்கி, ரஷ்யப் புரட்சியாளர் (பி. 1879)
- 1995 - சுப்பிரமணியன் சந்திரசேகர், இந்திய வானியல்-இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1910)
- 2006 - உஸ்தாத் பிஸ்மில்லாஹ் கான், இந்திய ஷெனாய் இசைக்கலைஞர் (பி. 1916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ப. ஜீவானந்தம்

ப. ஜீவானந்தம் நாகர்கோயிலை அடுத்த பூதப்பாண்டி என்ற ஊரில் 1907 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 ஆம் திகதி, பட்டத்தார் - உமையம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்டபெயர் சொரிமுத்து. ஐயனார் என்ற கிராம தெய்வத்தின் பெயர்தான் சொரிமுத்து.



இவர் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு தியாகங்கள் பல புரிந்த பொதுவுடைமைத் தலைவர் ஆவார். ஏறத்தாழ பத்து ஆண்டுகளை சிறையில் கழித்தவர். காந்தியவாதியாக, சுயமரியாதை இயக்க வீரராக, தமிழ்ப் பற்றாளராக, அனைத்திற்கும் மேலாக ஒரு பொதுவுடைமை இயக்கத் தலைவராக படிப்படியாக உயர்ந்தவர். தம்மை நாத்திகராக அறிவித்துக் கொண்டவர்.

கலை இலக்கிய உணர்வுள்ள ஜீவா பெரும் இலக்கியவாதியாகவும், பத்திரிக்கையாளராகவும் திகழ் ந்தவர். குடியரசு, பகுத்தறிவு, புரட்சி, ஜனசக்தி, தாமரை ஆகிய பத்திரிகை களில் கவிதைகளும் ஆய்வுக்கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

பாரதியின் பாதையைப் பின்பற்றி பாமரர்களை எழுச்சி பெறச் செய்த பாடல்கள் பலவற்றைப் பாடியவர். பொதுவுடைமை கட்சிக் கூட்டங்களில் முதல் முறையாகத் தமிழ் இலக்கியப் பெருமைகளை பேசி, தமிழ்க் கலாச்சாரத்தோடு, கட்சியை வளர்த்தவர்.

வைக்கம் சத்தியாக்கிரகம், சுசீந்திரம் தீண்டாமை இயக்கம், சுயமரியாதை இயக்கம் போன்றவைகளில் தனிப் பங்கேற்றவர். 1952ஆம் ஆண்டு வண்ணாரப்பேட்டை தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

இளம் வயதில் அவரைக் கவர்ந்தது மகாத்மா காந்தியின் கொள்கைகள். அந்த நாளில் நாடகம் நடத்திவந்த அஞ்சாநெஞ்சன் விஸ்வநாத தாஸ் என்பவரோடு ஜீவா நெருங்கிப் பழகினார். சில நாடகங்களையும் அவருக்காக எழுதிக் கொடுத்தார். நாடகம் எழுதித் தயாரிக்கும் ஆற்றலுடன் ஒன்பதாவது படிக்கும்போதே முதல் கவிதையை எழுதினார். அந்தக் கவிதை காந்தியையும், கதரையும் பற்றியது. பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது "சுகுணராஜன் அல்லது சுதந்தர வீரன்" என்ற நாவலை எழுதினார். "ஞானபாஸ்கரன்" என்ற நாடகத்தை அவரே எழுதித் தயாரித்து அரங்கேற்றினார். அந்த நாடகத்தில் நடிக்கவும் செய்தார். காந்திய வெளியீடுகளைப் படித்தார்.

ஜீவானந்தம், அரசியலில் எதிரணியில் இருந்த காமராஜரால் பெரிதும் மதிக்கப்பட்டவர். இந்திய சுதந்திரத்திற்குப் பிற்காலங்களில் உடுத்த மாற்றுடை இல்லாத வறுமை நிலையிலும் வாழ்ந்தவர்.

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2015~17.09.2015

**கூட்டுக்கிரக யோகத்தால் கூடுதல் பலன் கிட்டும் நேரம்! கௌரவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து காரியத்தை சாதித்துக் கொள்ளும் சிம்ம இராசி நேயர்களே!**



ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது ராசிநாதன் ராசியிலேயே சஞ்சரிப்பது யோகம்தான். அதுமட்டுமல்லாமல் அவரோடு தனாதிபதி, சகாய ஸ்தானாதிபதி, பஞ்சமாதிபதி ஆகியோர் இணைந்து சஞ்சரிப்பதும் யோகம்தான்.

இந்தக் கூட்டுக்கிரக யோகத்தால் நல்ல மாற்றங்கள் ஏற்படும். குறிப்பாக தன வரவு தாராளமாக வந்து சேரும். சென்ற மாதத்தில் ஏற்பட்ட கடன் சுமையை தீர்த்து வைக்கும் விதத்தில் பொருளாதார நிலை உயரும். போட்டிகளை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

## எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடி வரும்!

ஆற்றல் மிக்கவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு வீட்டுப் பிரச்சினைகள் முதல் வெளி உலகப் பிரச்சினைகள் வரை தீர்த்துக் கொள்ளும் விதத்தில் இப்பொழுது உங்கள் வாழ்க்கை அமையப் போகின்றது.

மாற்றங்கள் வருவதை ஏற்றுக் கொள்ளுங்கள். மன நிம்மதிக்கு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். மக்கட செல்வங்களால் உதிரி வருமானம் உங்களுக்கு வந்து சேரலாம்.

அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து அதன் மூலம் வரவு வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

சில மாதங்களுக்கு முன்னால் தொடங்கிய கட்டடப் பணி பாதியிலே நிற்கிறதே என்று கவலைப்பட்ட நிலை இனி மாறும்.

செயறபாடுகளில் தீவிரம் காட்டா விட்டாலும் தானாகவே அது நடந்து உங்கள் பெயருக்கு புகழ் சேர்க்கும். சனி மட்டும் வக்ர இயக்கமாக மாறி விருச்சிகத்திற்கு செல்லும்பொழுது கூடுதல் அக்கறை தேவை.

அர்த்தாஷ்டமச் சனி என்பதால் சிலர் நோய் நொடிகளுக்கு ஆளாக நேரிடும். திடீர் இடமாற்றங்களையும் சந்திக்க நேரிடும்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 21 ஆம் தகதி கன்னி ராசியில் புதன் வக்ரம் பெறப் போகிறார். மீண்டும் செப்டம்பர் 15 ஆம் தகதி சிம்மத்திற்கு வக்ரமாகச் செல்கின்றார். இந்த வக்ர இயக்கம் அவ்வளவு நல்லதல்ல. தனலாபாதிபதி வக்ரம் பெறும் பொழுது பண நெருக்கடி அதிகரிக்கும்.

வாங்கல், கொடுக்கல்களில் ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். குடும்பத்தில் குழப்பங்கள் கூடுதலாக வந்து சேரும். முன்கோபத்தைக் குறைத்துக் கொண்டால்தான் முன்னேற்றப் பாதைக்கு வழி கிடைக்கும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் ஆகஸ்ட் 24 ஆம் தகதி கடகத்திற்கு பின்னோக்கி




செல்கிறார். எனவே, வழக்குகளில் வெற்றி கிட்டும். வரவைக் காட்டிலும் செலவு கூடுதலாகும். நிரந்தரத் தொழிலாக எதை வைத்துக்கொள்ளலாம் என்று யோசிப்பீர்கள். நிகழ் காலத்தில் நடத்தும் தொழிலை மாற்றம் செய்யவும் முன்வருவீர்கள்.

**விருச்சிக சனியும், சிம்ம செவ்வாயும்!**

செப்டம்பர் 5 ஆம் தகதி முதல் விருச்சிகத்தில் சனி சஞ்சரிக்கப் போகின்றார். மீண்டும் அர்த்தாஷ்டமச் சனி வந்துவிட்டது. எனவே ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நேரமிது. அதே நேரத்தில் சிம்மத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். உறவினர் பகை மாறும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். இம்மாதம் ஞாயிறு தோறும் விநாயகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது. சதுர்த்தி விரதம் உங்கள் சங்கடங்களை தீர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் குடும்பச்சுமை கூடும். கொள்கைப் பிடிப்பை ஒருசில சமயங்களில் தளர்த்திக் கொள்ள நேரிடும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். கணவன், மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். அஷ்டமத்து கேது இருப்பதால் தடைகள் விலக சர்ப்ப சாந்தி செய்து கொள்வது நல்லது. பிள்ளைகளின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். சனிவக்ர நிவர்த்திக்குப் பின்னால் உடல் நலத்தில் அக்கறை செலுத்துவது நல்லது. மாதக் கடைசியில் இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள் ஏற்படலாம். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**சுப விரயங்கள் அதிகரிக்கும் நேரம்! முன் எச்சரிக்கையோடு நடந்து கொண்டால் முன்னேற்றம் பெறலாம் என்று சொல்லும் கன்னி இராசி நேயர்களே!**



ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே லாபாதிபதி சந்திரன் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கின்றார். அவரோடு ராகு இணைந்து சர்ப்ப தோஷத்தை உருவாக்குகிறார்.

பாம்பு ஊர்ந்து செல்வது போல ஏற்றமும், இறக்கமும் இந்த மாதம் வந்துகொண்டே இருக்கும். பணம் வந்த மறுநிமிடமே செலவாகி விட்டாலும், வரவு உடனுக்குடன் வந்து கொண்டே இருக்கும். எனவே செலவைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை. செயறபாடுகளில் வெற்றி கிடைத்துக் கொண்டே இருக்கும்.

அயல்நாட்டு யோகம் முதல்

## தடைகள் அகன்று தக்க பலன் கிடைக்கும் நேரம்!

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு வரை இயல்பாகவே உங்களுக்கு வந்துகொண்டிருக்கும். 2 இல் இருக்கும் சனி விரைவில் மாறப் போகிறார். வக்ர இயக்கத்தில் அவர் பின்னோக்கிச் செல்லும் பொழுது அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும். பக்கபலமாக இருப்பவர்களில் பலர் உங்களைவிட்டு விலக நேரிட்டாலும் புதியவர்கள் வந்திணைந்து பொருளாதாரத்தை விருத்தி செய்து கொடுப்பர்.

விரய ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் முற்கையிடுகின்றன. அவை சூரியன், புதன், சுக்ரன், [illegible] ஆகியவை ஆகும். விரயாதிபதி [illegible] ஸ்தானத்தில் இருப்பதோடு ராசிநாதனும் இணைந்திருப்பதால் வீண் விரயமாகாமல் இருக்க சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. விவாகப் பேச்சுக்களைத் தொடங்கலாம். வீடு வாங்கும் முயற்சியைக் கையாளலாம். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டலாம். தங்கம், வெள்ளியில் முதலீடு செய்து தன விரயத்தை சேமிப்பாக்கலாம். மங்கல நிகழ்ச்சி மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். உங்கள் பெற்றோர்களின் மணி விழாக்கள், மண விழாக்களை நடத்த வாய்ப்புகள் கைகூடிவரும்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 21 ஆம் தகதி கன்னி ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். மீண்டும் செப்டம்பர் 15 ஆம் தகதி சிம்மத்திற்கு வக்ரமாகச் செல்கிறார். [illegible] புதன் வக்ரம் பெறுவது யோகம்தான் என்றாலும், ஆரோக்கியப் பாதிப்புகள் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் உயரும். உத்தியோகத்தில் எதிர்பாராத மாற்றங்கள் வந்து சேரும். ஊதிய உயர்வு நீண்ட நாட்களுக்குப் பிறகு கிடைத்தது என்று ஒரு சிலர் சொல்லி மகிழ்வர். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனச்சங்கடங்கள் அகலும். பழைய பாக்கிகள் வசூலாகும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 24 ஆம் தகதி கடகத்திற்கு சுக்ரன் வக்ரமாகச் செல்கிறார்.




இதன் விளைவாக தொழிலில் எதிர்பார்த்ததைக்காட்டிலும் கூடுதலாக லாபம் கிடைக்கும். எந்தக் காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அன்னிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும்.

**விருச்சிக சனியும், சிம்ம செவ்வாயும்!**

செப்டம்பர் 5 ஆம் தகதி விருச்சிகத்தில் சனி சஞ்சரிக்கப் போகின்றார். செப்டம்பர் 17 ஆம் தகதி சிம்மத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இந்த இரண்டு பெயர்ச்சியுமே உங்களுக்கு நன்மை தரும் பெயர்ச்சிகள்தான். விபரீத ராஜ யோகம் அடிப்படையில் செயறபடப் போகின்றது. திட்டமிடாது செய்யும் சில காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீர் திருப்பங்கள் ஏற்படும். உற்றார், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். விநாயகர் சதுர்த்தி அன்று விநாயகப் பெருமானை வழிபட்டு வியக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் விரயங்கள் கூடுதலாக இருக்கும். விழிப்புணர்ச்சி தேவை. பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி ஒரு தொகையை செலவிடுவீர்கள். பெற்றோர்களிடமிருந்த கருத்து வேறுபாடு அகலும். சனி வக்ர நிவர்த்திக்குப் பிறகு வரவு ஓரளவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான சூழ்நிலை உருவாகும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். அன்னியோன்யம் அதிகரிக்கும். சொத்துக்கள் உங்கள் பெயரிலேயே வாங்கும் அமைப்பு உண்டு. துர்க்கை வழிபாடு துயரங்களை தீர்க்கும். சர்ப்ப சாந்தி செய்வது சந்தோஷங்களை நிலைக்க வைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# சூழலியல் மாற்றத்தில் அனர்த்தங்களின் பங்கு

இந்தியாவில் அண்மைக் காலமாக (மே.2015) ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களில் அதிகரித்த வெயிலின் தாக்கத்தால் ஒரே நாளில் 651 பேர் உயிரிழந்துள்ள கொடூர சம்பவம் இடம் பெற்றுள்ளது. அத்துடன் அனல்



காற்றும் அடிப்பதால் வயதானவர்கள், சிறியவர்கள் சுருண்டு விழுந்து இறப்பதுடன் ஏனைய உயிரிகள், இயற்கை அம்சங்கள் பாதிப்பின் விளிம்பில் தத்தளிக்கின்றன. மனிதருக்கே இப்படி என்றால் ஏனைய உயிரினங்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? இந்நிலை நாளுக்கு நாள் இந்த எண்ணிக்கையில் இருந்து 700 ஆக அதிகரித்து வருவதாக பிந்திய செய்தி வட்டாரங்கள் கருத்து வெளியிடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. பருவநிலை மாற்றமே காரணம் என்றும் குறிப்பிடப்படுகிறது. இலங்கையில் இது மிகக் குறைவான அளவு. எனினும் சூழல் தாக்கம் என்னவோ எமக்கும் உண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது. உலக சுகாதார அமைப்பு 2007 ஆம் ஆண்டு வெளியிட்ட ஆய்வறிக்கையில், மனிதனால் உருவாக்கப்பட்டுவரும் காலநிலை மாற்றம் 2020 ஆம் ஆண்டு முதல் உலகெங்கும் 3 இலட்சம் மக்கள் ஆண்டு தோறும் பலியாகக் காரணமாக இருக்கும். இருந்தும் இந்தக் கணிப்புக்கு முன்கூட்டியே 2000 ஆம் ஆண்டு முதல் உலகெங்கும் காலநிலை மாற்றத்தால் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் அதிகமானோர் உயிழந்துள்ளமையும் சற்றுச் சூழலில் பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் அழிவடைந்து வருகின்றமையும் கண்கூடு. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் திடீர் மழை, புயல், வெள்ளம் மற்றும் கடல்மட்ட உயர்வால் ஏற்படும் கடலரிப்பு என பன்முக தாக்கங்களை தெற்காசிய, தென் கிழக்காசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க, வளரும் நாடுகள் பெருமளவு சந்தித்துவருகின்றன. இதிலும் குறிப்பாக மலைவாழ் மக்கள், கடலோர மக்கள், நதிக்கரையோர மக்கள் மற்றும் நிலமற்ற உழைக்கும் மக்கள் என விளிம்புநிலை மக்கள்தான் அதிக அளவில் அழிவடைவதுடன் ஒட்டுமொத்த சுற்றாடல் தொகுதியே பாதிப்பை ஏறகின்றது. அத்துடன் இன்றைய சூழ்நிலையில் புவியின் வெப்ப நிலையானது அண்ணளவாக 0.8 பாகை (செல்சியஸ்) வரை அதிகரித்துள்ளதாகத் கணிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக உலகின் மிகப் பெரிய தீவான கிரீன்லாந்தின் பனிப் பாறைகள், அண்டார்க்காவின் பனிப்பாறைகள் என்பன வேகமாக உருகிவருகிறது. 1993ஆம் ஆண்டிலிருந்து வருடத்திற்கு 3 மில்லி மீற்றர் அளவாக கடல்மட்டம் உயரத் தொடங்கியிருக்கிறது. இவ்வீதம் ஆண்டுக்கு 7 செ.மீ. இலிருந்து 13 செ.மீற்றர்வரை அதிகரித்து வருவதாக விஸ்கான்சின் பல்கலைக்கழகம் ஆய்வு மூலம் தெரியப்படுத்தியுள்ளது. கிரீன்லாந்தின் பனிப்பாறைகள் மட்டும் உருகினாலே ஒட்டுமொத்த அளவில் கடலின் நீர்மட்டம் 27 மீற்றருக்கு உயர்ந்துவிடும் என்றும் கடல் மட்டமானது குறைந்தபட்சம் ஒரு மீற்றர் அல்லது இரண்டு மீற்றர் உயர நேர்ந்தால், ஆசிய நாடுகளான வியட்நாம், வங்காள தேசம் மற்றும் பிற தீவுகளில் வாழும் மக்கள் கடும் அழிவுகளைச் சந்திப்பார்கள் எனவும் இதனால் ஒட்டு மொத்த சூழல் சமநிலை குழப்பமடையும் என்றும் குறிப்பிடப்படுகின்றது. பொதுவில் உலக மக்கள் தொகையில் அறுபது கோடி மக்கள் தீவுகளிலேயே வாழ்கின்றனர். கடல் நீர் மட்ட உயரவின் விளைவுகளைச் சிறுதீவு வாசிகளே முதலில் எதிர்கொள்கின்றனர். பசுபிக் கடலில் மூழ்கி வரும் தீவுகளை தற்போது சர்வதேச சமூகம் கவனிக்கத் தொடங்கியுள்ளது. புலம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் ஆய்வு முடிவானது, புவி வெப்பமாதல் சிக்கலால் நூறு கோடி மக்கள் இந்நூற்றாண்டின் மத்தியில் இடம் பெயர்வார்கள் என்று அவதானிகிறது. இதைக் கண்கூடாக நாம் இன்று பார்த்துவருகிறோம். உதாரணமாக கடல் நீர்மட்ட உயர்வின் விளைவால், 2008 ஆம் ஆண்டில் கார்டீட் தீவுவாசிகளை அந்நாட்டு அரசு இடம் பெயரச்செய்ததை குறிப்பிடலாம். இதுவும் சூழல் ஒழுங்கில் ஏற்படும் பாரிய மாற்றம் என்றுதான் கூறவேண்டும். மன்னார் வளைகுடாவானது தனித்துவமிக்க சூழல் மண்டலங்களைக் கொண்ட ஓர் அற்புதமான உயிர்ச்சூழல் அமைவாகும். பவளப் பாறைகள், கடற்புல் வெளிகள், வண்ண மீனினங்கள், மெல்லுடலிகள், நண்டுகள், கடற் பாசிகள் எனப் பல அரிய உயிரினங்களின் புகலிடமாக மன்னார் வளைகுடா திகழ்கிறது. இக்கடல்சார் உயிர்ச் சூழலில் 22 தீவுகள் உள்ளன. பத்தாயிரத்து ஐந்நூறு சதுர கி.மீ பரப்பளவில் பரந்து விரிந்திருக்கும் இவ்வுயிர்ச் சூழலில் இதுவரை மூவாயிரத்து அறுநூறு உயிரினங்கள் அடையாளங் காணப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் ஆச்சரியமளிக்கும் வகையில் பல்வேறுபட்ட தாவர விலங்கினங்களைக் கொண்டிருக்கிறது. இங்கு மட்டுமே நூற்றி ஐம்பது வகைக்கும் மேற்பட்ட கடற்பாசிகள் உள்ளன. மேலும் இங்குள்ள பவளப்பாறைகளானது கடல்சார் உயிரினங்களின் உணவுச்சங்கிலியில் முக்கிய பங்களிப்புச் செய்கிறது. மேலும் இவை ஆழிப்பேரலை போன்ற இயற்கைப் பேரிடரைத் தடுக்கும் வல்லமை கொண்டவை. செறிவுமிக்க கடல்சார் உயிரினங்களைக்கொண்ட இவ்வுயிர்ச் சூழலை 1980 ஆம் ஆண்டில், பாதுகாக்கப்பட்ட கடல்சார் உயிரின தேசியப் பூங்காவாக இருந்தது. எனினும் வேகமாக அதிகரித்து வரும் மனிதர்களின் உள்ளீட்டால், குறிப்பாக ஏற்றுமதி சார்ந்த கள்ள வர்த்தக வணிகத்தால் மோசமான கடல்வள அழிவை இப்பகுதி எதிர் கொண்டு வருவதோடு புவிவெப்பமடைதல் எனும் பெரும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகி வருகிறது.

அதேபோல் ஏழை நாடுகளின் இயற்கை வளங்களைச் சுரண்டி வளரும் நர்டுகளுக்கு ஏற்றுமதி செய்வது பலமடங்கு அதிகரித்து வருகின்றது. குறிப்பாக இந்தோனேசியா, பபுவா நியூகினியா, பிரேசில் போன்ற நாடுகளின் பசுமைமாறாக் காடுகளிலிருந்து மரம் வெட்டியெடுத்து மேலைநாடுகளுக்கு அனுப்பும் பணி மிக வேகமாக நடைபெறுகிறது. இதனால் சுற்றுச் சூழலுக்கு என்ன நடக்கும் என்பதை சற்றும் யோசிக்காமல் பணத்திற்காக வியாபாரம் நடை பெறுகின்றது. காடுகள் அழிக்கப் படுவதே எமது சுற்றுச்சூழலின் இயல்பு நிலையில் மாற்றம் உண்டு பண்ணுவதுடன் பாரிய இயற்கை அனர்த்தத்திற்கு வழிவகுக்கின்றது.



இதனால் பாதிக்கப்படுவது மனிதராகிய நாமும் எமது சூழலுமே என்பதை மறந்துவிடுகின்றோம். வரட்சி காரணமாக எழும் குடிநீர் பற்றாக்குறையால் வடக்கு ஆசியாவில் 50 கோடி மக்களும் சீனாவில் 25 கோடி மக்களும் பாதிக்கப்படுவதுடன் பனிப்பாளம் உருகி ஆற்றோட்டம் குறைவதால் இந்திய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். 2020 ஆம் ஆண்டில் ஆசியாவில் 12 கோடி மக்கள் முதலாக 120 கோடி மக்கள் வரை சிக்கல்களுக்கு ஆளாகின்றனர். ஆபிரிக்க நாடுகளில் 7 கோடியே 50 இலட்சம் மக்கள் வரையிலும், தென் அமெரிக்க நாடுகளில் 1 கோடியே 20 இலட்சம் முதல் 8 கோடியே 10 இலட்சம் வரையான மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என தட்ப வெப்ப மாற்றத்தைத் துல்லியமாக ஆய்ந்தறியும் அரசுகளுக்கு இடையிலான குழு (IPCC) தெரிவித்துள்ளது. இதனால் மனிதர்கள் மட்டுமா உயிருள்ள அனைத்து ஜீவராசிகளும் அழிக்கப்படும் நிலையிலுள்ளனர். அதேபோல் பயிர்களின் வளர்ச்சிப் பருவம் சுருங்கும். இதனால் 2020 ஆம் ஆண்டளவில் ஆபிரிக்க நாடுகளில் 50 வீதமளவில் விளைச்சல் குறையும். அதேபோல் மத்திய ஆசியா மற்றும் தெற்கு ஆசிய நாடுகளில் 2050 ஆம் ஆண்டளவில் 50 சதவீதம் விளைச்சல் குறையுமென எதிர் பார்க்கப்படுகின்றது. ஏன் யாழ்ப்பாணத்தில் கூட 2013/2014 பகுதியில் மழைவீழ்ச்சியின்மையால் ஏற்பட்ட வரட்சியால் 5 ஆயிரத்து 777 ha நெல்விளை நிலங்கள் அழிவடைந்தன. இதே நிலை குருநாகல், அம்பாந்தோட்டை, கிளிநொச்சி போன்ற நெல்விளையும் பகுதிகளில் நிலவுகின்றது. அதேபோல் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட அழிப பேரலையில் கடலோரப் பகுதியில் அறுவடைக்குக் காத்திருந்த நெற்பயிர் அழிவடைந்தது. பல பகுதிகளில் ஆழிப்பேரலையால் கடல்நீர் உட்புகுந்து நிலத்தடி நீர் ஒவ்வாததாக மாறியுள்ளது. மேலும் 2010 ஆம் ஆண்டில் இந்தியாவில் இரண்டு இலட்சம் ஏக்கர் பரப்பில் அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழுகிப்போயின. யாழ்ப்பாணத்தில் கூட 2007, 2008, 2012 காலங்களில் மழை அழிவு ஏற்பட்டதுடன் பெரும் எண்ணிக்கையான பயிரிழப்பையும் உண்டாக்கிவிட்டது. முறையே 504 ha, 969 ha, 3390 ha என அழிவைச் சந்தித்தது. ஏன் 6 வருடங்களின் பின் மேற்காவுகையூடான இடை அயனப் பருவ மழையால் கூட யாழ்ப்பாணத்தில் விவசாயச் செய்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. அதே போல் தற்போது உலகையே ஆட்டிப்படைக்கும் நிறைடுக்கத்தால் சூழல் தலைகீழாக மாறுகின்றது. ஜப்பானில் 2011 இல் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 800 பேர் கொல்லப்பட்டனர். அதேபோல் இந்த ஆண்டு ஏப்ரலில் 25 இல் நேபாளத்தில் ருத்ர தாண்டவம் ஆடிய நில நடுக் கத்தால் 8000-10000 ஆயிரம் பேர் மண்ணோடு மண்ணாக மாய்ந்ததுடன் 80,00000 பேர் பாதிக்கப்பட்டது மட்டுமல்லாமல் வீடுகள், கட்டடங்கள் அழிந்தும் உள்ளன.

தொடரும்

**வி.காயத்திரி**

## வாரத்திற்கு ஒரு புதிர்! 141

உலகின் மிகப்பெரிய பவளப் பாறை தொகுதி (CORAL REEF) காணப்படும் இடம் எது?

**புதிர் 141 இற்கான விடைகளை 31.08.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

கு.குணாளன்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர் (தகுதிகாண்)
மீன்பிடி விஞ்ஞானத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 140 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கே. இராஜகோபால,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை

**புதிர் 140 க்கான கேள்வியும் விடையும்:**

ஒளிச் செறிவை அளக்கும் சர்வதேச அலகு என்ன?


Candela (cd)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 141

சரியான விடை:-................................
முழுப்பெயர்:-................................
முகவரி:-................................
தொ.பே. இல:................................
கையொப்பம்:................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சிக்கு மகிந்த தரப்பு கொழும்பில் கடும் எதிர்ப்பு



(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவாகிய குழுவினர் நேற்று கொழும்பில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர் எனவும் இதில் நல்லாட்சிக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்ததாகவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

இதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடாக நாடாளுமன்றத்திற்கு தெரிவாகிய உறுப்பினர்களும் கலந்து கொண்டுள்ளார்கள் என அவர் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம் தொடர்பில் அங்கு கலந்துரையாடப்பட்டதாகவும், கலந்துரையாடலில் இணைந்து கொண்டு உறுப்பினர்களிடம் இருந்து தேசிய அரசாங்கத்திற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இக்கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் பொது செயலாளர் சுசில் பிரேமஜயந்த கலந்து கொள்ளவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சு.க.மத்திய செயற்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராகச்செயற்படும் அனைவரும் நீக்கப்படுவர்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்படும் அனைவரையும் கட்சியை விட்டு நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொருளாளர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது தேசிய அரசாங்கம் அமைப்பதற்காக தற்போதைய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் அதிகாரத்தினை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்திற்கு மகிந்த தரப்பு - மைத்திரி தரப்பு என இரு தரப்பில் இருந்தும் வந்திருந்தார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கலைக்கண்காட்சி

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் பெண்கள் படைப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட "செபலிய ரூ ரட" எனும் கலைக் கண்காட்சி நிகழ்வு கொழும்பு தேசிய கலைக் கல்லூரி மண்டபத்தில் இம் மாதம் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இரு நாட்களைக் கொண்ட இக்கலைக் கண்காட்சி நிகழ்வு முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பொதுமக்கள் பார்வைக்கு விடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் வீராங்கனைகளிடத்தில் மறைந்துள்ள திறமைகளை வெளிக் கொண்டுவரும் நோக்கில் இக்கண்காட்சி நிகழ்வு நடைபெறவுள்ளது.

அத்துடன், இதன் ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா கலந்து சிறப்பிக்கவுள்ளதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 60 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 80 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 200 | 140 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 50 | 70 | 80 | 90 |
| கரட் | 150 | 100 | 100 | 200 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 | 40 |
| புடோல் | 30 | 40 | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 120 | 100 | 150 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 150 | 100 | 60 | 80 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 50 | 30 | 50 | 60 | 40 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 200 | 150 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 40 | 40 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 50 | 60 | 70 | 140 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-60 | 40 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 140 | 200 | 100 | — | 120 |
| வெங்காயப்பூ | 200 | 100 | 180 | 200 | 160 |
| முள்ளங்கி | 30 | 40 | 70 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 |


## facebook (f) .:.பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 465




சங்கர் டினோ




ஹாட் பெயின்





தளபதி விஜய் ரசிகன்





அன் விதுஷ்




அம்பி டைகர்




கரிகரன் கரி




நீங்கள் பார்த்த .:.பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் விபரங்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 59 பேரைப் பலி கொண்ட தீ விபத்து

# தியேட்டர் உரிமையாளருக்கு 60 கோடி ரூபா அபராதம்

(புதுடில்லி)

**இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் 59 பேரின் உயிரிழப்புக்குக் காரணமான தியேட்டர் தீ விபத்து வழக்கில் அதன் உரிமையாளர்களுக்கு 60 கோடி ரூபா அபராதம் விதித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**



இந்தத் தீர்ப்பின் மூலம் தியேட்டர் உரிமையாளர்களும், தொழிலதிபர்களுமான சுஷில் அன்சால், கோபால அன்சால் ஆகியோர் சிறைத் தண்டனையில் இருந்து தப்பியுள்ளனர்.

1993-ம் ஆண்டு டில்லியில் உபகார் தியேட்டரில் ஏற்பட்ட தீ விபத்தில் 59 பேர் உயிரிழந்தனர்.

100-க்கும் அதிகமானோர் படுகாய மடைந்தனர்.

தியேட்டர் நிர்வாகத்தின் கவனக் குறைவால் தீ ஏற்பட்டது என்று குற்றச்சாட்டு எழுந்தது.

இதில் கைது செய்யப்பட்ட தியேடர் உரிமையாளர்கள் சுஷில் அன்சால், கோபால் அன்சால் ஆகியோருக்கு தலா ஓராண்டு சிறைத் தண்டனையை டில்லி உயர் நீதிமன்றம் விதித்தது.


இதனை எதிர்த்து அவர் கள் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதில் இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு குற்றத்தை உறுதி செய்தது.

எனினும் நீதிபதிகள் இருவரும் தண்டனை வழங்குவதில் வெவ்வேறு கருத்துகளை தெரிவித்ததால், 3 பேர் அடங்கிய அமர்வுக்கு விசாரணை மாற்றப்பட்டது.

இப் போது இருவருக்கும் தலா 30 கோடி ரூபா அபராதம் விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இத்தொகையை அவரகள் 3 மாதத்துக்குள் டில்லி அரசிடம் செலுத்த வேண்டும். அத்துடன் அத்தொகை நலத் திட்டங்களுக்கு செலவிடப்பட வேண் டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (3-7)



**இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மனைவியின் இறுதிச் சடங்கில் பிரதமர் நரேந்திர மோடி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்**

## இறுதிச்சடங்கை முடித்தவுடன் பணியில் அமர்ந்தார் ஜனாதிபதி

(புதுடெல்லி)

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மனைவி சுவ்ரா முகர்ஜி நேற்று முன்தினம் காலமானார்.

நேற்று அவரது உடல், பிரணாப் முகர்ஜியின் மகன் அபிஜித் முகர்ஜியின் டில்லி வீட்டில் இருந்து லோதி ரோடு மின் மயானத்துக்கு கொண்டு செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.



இறுதிச்சடங்குகளில் பங்கேற்று திரும்பிய சற்று நேரத்தில், பிரணாப் முகர்ஜி, ஜனாதிபதி மாளிகையில் உள்ள தனது அலுவலகத்தில் அமர்ந்து பணிகளை ஆரம்பித்தார்.

இன்று ஜெய்ப்பூரில் நடைபெற உள்ள இந்திய-பசிபிக் தீவு ஒத்துழைப்பு கூட்டமைப்பின் உச்சி மாநாடு பற்றி மத்திய வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் அவருக்கு விளக்கம் அளித்தனர்.

அம்மாநாட்டில் பங்கேற்க செல்லும பல்வேறு நாடுகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி மாளிகையில் பாரம்பரிய வரவேற்பு அளிக்கப் படுகிறது. அதன்பின்னர் அவர்கள் ஜனாதிபதியை சந்தித்து பேசவுள்ளார்.

முன்னதாக, மறைந்த முன்னாள் ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவின் பிறந்தநாளையொட்டி, ஜனாதிபதி மாளிகையில் அவரது படத் துக்கு பிரணாப் முகர்ஜி மலர் அஞ்சலி செலுத்தினார்.

மேலும், தன்னுடைய மனைவி மறைவுக்கு இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்துக் கொணட்தாக ஜனாதிபதி மாளிகை செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார். (3-7)


## தூங்கியவர்கள் மீது ஏறியது லொறி 5 பேர் பலி !

(இந்தியாவின் சண்டீகரில் நடைபாதையில் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது நேற்று முன்தினம் இரவு ரொறி ஏறியதில் 5 தொழிலாளர்கள் பலியாகினர்.

இது குறித்து சண்டீகர் காவல் துறை துணை கண்காணிப்பாளர் குரிக்பால் சிங் சித்து கூறும் போது சண்டீகரின் நகர்ப் பகுதியில் நடைபாதையில் தூங்கிக்கொண்டிருந்தவர்கள் மீது லொறி ஏறியது. இதில் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த 4 பேரும் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் பலியாகினர் மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர் என்றார். (3-7)

## காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் தாக்குதல்

(ஜம்மு)



காஷ்மீரில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்திய இரா ணுவ நிலைகள் மற்றும் கிராம பகுதிகளை குறிவைத்து தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதற்கு இந்திய இராணுவத்தினரும் தக்க பதிலடி கொடுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவில் பாகிஸ்தான் இராணுவத்தினர் மீண்டும் அத்துமீறி தாக்குதல் நடத்தினர்.

பூஞ்ச் மற்றும் ஜம்மு மாவட்டத்தில் உள்ள சர்வதேச எல்லை பகுதியான ஆர்.எஸ். புரா, அரினா, ஹமீர்பூர், பாலகோட் ஆகிய பகுதிகளில் உள்ள இராணுவநிலைகள் மற்றும் மக்கள் குடியிருப்பு பகுதி களை குறிவைத்து 5 முறை தாக் குதல் நடத்தினர்.

சிறிய ரக ஆயுதங்கள் மற்றும் பீரங்கி குண்டுகளை கொண்டு நடத்திய தாக்குதலை தொடர்ந்து இந்திய இராணுவ தரப்பில் இருந்தும் எதிர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் இந்திய எல்லை பகுதியைச் சேர்ந்த கிராமவாசி ஒருவர் காயம் அடைந்தார்.

பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்திய எல்லைகளை குறிவைத்து கடந்த 20 நாட்களில் 47 முறை தாக்குதல் நடத்தியிருப்பதாகவும், இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து தற்போது வரை 420 முறை தாக்குதல் நடத்தியிருப்பதாகவும் இராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (3-7)

## மசோதாவை வாபஸ் பெறக்கோரி மனித சங்கிலிப் பேராட்டம்

(அகர்தலா)

நிலம் கையகப்படுத்துதல் மசோதாவை வாபஸ் பெற வேண்டும் என்பன உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி திரிபுராவில் ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் 323 கிலோ மீட்டர் தொலைவுக்கு மனித சங்கிலி போராட்டம் நடத்தியது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.



கிட்டத்தட்ட மாநிலத்திலுள்ள அனைதது பகுதிகளிலும் நேற்று முன்தினம் மனித சங்கிலி போராட்டம் நடத்தப்பட்டது.


மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பிஜன் தார், மத்தியக்குழு உறுப்பினர் கவுதம் தாஸ், முன்னாள் எம்.பி. நாராயண் கர் மற்றும் மாநில பொதுப் பணித் துறை மந்திரி பாதல் சவுத்ரி உள்ளிட்ட 2 இலட்சத்து 50 ஆயிரம பேர் கைகோர்த்து நின்றனர்.

கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும், ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் வீதம் தலா 35 கிலோ அரிசி வழங்க வேண்டும், வடகிழக்கு மாநிலங்களுக்கு சிறப்பு நிதி ஒதுக்க வேண்டும் என்று போராட்டத்தில் பங்கேற்ற மாநில தலைவர் பிஜன் தார் கோரிக்கை விடுத்துள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசு அமைக்க நாங்கள் தயாரில்லை!

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

**தனது கட்சி தேசிய அரசாங்கத்தை ஏற்றுக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் வாலாக செயற்படுவதன் மூலம் பெரிய காட்டிக் கொடுப்பை மேற்கொள்வதற்கு தயாராக இல்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

தேசிய அரசாங்கம் ஒன்றை கட்டியெழுப்புவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திர கட்சி தலைவர்களுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இரகசிய பேச்சுவார்த்தை தொடர்பில் தனது நிலைப்பாட்டை தனது இணையத்தளம் ஊடாக வெளிப்படுத்தியிருந்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிட்டிருந்ததாவது,

பொதுத் தேர்தலின் போது ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட இடையூறுகள் மேற்கொள்ளாதிருந்திருந்தால் ஐக்கிய தேசிய கட்சியை விடவும் முன்னணி அதிக ஆசனங்களை பெற்றிருக்கும்.

இதேவேளை கண்டி, கொழும்பு, கம்பஹா மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களின் தேர்தல் முடிவுகளில் சில இயற்கைக்கு மாறாக காணப்பட்டதாகவும், அதனை ஆய்வு செய்து வருவதாகவும் குறிப் பிட்ட விமல் முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததனை போன்ற முடிவுகள் சில மாவட்டங்களில் காண முடிந்ததாகவும் தெரிவித்தார்.

எப்படியிருப்பினும் 95 ஆசனங்களுடன் வலுவான எதிர்க்கட்சியாக செயற்படுவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் வாலாக செயற்படுவதன் மூலம் பெரிய காட்டிக் கொடுப்பை மேறகொள்வதற்கு தயாராக இல்லை. பல வருட காலங்களின் பின்னர் எதிர்க்கட்சி இவ்வளவு வலுவான நிலையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


அரசாங்கம் நல்லதொன்றை செய்யுமாயின் அதற்கு ஆதரவு வழங்கும் எதிர்க்கட்சியாக செயற்படுவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச உட்பட தேசிய சுதந்திர முன்னணி பிரதிநிதிகள் 6 பேர் இம்முறை முன்னணியின் கீழ் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

முன்னணிக்காக கொழும்பு மாவட்டத்தில் அதிக வாக்குகளை பெற்றுக் கொண்டவர் விமல் வீரவன்ச என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அரசு உண்மையுடன் செயற்பட வேண்டும்

## கொழும்பு பேராயர் வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கையின் வடகிழக்கு பகுதிகளிலுள்ள மக்களைப் பாதித்து வரும் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அரசு உண்மையுடனும் பொறுமையுடனும் செயற்பட வேண்டும் என இலங்கை திருச்சபையின் கொழும்பு பேராயர் அதி வணக்கத்திற்குரிய டிலோராஜ் கனகசபை கோரிக்கை விடுத்துள்ளார்.

இம்முறை பொதுத்தேர்தலின் போது மக்கள் அமைதியான முறையில் வாக்களிப்பதற்கு ஏற்ற வன்முறையற்ற சூழல் நிலவியதாக இலங்கை திருச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கை திருச்சபையின் கொழும்பு பேராயர் அதி வணக்கத்திற்குரிய டிலோராஜ் கனகசபை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றில் முதன்முறையாக அமைதியான தேர்தல் அனுபவத்தை உணர முடிந்ததாக அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல தசாப்தங்களாக நாட்டில் வியாபித்துவரும் பகைமையை ஏற்படுத்தும் உரை, வன்முறை, கோபம், கொலை, பழிவாங்கும் உணர்வு போன்றவற்றை தேசத்தின் பிரஜையாகிய தானும் அனுபவித்துள்ளதாக இலங்கை திருச்சபையின் கொழும்புப் பேராயர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்தத் தேர்தலில் மக்கள் தமது சிந்தனையில் உதித்த முடிவினை வாக்குகளின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பிரஜைகள் சத்தமாகவும் தெளிவாகவும் வெளியிட்ட ஜனநாயகக் குரல்களை புதிய அரசாங்கம் தெளிவாக செவிமடுக்க வேண்டும் எனவும் பேராயர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையர் என்ற பொது அடையாளத்தை நோக்கி பயணப்பட வேண்டும் எனவும் கொழும்பு பேராயர் டிலோராஜ் கனகசபை கூறியுள்ளார்.

இலங்கையில் வாழும் அனைவருக்கும் தேசம் உரித்தானது எனவும், மாறாக ஓர் இனத்திற்கோ, மதத்திற்கோ, வகுப்பிற்கோ, சாதியினருக்கோ நாடு உரித்துடையது அல்லவெனவும் அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அரசாங்கமும் பாராளுமன்றமும் ஜனாதிபதியுடன் இணைந்து தேசத்தில் நிலவும் அனைத்து தடைகளையும் களைந்து சிறந்ததோர் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் பேராயர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கரைவலை மீனவர்களுக்கு பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய கடலட்டை பிடிப்பால் கரைவலை மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் பெரிதும் பாதிப்படைவதாக வடமராட்சி கிழக்கு மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான செயற்பாடு தென்னிலங்கை மீனவர்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு சாலை கடற்பரப்பில் இருந்து வந்த தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர்கள், தங்களுக்கு வழங்கப்பட்ட எல்லையை மீறி வடமராட்சி கிழக்கு கடற்பரப்பிற்குள் நுழைந்து கடல் அட்டை பிடிப்பில் ஈடுபட்டு வருவதாக வடமராட்சி கிழக்கு மீனவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-5-64)

# இன்று ஒரு தகவல்

## இறை நிலைக்கான இரண்டாவது படி!

பகவத்கீதையின் பதினாறாவது அத்தியாயம் தெய்வ குணங்கள் எவை? அசுர குணங்கள் எவை? என்பவற்றைப் பட்டியல் போடுகிறது. அச்சமின்மை என்கிற பயமற்ற தன்மையே தலைமையான தெய்வீக சம்பத்து. பொதுவாகக் கோழைகள்தான் மனித குலத்திற்கு அதிக கெடுதல் செய்திருக்கிறார்கள். வீர, தீரம் மிக்கவர்கள் தங்கள் தியாகங்களால் உனை ரட்சித்து தெய்வ மக்களாக வணங்கப்படுகிறார்கள்.

***மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற*** என்கிறது வள்ளுவம்

தூய மனமே சிறந்த எண்ணீங்களின் தாய்வீடு. செயலைக் கொண்டு ஒருவரை மதிப்பிட முடியாது. செயலுக்குப் பின்னால் உள்ள மனநிலையே மதிக்கத்தக்கது. கண்ணப்ப நாயனார் சிவபெருமானைச் செருப்புக்காலால் மிதித்திருக்கிறார். செயல் குற்றமானது. ஆனால் ஏன் மிதித்தார். தன் கண்ணை எடுத்து குருதி வடியும் இறைவன் கண்ணுக்கு பதிலாகப் பொருத்த நினைக்கிறார். தம் கண்ணை எடுத்துவிட்டால் பார்வை தெரியாது. சிவபெருமானின் முகம் எங்கே? கண் எங்கே? என்று எப்படித் தேடமுடியும். எனவே முகத்தில் செருப்புக்காலால் மிதித்து கண்வைக்கவேண்டிய இடத்தில் காலை அடையாளமாக வைத்துக்கொண்டு தம் கண்ணைத் தோண்டினார். செருப்புக்காலால் மிதித்தல் என்ற செயலுக்குப் பின்னால் உள்ள தூயமனம், தியாக மனம் அவரை வணங்கத் தக்கவர் வரிசையில் நிறுத்தியது.

மன்மதன் சிவபெருமான்மீது ஐந்து மலர் அம்புகளை வீசினான். மலர்களைத் தூவியவனை மதிக்கவேண்டும். சிவபெருமான் மதித்து வரம் கொடுத்தாரா? எரித்தேவிட்டார். காரணம் மரியாதை நிமிர்த்தம் மன்மதன் மலர் தூவவில்லை. சிவபெருமானுக்கு காமத்தை உண்டுபண்ணவேண்டும் என்ற கீழான எண்ணத்தோடு மலரிட்டான். தூய்மையற்ற மனம் கொண்ட மன்மதன் செயல் தண்டிக்கப்பட்டது.

நீங்கள் அசுரரா? தேவரா? என்பது உங்கள் செயலின் பின்புலத்தில் உள்ள மனத்தூய்மையாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மிகப்புகழ்பெற்ற பேச்சாளர் ஒருவருக்கு வேடிக்கையான குணம் உண்டு. தகுதியற்ற, திறமையற்ற உளறுவாயர்களைப் பற்றி மேடையில் அதிகமாகப் புகழ்ந்து பேசுவார். சில மூடர்கள் அவற்றை உண்மை என்று நம்பிக் கொஞ்சம் தலைக்கனம் அடைவார்கள். நான் அப்படிப் பொய்யாக யாரையும் புகழ்வது இல்லை. என்மீது அந்த உளறுவாயர்களுக்குக் கோபம் வரும். அவ்வளவு பெரிய பேச்சாளரே எங்களைப் புகழும்போது நீ புகழக்கூடாதா? என்று வெட்கமில்லாமல் கேட்பார்கள்.

இப்படி அளவுக்கதிகமாக உளறுவாயர்களை ஏன் புகழுகிறீர்கள்? என்று கோபமாக அந்தப் பெரிய பேச்சாளரை நான் கேட்டேன். அவர் சிரித்தபடி சொன்னார். இந்த முட்டாள்களைச் செருப்பால் அடிக்கவேண்டும் என்று எனக்கு ஆசை. நான் என் தகுதிக்கு அப்படிச் செய்யமுடியுமோ? இப்படிப் புகழ்ந்தால் நிஜம் என்று நம்பித் தம் தகுதி தெரியாமல் இவர்கள் பல இடங்களில் உளறுவார்கள். அப்போது பலபேர் இவர்களைச் செருப்பால் அடிப்பார்கள் என்றார். மனதுக்குள் என்ன வஞ்சனை பாருங்கள்.

வெளிவேடத்தில் மயங்குகிற உலகம் மனத்தூய்மை பற்றி ஆராய்வதில்லை. நிஜமாகவே ஒவ்வொருவரும் மனதுள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க ஏதேனும் கருவி வந்தால் நல்லது. மனசுக்குள் என்ன நினைக்கிறான் என்பதைக் கண்டுபிடிக்கும் கருவி வந்துவிட்டால் பலபேரை நம் வீட்டுக்குள்ளேயே விடமுடியாது. மனசு முழுவதும் அவ்வளவு நரகல்.

உடம்பால் யோக்கியர்கள் பலர் மனதால் அயோக்கியர்கள். தமது எக்ஸ்ரே கண்களால் புடைவையைத் தாண்டிப் பெண்களைப் பார்வையிடுவார்கள். மனதாலேயே ஒரு பெண்ணைப் பலாத்காரம் செய்துவிடுவார்கள். அதனால்தான் சீதைக்கு முதலிரவில் சத்தியம் செய்து கொடுத்த இராமன் இந்தப் பிறவியில் உன்னைத் தொட்ட கைகளால் இன்னொரு பெண்ணைத் தொடமாட்டேன் என்று சொல்லவந்தவன் சிந்தையாலும் தொடேன். அதாவது மனதாலும் தொடமாட்டேன் என்று சத்தியம் செய்வதாகக் கம்பன் பாடுகிறார். பாகிஸ்தான் பிரிவினையின்போது வங்காளத்தில் பல பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டு கர்ப்பம் அடைந்தார்கள். கற்பிழந்தவர்கள் என்று அவர்களைப் புறக்கணிக்காது மறுவாழ்வு தரும்படி மகாத்மா காந்தி இளைஞர்களை மன்றாடிக்கேட்டார்.

அவர்கள் உடம்பால் கெட்டார்கள். மனதால் அல்ல என்பது காந்தியின் கருத்து. மனத்தூய்மைதான் உண்மையான அளவுகோல். திருவள்ளுவர் புறம்தூய்மை (வெளித்தூய்மை) நீரால் அமையும் என்று கூறிவிட்டு மிக முக்கியம் அகத்தூய்மை என்று பொருளில் அகத்தூய்மை வாய்மையால் காணப்படும் என்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுகாதாரமான ஆட்சிக்கு மக்களின் ஆணை

இலங்கையில், எதிர்பாராத கூட்டு சக்திகளின் கூட்டணி ஒன்றினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்ட நிகழ்வை உலகம் கண்டு கொண்ட ஏழு மாதங்களின் பின்னர் இலங்கை சுதந்திரக் கட்சியின் பலம் மிக்க அந்த மனிதருக்கு மற்றுமொரு பலமான அடி பாராளுமன்ற தேர்தல்களில் விழுந்துள்ளது.

'UNP' தலைவரும் பல்வேறு ஊகங்கள் மத்தியில் இலங்கையின் எதிர்கால பிரதமராக எதிர்பார்க்கப் பட்டவருமான ரணில் விக்கிரமசிங்க அவர்களின் "நல்லாட்சிக்கான ஐக்கிய தேசியக் கூட்டு முன்னணி"யானது ('UNFGG' -United national front for good governance) மக்களின் 46% வாக்குப் பலத்தில் வெற்றி வாகை சூடியுள்ளது.

தமிழர் தேசிய கூட்டணி (TNA) மற்றும் மக்கள் விடு தலைக் கூட்டணி போன்ற இடதுசாரிக் கட்சிகளது ஆதரவுடன் தேசிய அரசு ஒன்றினை அமைப்பதென ஏற்பாடாகியிருந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவேகூட ராஜபக்சவின் மீள் வருகையை, 'UNFGG' இன் நல்லாட்சியின் படி உத்தரவாதமளித்திருப்பதான பல்வேறு ஊகங்களின் மத்தியிலும் கூட்டணியினால் தோற்கடிக்கப் பட்ட அவர் இந்த தேர்தல்களில் தொடர்ந்தும் நிலைகுலைந்து விடாதவராகவே காணப்பட்டார்.

இருந்தும், சிறு பான்மையினரின் பலத்த ஆதரவும் சிங்களப் பொது மக்களிடையில் 'UNP' க்கான ஆதரவின் தீவர முன்னேற்றமும் சேர்ந்து கூட்டணிக்கான ஆதரவினை மேலும் உறுதிப்படுத்துவதாகவே இருந்தது.

ஜனாதிபதியவர்களது தேர் தலுக்கான உள்ளூர் ஆதர வுத் தளமும் அதற்கு நல்ல விதமாகவே இருந்தது.

ராஜபக்சவின் கட்சியானது கிட்டத்தட்ட முழுவாக்குகளின் 43% பங்கினை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டிருக்கும் தற்போதைய நிலையில் (ஆரம்ப மதிப்பீடுகளின் படி) வெற்றிபெறுபவராக இருக்கக்கூடிய

**த இந்து பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் ....**

எவருமே சுயதிருப்தி கொள்பவராக இருக்கவே முடியாது.

இருந்தும் 'UNP'யின் வெற்றியிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ராஜபக்சவின் பதவி அதிகார ஆதிக்கச் செயற்பாடுகளுக்கும் தேர்தலின் போது அவர் கைக்கொண்ட குறுகிய இனவாத பிரசாரங்களுக்கும் தேர்தலில் மீளவும் கிடைத்ததே இந்த அடி என்பதுதான் அதன் செய்தி ஆகும்! என்பதுதான் அது.

'UNP'க்கும் ஜனாதிபதி தலைமை த்துவத்திற்கும் எதிராக விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சி பற்றிய அச்சங்கள் போன்றதோர் பிரம்மையை ஏற்படுத்துவது மற்றும் அவரது பதவிக்கால போர்- வீரப் பிரதாபங்கள் இணைந்த விதமான நச்சுப் பிரசார மொன்றினூடாக பலமான கிருமித் தொற்று போன்ற தொரு இனவாத தீயை பரப்புவதே ராஜபக்ச தனது தேர்தல் வெற்றிக்கென தெரிந்து கொண்ட ஒரே வழியாக இருந்தது.

ஜனாதிபதி தேர்தலில் கண்ணியமிக்க தேர் வாளர்களால உறுதியாகவே ஆதரிக்கப்பட்டு வரும் "ஜனநாயகமயம்" (democratisation) மற்றும் "மீள் இணக்கப்பாட்டு அரசியல்" (politics of rerconciliation) போன்ற உன்னதமான அரசியல் விழுமியங்களையே ராஜபக்சவின் இத்தோல்விகள் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துவதாயிருக்கிறது.

அரசானது இனிமேலும் பிடிவாதமாக தொடர்ந்தும் காலம் தாழ்த்தாது தமிழ் பேசும் மக்களது நியாயமான ஜனநாயக உரிமைகளான பெரும்பாக- மாகாண அதிகாரப் பரவலாக்கல் விடயங்களை துரிதப்படுத்தி நிறைவேற்ற வேண்டுமென்பதே ராஜபக்சவின் 'SLFP' நிர்வாகத்தை முறியடிப்பதற்கு தேசிய கூட்டணிக்கு சிறுபான்மை மக்கள் (யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் 'TNA' போன்ற ஜனநாயக சக்திகளும், கிழக்கு மாகாணம்- கொழும்பு மற்றும் இலங்கையின் ஏனைய இடங்களையும் சேர்ந்த நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய 'UNFGG' சக்திகளும்) முதன்மை ஆதர வளித்ததற்கான காரணமாகும்.

அதுவே முன்னைய அந்த ஏகாதிபத்ய அரசை முறியடிப்பதற்கு பெரிதும் உதவியதாகவுமிருக்கிறது.

ஜனநாயக அமைப்புக்களான அரசியலமைப்பு சபை, ('constituitional council') நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகார நிர்ணயத்திற்குரிய சுயாதீன ஆணைக்குழு 'indipendant commions' போன்றவற்றை உருவாக்கிய அரசினது செயற்பாடுகள் இதுவரை நல்லவிதமாகவே காணப்படுகின்றன.

ஜனாதிபதி பதவிக்கான காலவரையறை இரு தடவைகளாக மட்டுப்படுத்தப்பட்டமை இதிலடங்கும்.

இராணுவமயப்படுத்தல் மூலம் ராஜபக்ச நிர்வாகத்தினர் நன்கு செயற்படுத்தி வந்த "ஆதிக்க அதிகாரத்துவம்" மற்றும் "குடும்ப அரசியல்" போன்ற ஏதேச்சதிகாரப் போக்குகளை மேற்படி அதிகாரவரையறை இல்லாதொழிக்கிறது. இந்த தேர்தல் வெற்றியானது, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் சிறுபான்மை மக்களுக்கு அரசு மேற்கொள்ளும் உதவி நடவடிக்கைகளான "மீள் இணக்கப்பாடு" மற்றும் "புனர்வாழ்வு" போன்ற அரச முயற்சிகள் மட்டிலான சர்வதேச நம்பகத்தன்மையை அதிகரிக்க உதவுவதாகவேயிருக்கும்.

ஏனெனில், இங்கு இடம் பெற்ற நீண்டகால பயங்கர சிவில் யுத்தம் முடிவுற்று ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் அரசினது இந்த நிவாரண நடவடிக்கைகளுக்கான பலாபலன்கள் இதுவரையில் சம்பந்தப்பட்ட அனை வராலுமே பரவலாக உணரப்படாமலேயே இருந்து வருகிறது.

இவைகளனைத்தையும் கருத்திற்கொண்டு பார்க்கும் போது திறந்த பொருளாதார சந்தைப் போக்குடைய 'UNP' மற்றும் மூடிய பொருளாதார சந்தைப் போக்குடைய 'SLFP' போன்ற ஆட்சியிலுள்ள சக்திகளின் உள்ளார்ந்த வேறுபாடுகளுக்கு மத்தியிலும் ஏற்கனவே பெறப் பட்ட சொற்ப பெறுபேறுகள் சுகாதாரமான ஆட்சிக்காக மக்கள் வழங்கிய இந்த தேர்தல் ஆணை தொடர்ந்தும் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதை சுட்டிக்காட்டுகிறது எனலாம்.

-தமிழில்-யோகர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.ம.சு.மு.தேசியப்பட்டியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியல் தொடர்பில் காணப்பட்ட பிரச்சினைகள் அனைத்தும் நேற்று முன்தினம் இரவுடன் நிறைவடைந்துள்ளதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

அதற்காக தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வழங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அனைத்து தரப்பினரும் பொது இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர்.

அது தேசிய அரசாங்கம் உருவாக்குவது தொடர்பிலான இணக்கப்பாடாகும்.

பொதுத் தேர்தலுக்கு அண்மித்திருந்த போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொது செயலாளர் நீக்கப்பட்டு, புதிய செயலாளர் நியமிக்கப்பட்டமையினாலே அக்கட்சியின் தேசிய பட்டியல் தொடர்பில் சில பிரச்சினைகள் தோன்றியது.

எனினும் தற்போது அப் பிரச்சினைகள் நிறைவடைந்துள்ளதாக நம்பத்தகுந்த தகவல் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# உதய கம்மன்பில பொலிஸ் தலைமையகத்தில் பிரசன்னம்

பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில நேற்று பொலிஸ் தலைமையகத்தில் பிரசன்னமாகியுள்ளார்.

வாக்கு மூலம் ஒன்றை அளிப்பதற்காக இவ்வாறு அவர் பிரசன்னமாகியுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள விசேட விசாரணைப் பிரிவில் உதய கம்மன்பில வாக்கு மூலமொன்றை அளிக்க உள்ளார்.

என்ன விடயம் தொடர்பில் வாக்கு மூலம் அளித்துள்ளார் என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை. (இ-7)

# நிதி கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் முக்கிய பௌத்தபிக்குவிடம் விசாரணை

(கொழும்பு)

சட்டவிரோத நிதிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் முக்கிய பௌத்த பிக்கு ஒருவரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.

வெளிநாட்டு நிறுவனமொன்றினால் முன்னாள் அமைச்சர் ஒருவரின் வங்கிக் கணக்கில் பெருந்தொகைப் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அந்த வங்கிக் கணக்கிலிருந்து 50 இலட்சம் ரூபா குறித்த பௌத்த பிக்குவின் கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த கொடுக்கல்-வாங்கல் தொடர்பில் மத்திய வங்கியின் நிதி விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் குறித்த பௌத்த பிக்குவிடம் பணம் கிடைக்கப்பெற்ற விதம் குறித்து விசாரணை நடத்தியுள்ளனர்

பௌத்த பிக்குவின் வங்கிக் கணக்கினை முடக்குவதற்கு ஏற்கனவே மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

பௌத்த பிக்குவிடம் விசாரணை நடத்தி வாக்கு மூலமொன்றை பெற்றுக்கொண்ட விசாரணைப் பிரிவினர் தொடர்ந்தும் விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# ஜனநாயகத்தை வலுவாக்குவதற்கான தெளிவான சமிக்ஞை

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராகியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு 106 இடங்கள் கிடைத்துள்ளன. 225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில், 196 உறுப்பினர்கள்மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்க ப்படுகின்றனர். 29 உறுப்பினர்கள் அவரவர் கட்சிகளுக்குக் கிடைக்கும் வாக்குகளின் வீதப்படி கட்சித் தலைமையால் நியமிக்கப்படுகின்றனர்.

வடக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் அதிக ளவில் வெற்றி பெற்றுள்ளனர். தமிழர்கள், முஸ்லிம்கள் போன்ற சிறுபான்மைச் சமூகத்தவர்களின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியமைக்க முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 16 இடங்கள் கிடைத்துள்ளன. இடதுசாரி சிங்களக் கட்சியான ஜனதா விமுக்த பெரமுன 6 தொகுதிகளில் வென்றுள்ளது.

இந்தத் தேர்தல் சில செய்திகளை இலங்கை அரசியல் கட்சிகளுக்குத் தெளிவாகச் சொல்கிறது.

தேர்தல் முடிவுகள் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைத்திருக்கும் வெற்றி என்பதைவிடவும், இதை மகிந்த ராஜபக்ஷவுக்குக் கிடைத்த தோல்வியாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. மகிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகாரப் போக்கையும் பேரினவாதச் செயற்பாடுக ளையும் மக்கள் இன்னும் மறக்க வில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் பிரசாரத்தின் போது கடுமையாகத் தாக்கிப் பேசிய மகிந்த ராஜபக்ஷ, மீண்டும் அரசியலில் தலையெடுக்க முயன்ற முயற்சி தோல்வியடைந்திருக்கிறது. விடுதலைப் புலிகள் மீண்டும் திரும்ப வருவார்கள் என்று கூட சிங்கள வாக்காளர்களுக்கு அவர் மிரட்டல் விடுத்துப் பார்த்தார். அவருடைய மறுவருகையை மக்கள் விரும்பவில்லை என்பதோடு, இன அடிப்படையில் மோதல்கள் தொடர்வதையும் மக்கள் விரும்பவில்லை என்பதையும் உணர்த்தியிருக்கிறார்கள்.

அரசியல் சட்ட ஆணையத்தை ஏற்படுத்தியது, ஜனாதிபதி அதிகாரத்தைக் கட்டுப்படுத்த சுய அதிகாரம் படைத்த அமைப்புக்களை உருவாக்கியது போன்ற நடவடிக்கைகள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

ஜனாதிபதி பதவியில் ஒருவர் சேர்ந்தார்போல இரண்டு முறைக்கு மேல் இருக்கக் கூடாது என்ற அரசியல் சட்ட ஏற்பாட்டுக்கும் மக்கள் ஆதரவு அளித்துள்ளனர். ஜனாதிபதி ஆட்சி முறையிலிருந்து நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கு மாறுவோம் என்று மைத்திரிபாலவும் ரணிலும் கூறியதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். முக்கியமாக, நல்லாட்சியை அவர்கள் எதிர்பார்ப்பதை அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஜனாதிபதியும் பிரதமரும் முன்பு அரசியல் கணக்குக ளுக்குக் கோர்த்த கைகளை இனி நல்லாட் சிக்கான செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும்.

அனைத்து மக்களுக்கும் சம உரிமை, போரில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை மீட்டெடுத்தல், நாட்டின் அனைத்துச் சமூகங்களையும் சமச்சீர் வளர்ச்சியை நோக்கி நகர்த்துதல் என்று ஆக்கபூர்வப் பணிகளை நோக்கிச் செல்ல வேண்டும். மாகாண அரசுகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும், நாட்டின் வளர்ச்சியில் அனைவருக்கும் பங்கு அளிக்கப்பட வேண்டும், தங்களுடைய நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்பட வேண்டும் என்று சிறுபான்மைச் சமுதாயத்தினர் கோருவதைப் புதிய அரசு ஏற்று நடத்த வேண்டும்.


இராணுவச் செலவுகளைக் குறைத்து வர்த்தகம், சுற்றுலா, மீனளம் என எல்லாத் துறை களிலும் முதலீட்டைப் பெருக்க வேண்டும். நாட்டை வளப்படு த்த வேண்டும் என இந்தியாவிலி ருந்து வெளியாகும் த ஹிந்து பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது. (இ-7)

# பேஸ்புக் செயற்பாட்டாளர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளர் நன்றி

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பேஸ்புக் செயற்பாட்டாளர்கள் மேற்கொண்ட அரசியல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல் ஆணையாளர் நன்றி தெரிவித்துள்ளார்.

பேஸ்புக் செயற்பாட்டாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வமான பங்களிப்பு காரணமாக நீதியானதும், நேர்மையானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு உறுதுணையாக இருந்ததாக அவர் தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் செயலகத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் தளத்தில் தேர்தல்கள் ஆணையாளரின்



செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் தேர்தல்களிலும் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலொன்றை நடத்துவதற்கு பேஸ்புக் செயற்பாட்டாளர்களின் பங்களிப்பு அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# இலங்கையில் வீழ்ச்சி காணும் பெண்களின் பிரதிநிதித்துவம்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் 8 ஆவது நாடாளுமன்றத்துக்கு, 12 பெண் உறுப்பினர்கள் மட்டுமே தெரிவாகியுள்ளனர்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பல்வேறு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பில், 556 பெண் வேட்பாளர்கள் களமிறங்கியிருந்தனர்.

ஐ.தே.க. மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்டவர்களில், 12 பேர் மட்டுமே நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

மாவட்ட ரீதியாக 14 ஆசனங்களை வென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து இம்முறை ஒரு பெண் உறுப்பினரேனும் தெரிவாகவில்லை.

இதேவேளை, இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட பெண் வேட்பாளர்களில், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் தலதா அத்துகோரள 145,828 விருப்பு வாக்குகளை பெற்று முதலிடத்தில் உள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளை பெற்ற 48 வேட்பாளர்களில் தலதா அத்துகோரளவும் இடம்பெற்றுள்ளார்.

இரத்தினபுரி மாவட்ட வரலாற்றில் பெண் ஒருவர் பெற்றுக் கொண்ட அதிகூடிய விருப்பு வாக்கு இதுவாகும்.

கடந்த முறை நாடாளுமன்றத்தில் 13 பெண்கள் உறுப்பினர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)







முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் **சிவமகாராசாவின்** 8 ஆவது நினைவு தின நிகழ்வு நேற்று யாழ். தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட வட மாகாண சபை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் உறவினர்கள் சிவமகாராசாவின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். மாமனிதர் சிவமகாராசா கடந்த 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். இதேவேளை சிவமகாராசாவிற்கு மாமனிதர் என்ற பட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் தேசியப் பட்டியலில் ஆசனம் பெற மோதல்


(கொழும்பு)

நடைபெற்ற பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் தேசியப் பட்டியல் ஊடாக நியமனம் பெற்றுக் கொள்வதில் நாட்டம் கொண்டுள்ளனர்.

எஸ்.பி.திஸாநாயக்க, நந்திமித்ர ஏக்கநாயக்க, விஜித் விஜயமுனி சொய்சா, மகிந்த சமரசிங்க ஆகியோரே அவ்வாறு தேசியப்பட்டியல் ஊடாக மீண்டும் நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பை எதிர்பார்த்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சிக்குள் தனது கையை பலப்படுத்த மேற்குறித்த நால்வருடன் சோலங்க ஆராச்சிக்கும் தேசியப் பட்டியல் வாய்ப்பை வழங்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜே.வி.பியின் லால்காந்த, சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோரும் தேசியப்பட்டியல் ஊடாக மீண்டும் நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பை பெறக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-7)





# தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண நல்லதொரு வாய்ப்பு உருவாகியுள்ளது

## ரணிலுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் கருணாநிதி வலியுறுத்து

(கொழும்பு)

**புதிய பிரதமரின் தலைமையில் இலங்கைத் தமிழர்களின் நெடுங்காலப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான நல்ல வாய்ப்பு உருவாகியிருப்பதாக தமிழக முன்னாள் முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.**



மீண்டும் பிரதமராக பதவியேற்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி முன்னணி, 45.7 சதவீத வாக்குகளைப் பெற்று 93 ஆசனங்களிலும், மகிந்த ராஜபக்ஷவின் ஐ.ம.சு.மு. 42.4 சதவீத வாக்குகளையும் பெற்று 83 ஆசனங்களை வெற்றி பெற்றுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 14 ஆசனங்களை வெற்றி பெற்று, இலங்கையில் மூன்றாவது பெரும் கட்சிக்குரிய இடத்தைப் பெற்றிருப்பது முக்கியமானதொரு திருப்பமாகும்.

இந்தத் தேர்தலைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக பெறுபேற்க இருக்கிறார். அவருக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ இந்தப் பிரதமர் தேர்தலிலும் போட்டியிட்டு, வெற்றி வாய்ப்பினை இழந்துள்ளார். எனினும் அவருடைய கட்சி 83 இடங்களிலே வெற்றி பெற்றுள்ளது.

தற்போது ஜனாதிபதியாக உள்ள மைத்திரிபால சிறிசேன அறிவித்த 20 ஆவது அரசியல் சட்ட திருத்தத்தின்படி, இலங்கை விரைவில் ஜனாதிபதி ஆட்சி முறையில் இருந்து மாறி, நாடாளுமன்ற ஜனநாயகத்துக்குத் திரும்பும் என்றும் அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

ஆனால், இந்தத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்றுள்ள வெற்றி, புதிய பிரதமர் எடுக்கும் முடிவுகளை வடிவமைத்திடக் கூடிய நிலையில் அமைந்துள்ளதால், ஈழத் தமிழர்களின் நெடுங்காலப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான நல்ல வாய்ப்பு உருவாகியிருக்கின்றதென நம்பலாம்.

எனவே, இந்தச் சூழ்நிலையில் இலங்கையில் வாழும் தமிழர்களுக்குச் சம உரிமைகளுடன் கூடிய கண்ணியமான, அமைதியான நல்வாழ்வு அமைந்திட வேண்டுமென்ற எண்ணம் நிறைவேற ஆக்க பூர்வமான முடிவுகள் எடுக்கப்பட்டு புதிய விடியலுக்கு வழி ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு கருணாநிதி தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தேர்தலில் வாக்களிக்க முடியாமல் திரும்பிச்சென்ற கொழும்பு முதல்வர்

(கொழும்பு)

கடந்த 17 ஆம் திகதி தேர்தல் தினத்தன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கொழும்பு முதல்வர் முஸம்மில் வாக்களிக்கச் சென்றிருந்தார்.




அப்போது முஸம்மில் தனது தேசிய அடையாள அட்டையை எடுத்துச் செல்லவில்லை. அதனால் அவருக்கு வாக்களிக்க அனுமதி அளிக்கப்படவில்லை. தான் கொழும்பு முதல்வர் என்று கூறிய போதும் அதிகாரிகள் அவரை வாக்களிக்க அனுமதிக்கவில்லை.

வாக்களித்துவிட்டு வெளியில் இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முஸம்மில்லை காணாது தேடிய போது திடீரென அங்கு பாதுகாவலருடன் வந்த முஸம்மில் அடையாள அட்டை கொண்டு வராததை ரணிலிடம் தெரிவித்து எப்படியாவது வாக்களிக்க அனுமதி பெற்றுத் தருமாறு கோரியுள்ளார்.

அதற்கு பதில் அளித்த ரணில், சட்டம் அனைவருக்கும் ஒன்று தான். நான் பிரதமர் என்றாலும் அவர்கள் என்னிடம் அடையாள அட்டை கேட்டனர்.

இன்னும் நேரம் உண்டு வீட்டுக்குச் சென்று அடையாள அட்டையை எடுத்து வரவும் என்று கூறி முதல்வரை வீட்டுக்கு அனுப்பியுள்ளார். (இ-7)

## புதிய அரசாங்கத்திற்கு ஒத்துழைக்குமாறு சுதந்திரக் கட்சிக்கு கூறிய கோத்தபாய



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒத்துழைத்து செயற்படுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பொதுத் தேர்தலில் பெற்றுக் கொண்ட மக்கள் ஆதரவை மதித்து எதிர்வரும் நடவடிக்கைகளை மேற் கொள்வது அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்படுவது அவசியம் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## நிதர்சனம் இணையத்தள முன்னாள் ஆசிரியர் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ இணையத்தளமான நிதர்சனம் இணையத்தளத்தின் முன்னாள் ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஆரம்ப கால உத்தியோகபூர்வ இணையத்தளமான நிதர்சனம் இணை [illegible] ஆசிரியரான நடராசா சேதுரூபன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. தற்போது நோர்வேயில் வசித்துவரும் இவர், சுற்றுலா விசாவில் இலங்கை வந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டமைக்காகவே கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டவர்கள் இலங்கையில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் குறித்த நபர் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவாக செயற்பட்டுள்ளார்.

மேலும் சந்தேக நபர் குறித்த தகவல்களை பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் ஆகியோருக்கும் அறிவித்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரி வித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசில் இணைந்து கூட்டமைப்பு அமைச்சு பதவிகளைப் பெறவேண்டும்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கருத்து



(கொழும்பு)

**புதிய ஆட்சியில் அமைச்சுப் பதவிகளை பெறுக்கொண்டு தமது மக்களுக்கு சேவை யாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வர வேண்டுமென கண்டி மாவட்டத்தில் வெற்றியீட்டிய முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

மறைந்த காமினி திஸாநாயக்கவுக்கு பின்னர் அதிகப்படியான விருப்பு வாக்குகளை தனக்கு பெற்றுக் கொடுத்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் வெற்றி தொடர்பில் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முப்பது வருடங்களாக தேர்தல் சட்டங்கள் வெறுமனே புத்தகங்களுக்குள் மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தன. எந்தவொரு சட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தேர்தல்கள் நடத்தப்பட்டன.

ஆனால இம்முறை இடம்பெற்ற பொதுத் தேர்தலில் புத்தகங்களுக்குள் வரையறுக்கப்பட்டிருந்த தேர்தல் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. சுவரொட்டிகள், கட்அவுட்கள் அகற்றப்பட்டு பொலிஸாரும் தமது கடமைகளை சரிவரச் செய்தனர்.

இவ்வாறானதோர் நல்லாட்சி சூழ்நிலையில் நீதியும் நியாயமுமான தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் மக்கள் மீண்டும் நல்லாட்சிக்கு ஆதரவு வழங்கி அதனை தொடர்வதற்கு ஆணை வழங்கியுள்ளனர்.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஸ்திரமான நல்லாட்சி நாட்டில் அமைவது உறுதியாகும். இதனால் புதிய நல்லாட்சியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொண்டு தமது மக்களுக்கு சேவையாற்ற முன்வர வேண்டும்.

அதனை விடுத்து தொடர்ந்தும் அரசியலில் எல்லைக்கோட்டில் நின்று கொண்டிருக்காது அரசுடன் இணைய வேண்டும். ஐ.தே.கட்சியில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டு மறைந்த காமினி திஸாநாயக்க அதிக விருப்பு வாக்குகளை பெற்றார்.

அதன் பிறகு அதிகப்படியான விருப்பு வாக்குகள் இத் தேர்தலில் எனக்கு கிடைத்துள்ளன. இதற்காக எனக்கு வாக்களித்து ஆதரவு வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்கால நல்லாட்சியில் எனது சேவைகள் தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 1,2 நூல்களின் அறிமுகம் கொழும்பில்

(நல்லூர்)

வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 1, 2 நூல் அறிமுக விழா எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு தமிழ் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெற உள்ளது.

கொழும்பு தமிழ் சங்க தலைவர் மு.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவன் சேரன் சிவானந்தமூர்த்தியும்,

நூலாசிரியர் அறிமுக உரையை தினகரன் வார வெளியீட்டின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவரும் நிகழ்த்தவுள்ளனர்.

வாழ்த்துரைகளை தினக்குரல் வாரவெளியீட்டின் பிரதம ஆசிரியர் பாரதி ராஜநாயகம், யாழ்.இந்துக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் எம்.என்.அசோகன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இதன் போது நூல்களின் முதற் பிரதியை திரு,திருமதி தினேஸ் குமார் மதீஸ்வரி தம்பதிகள் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

நூலின் மதிப்பீட்டு ரையை கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளரும், யாழ்.இந்துக் கல்லூரியன் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் காப்பாளருமாகிய உடுவை சிதில்லை நடராஜா நிகழ்த்தவுள்ளார்.ஏற்புரையை நூலாசிரியர் வேதநாயகம் தபேந்திரன் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவகாலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை வீணை- என்.எஸ்.வாகீசன்,மிருதங்கம்- எஸ்.மகேந்திரன்,தபேலா- எஸ்.விமல் சங்கர் ஆகியோர் பங்கு பற்றுகின்றனர். (இ-5)

# கூட்டமைப்பின் தேர்தல் வெற்றி தொடர்பில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் மகிழ்ச்சி

நடந்து முடிந்த இலங்கையின் பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெற்றுள்ள ஆசனங்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும், எந்த அளவிற்கு விசமப் பிரசாரங்கள் செய்யப்பட்டிருந்தாலும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மீது எமது மக்கள் கொண்டுள்ள நீங்காத நம்பிக்கை அவர்கள் வாக்குகளின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, துல்லியமாகத் தெரிகின்றது என உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த தேர்தல் முடிவுகள் தமிழ் மக்களின் பலத்தை மீண்டும் நிரூபித்துள்ளன. எவ்வித சலனமோ அன்றி அச்சமோ இன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் அளித்த வாக்குறுதிகள் மீது நம்பிக்கை கொண்டு எமது மக்கள் அவர்கள் வெற்றிவாகை சூடும்படியாக தங்கள் ஆதரவை அளித்துள்ளார்கள்.

எனவே எமது மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மீது கொண்டுள்ள நம்பிக்கைகளையும் தாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளையும் மனதில் இருத்தி, சம்பந்தன் தலைமையிலான பாராளுமன்ற அங்கத்தவர்கள், தங்கள் பணிகளை தொடரவேண்டும். அதுவே தமிழ் மக்கள் விரும்புகின்ற அடுத்தபடியாகும்.

இவ்வாறு நடந்து முடிந்து இலங்கையின் பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெற்றுள்ள மாபெரும் வெற்றி குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)




### மங்காத அருள்



குன்றில் குலவும் சேவலும் மயிலும்
குறிஞ்சி மலர்களின் வாசனையும்
தென்றல் வீசும் பனிமழையழகில்
வர்ணங்கள் காட்டும் வானவில்லும்
வென்றவேலும் வேடுவர்கள்
வழிபாடுகளும் கதிர்காமத்தில்
மன்றம் அமைத்த மாநகர் நல்லையில்
ஓங்கியொலிக்கும் மாமணியோசையும்
இன்றும் இன்னமும் மங்காதவருள்
மறையருளுக்கெல்லாம் அரனே!

இராமஜெபபாலன்



வண்ணமயிலை தன் வாகனமாக்கி
அதில் வீற்றிருந்து அருள் கொடுக்கும் முருகா
தாய்,தந்தையே உலகம் என
தந்தைக்கு பாடம் புகட்டிய கந்தா
மங்கையர்க்கு மாங்கல்ய வரத்தைக்கொடுத்து
அவர்கள் வாழ வழிகாட்டுகின்ற வேலவனே
உன் திருவடியை துதிக்கின்றேன்
அருள் கொடு அற்புத நாயகனே.

திவ்யா
பருத்தித்துறை

அழகுக்கொரு கந்தன் நல்லூரில் என்பார்
அன்புக்கு அடிமை அவன் அடியார்க்கு எளியன்
ஆறுபடை வீடுடையான் ஆனந்தரூபியன்
இன்னல்கள் தீர்த்திடும் இன்ப ஊற்றானவன்
ஊரெல்லாம் தன் புகழ் மணக்க அமர்ந்திருப்பான்
எண்ணற்ற பக்தகோடி ஏக்கங்கள் தீர்த்திடுவான்
ஓயாது தன்னைப் போற்றித் துதிக்கும் அடியவர்க்கே
ஔடதமாய் வந்து நின்று அருள் முகம் காட்டிடுவான்

**திருமதி ம.கு.**
**கோண்டாவில் கிழக்கு**

### நல்லைக் கந்தன் நனிவிருத்தம்



ஆதியும் அந்த மில்லா
அற்புதச் சுடரா யோங்கி
சோதியா யுலகம் யாவும்
தோன்றிய பொருளு மாகி
நீதியை நாட்டி யெல்லா
நிலையிலும் வாட்டம் நீக்கி
ஓதுவார் உளத்தில் நின்று
உலகாள்வாய் நல்லைக் கந்தாயூ

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவபாலகோபால




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதிகளை அழிக்க ஜெட் விமானத்தாக்குதல்

## பாகிஸ்தானில் 25 பேர் பலி!

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் தீவிர வாதிகளை அழித்தொழிக்கும் நடவடிக்கை யில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது. அங்கு ஜெட் விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்கு தலில் 25 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.**



பாகிஸ்தானில் வடக்கு மற்றும் தெற்கு வஜிரிஸ்தான் பகுதிகள், தீவிரவாதிகளுக்கு சொர்க்காபுரி களாக திகழ்கின்றன. அங்குள்ள அடர்ந்த காடுகளில் பதுங்கியுள்ள தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு கடந்த மே மாதம் முதல் பாகிஸ் தான் இராணுவம் நடவடிக்கை எடு த்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் அங்குள்ள ஷவால் பள்ளத் தாக்கு பகுதியில் ஜெட் விமான ங்கள் தொடர்ந்து குண்டுவீச்சு நடத்தின.

இதில் தீவிரவாதிகளின் 5 மறைவிடங்கள் அழிக்கப்பட்டன. அவற்றில் பதுங்கியிருந்த 25 தீவி ரவாதிகள் குண்டு வீச்சில் பலி யாகினர்.

இத்துடன் சேர்த்து இந்தப் பகுதி யில் இந்த வாரம் நடந்த வான் தாக்குதல்களில் பலியானவர்களின் எண்ணிக்கை 133 ஆக உயர்ந் துள்ளது.

பஞ்சாப்மாகாணத்தின் உள்துறை அமைச்சர் சுஜா கான்ஜாதா, கடந்த ஞாயிற்றுக்கிழமை மனித வெடி குண்டு தாக்குதலில் கொல்லப்பட்ட தில் இருந்து தொடர்ந்து குண்டு வீச்சு நடந்து வருவதாக அந்தப்பகுதி கிராமவாசிகள் கூறினர். (3-7)

## தொல்லியல் ஆய்வாளரின் தலையை கொய்து உடலை தூணில் தொங்கவிட்ட ஐ.எஸ்.ஐ.எஸ்



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் 82 வயது தொல்லியல் ஆய்வாளரை கொலை செய்து அவர் வாழ்நாள் முழுவதும் போற்றி பாதுகாத்த புராதான இடத்தில் அவரது உடலை தொங்கவிட்டுள்ளது.

மத்திய கிழக்கின் மிகப்பெரும் சாதனை பல்மைரா. அந்தக்கால த்தில் இருந்த ரோமப்பேரரசின் மற்ற நகரங்களைப் போன்றதல்ல பல்மைரா. மத்திய கிழக்கின் வரலாற்றுப் பெருமைகளில் ஒன்று பல்மைரா. காரணம் இந்த நகரம் கலை ரீதியிலும் கலாசார ரீதியா கவும் தனித்தன்மை கொண்டி ருந்தது. பத்திரமாக பாதுகாக்கப் பட்டு வந்த பல்மைராவின் பிரம் மாண்டமான கோயில்கள், நெடுந்தூண் களைக் கொண்ட ராஜவீதிகள், திறந்தவெளி கலையரங்கம் போன் றவையெல்லாம் பல்மைரானியர் களின் கலை உணர்வுக்கும், கட்டடக் கலை நிபுணத்துவத்துக்கும் சான்று களாக நிலைத்து நிற்கின்றன.

ஆனால் தற்போது ஐ.எஸ்.ஐ.எஸ. தீவிர வாதிகளால் அழிவின் விளிம் பில் இருக்கிறது பல்மைரா. சிரியாவின் இந்த புரதான நகரின் தலைமை தொல்லியல் ஆய்வாளராக பணியா ற்றி அரிய பொக்கிஷங்களை பாது காத்தவர் காலித் ஆசாத். கடந்த ஒரு மாதமாக ஆசாத்தை சிறைவைத்து அவரிடமிருந்து பல்மைராவில் இருப்பதாக கூறப்படும் புதையல் தொடர்பான தகவல்களை பெற முயற்சித்து வந்தது ஐ.எஸ்.ஐ.எஸ்.

ஆனால் எந்த தகவல்களையும் கொடுக்க மறுத்துவிட்டதால் அவ ரது தலையை வெட்டி கொலை செய்து, பல்மைராவில் உள்ள ரோமானிய தூணில் தொங்கவிட்டுள்ளது. கடு மையாக சேதமடைந்திருந்த இந்த தூணை, ஆசாத் 50 ஆண்டுகள்கடு மையாக உழைத்து சீரமைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)




## துருக்கியில் தாக்குதல்; 8படையினர் உயிரிழப்பு!



துருக்கியின் தென்கிழக்குப் பகு தியில் நடந்த வெடிகுண்டுத் தாக்கு தலில் எட்டு துருக்கிய வீரர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். சிர்ட் மாகாணத்தில் நடந்த இந்தத் தாக்கு தலுக்கு இதுவரை எந்தக் குழுவும் பொறுப்பேற்கவில்லை.

ஆனால், குர்திஷ்தான் தொழி லாளர் கட்சிதான் இதற்குக் கார ணம் என அதிகாரிகள் குற்றம் சாட் டியுள்ளனர்.


பிகேகேவுக்கும் துருக்கிய பாது காப்புப் படையினருக்கும் இடையி லான வன்முறை அதிகரித்திருக் கும் நிலையில், இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

இரு தரப்புக்கும் இடையில் இரண்டு ஆண்டுகளாக நிலவிவந்த போர் நிறுத்தம் ஜூலை மாதத்தில் முறிந்துபோன பின்னர் நிகழ்ந்து வரும் வன்முறைச் சம்பவங்களில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல் லப்பட்டிருக்கின்றனர்.

முன்னதாக, இஸ்தான்புல் நக ரின் பிரபல சுற்றுலாத் தலமான டோல்மாபார்சி மாளிகையில் துப் பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஒரு பொலிஸ் அதிகாரி காயமடைந்ததா கவும் இந்தச் சம்பவம் தொடர்பாக இரண்டு பேர் கைது செய்யப்பட் டிருப்பதாகவும் துருக்கியின் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள் ளது. (3-7)

## தற்கொலைத் தாக்குதலில் சிரியாவில் 10 பேர் பலி



சிரியாவில் காமிஷிலி நகரில், குர்து தன்னாட்சி அமைப்புக்குரிய 'அசாயிஷ்' என்ற பாதுகாப்பு அமைப்பை குறிவை த்து, நேற்று முன்தினம் தீவிரவாதி ஒருவர் உடல் முழுவதும் வெடிகுண்டு களை கட்டிச் சென்று வெடிக்கச்செய்து தாக்குதல் நடத்தியுள்ளார்.

இந்த குண்டுவெடிப்பால் அந்த பகு தியே குலுங்கியது. இதில் சிக்கி 10 பேர் உடல் சிதறி உயிரிழந்ததாக முதற் கட்ட தகவல்கள் கூறுகின்றன. அதே நேரத் தில் பலி எண்ணிக்கையை உறுதி செய்ய சிரியாவில் உள்ள மனிதவுரிமை கண்காணிப்பகம் மறுத்து விட்டது.

இந்த தாக்குதலுக்கு உடனடியாக எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்க வில்லை. (3-7)

## கூகுளின் புதிய பதிப்பிற்கு பெயர் மார்ஷ்மெலோ

விரைவில் வெளியாகவுள்ள ஆன்ட்ராய்டு இயங்குதளத்தின் புதிய பதிப்பிற்கு மார்ஷ்மெலோ என பெயரிடப்பட்டுள்ளது. உலகம் முழு வதும் ஸ்மார்ட்போன்களில் அதிக ஆதிக்கம் செலுத்தி வரும் கூகுளின் ஆன்ட்ராய்டு இயங்குதளத்தில் இதுவரை ஐஸ்கிறீம் சான்ட்விச் (4.0), ஜெல்லி பீன் (4.1), கிட்காட் (4.4), லாலிபப் (5.0) ஆகிய பதிப் புகள் அதிக வரவேற்பை பெற்றி ருந்தன. இந்நிலையில், அடுத்ததாக பல புதிய நவீன வசதிகளுடன் வெளி வரும் புதிய பதிப்பிற்கு மார்ஷ் மெலோ என பெயரிட்டுள்ளது கூகுள்.

இந்த புதிய வடிவமைப்பில் கைரேகையை பதிவு செய்யும் சென்சர்கள், அப்டேட் செய்யப்பட்ட பவர் சேவிங் மோடு, ஆப்ஸ்களை இன்ஸ்ரோல் செய்யவும், அப்கிரேடு செய்யவும், பெர்மிஷன்களை ஸ்டி ரீம்லைனில் காட்டும் புதிய வச தியும் உண்டு. சில ஆப்ஸ்களை இன்ட்ஸ்ரோல் செய்யும் போது பெர்மிஷன்களை வாங்க வேண்டி யிருக்கும்.

புதிய பதிப்பில் முதலில் இன் ஸ்ரோல் செய்துவிட்டு தேவைப் படும்போது பெர்மிஷன்களுக்கு ரெக்வெஸ்ட் கொடுக்கலாம். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால் தான் உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்கமுடியும். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இறைவன் தந்த சந்தர்ப்பம்

மகா அலெக்சாண்டர் ஒரு நாள் தன் தளபதியை அழைக்கிறார்.

நாளைய தினம் என் உயிர் பிரிந்து விடும். உயிர் பிரிந்த என் உடலை மயானத்திற்குக் கொண்டு செல்லும்போது என் இரண்டு கைகளும் வெளியில் தெரியுமாறு கொண்டு செல்லுங்கள் என்று கூறுகிறார்.

இந்த உலகம் முழுவதையும் ஆண்ட மகா அலெக்சாண்டர் இவ்விதம் கூறியது, தளபதிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

ஏன்?மன்னா என்று தளபதி கேட்கிறான். அதற்கு மகா அலெக்சாண்டர் கூறுகிறார்,

"இந்த உலகம் முழுவதையும் ஆண்ட மகா அலெக்சாண்டரும் போகும்போது வெறும் கையோடுதான் போகிறார் என்பதை இந்த உலகமும் இந்த உலகில் பேராசை பிடித்து அலைபவர்களும் புரிந்து கொள்ளட்டும்" என்று.

மகா அலெக்சாண்டருக்கு அந்திம காலத்தில் ஏற்பட்ட ஞானம் இந்த உலகில் வாழ்கின்ற மக்களுக்கு மிகப் பெரிய தத்துவமாகும்.

ஆம், உலக வாழ்வு என்பது எப்படி அமைய வேண்டும் என்பதை வள்ளுவர் மிகத் தெளிவாகக் கூறிநிற்கிறார்.

வள்ளுவர் கூறுவதெல்லாம் தர்மமான வாழ்வு. தர்மம் ஒன்றுதான் இந்த உலகைக் காப்பாற்றக் கூடியது.

ஆகையால், தர்மமான வாழ்வை ஏற்படுத்துவது அதற்கேற்றால்போல் வாழ்வது நாமும் நம் சந்ததியும் வாழ வழிவகுக்கும். அந்த வகையில் யுத்தத்தால் சீரழிந்து மனிதம் பட்ட அவலங்கள் முடிவுக்கு வருவதற்கான சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது.

ஆம்;இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிக உன்னதமான மனிதர் மட்டுமன்றி மிகச் சிறந்த தலைமைத்துவத்தையும் கொண்டவர்.

அதேநேரம் தேர்தலின் பின்னர் அமையப் போகும் தேசிய அரசு இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்குத் தேவையான சூழமைவு.

இதுதவிர, ஐ.நா சபை அடிக்கடி வலியுறுத்தும் சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்பனவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு நிச்சயம் காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றன.

இத்தகையதொரு சந்தர்ப்பம் முன்பு ஒருபோதும் ஏற்பட்டதில்லை.

இதற்கப்பால், தென்பகுதிச் சிங்கள மக்கள் நடந்து முடிந்த தேர்தலில் மிகப் பெரிய புதுமையை ஏற்படுத்தியுள்ளனர்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு வழங்கிய தோல்விப் பரிசு; மகிந்த ராஜபக்ஷவின் வாய்க்கொழுப்பை அடக்கிய நுட்பம்; இதற்கப்பால் மகிந்தவுடன் சேர்ந்திருந்து இந்த நாட்டில் அமைதியைக் குலைத்த சுமார் 23 பேர் பாராளுமன்றம் போக முடியாதவாறு மக்கள் வழங்கிய தீர்ப்பு என்பன அனைத்தும் சேர்ந்து இலங்கையில் நிரந்தர அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கான களநிலைமையைத் தந்துள்ளன.

இதனை நல்ல முறையில் பயன்படுத்துவது அனைவரதும் கடமையாகும்.

# கூட்டமைப்பின் தேசிய பட்டியல் குறித்து உயர் மட்டத்தில் கூடி முடிவு -சம்பந்தன்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனங்களை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பாக கூட்டமைப்பின் உயர்மட்டக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று அக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 5 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 2 தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கெனவே தேசியப் பட்டியல் வேட்பாளர்களாக 9 பேரின் பெயர்களை தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளது.

இத்தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிகள் ஒரு கிழமைக்குள் தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக யாரை நியமிக்கவுள்ளது என்பது குறித்த கேள்வி எழுந்துள்ளது.

இதனிடையில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு குறைந்தளவு வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்த அருந்தவபாலனுக்கு தேசியப் பட்டியலில் இடமளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தென்மராட்சி ஆதரவாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை.இத்தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் தோல்வியடைந்த பொன. செல்வராசா. அரியநேத்திரன் மறறும் கோவிந்தன் கருணாகரன் ஆகியோரில ஒருவரை நியமிக்க வேணடும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே. தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் தொடர்பில் கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என சம்பந்தன் தெரிவித்துள்ளார். (செ-11)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### சமாதானமாக வாழுங்கள்

★ எவன். ஒருவனின் மானத்தை வெளிப்படுத்துகிறானோ. அவனுடைய மானத்தை அல்லாஹ் வெளிப்படுத்துகின்றான்.

★ எவன் ஒருவனைக் காட்டிக் கொடுக்கிறானோ. அவனை இறைவன் காட்டிக் கொடுக்கின்றான்.

★ யாரின் முகத்திலும் கையால் அறையாதீர்கள். முகத்தை அல்லாஹ் தனது கையால் படைத்து இருக்கின்றான்.

★ தொழுகையை அதன் நேரத்தில் தொழுவதில் விரைந்து கொள்ளுங்கள்.

★ கைப்பொருள் கைவிட்டுப் போவதற்கு முன் தானதருமங்கள் கொடுப்பதில் விரைந்து கொள்ளுங்கள்.

★ வயது வந்த பெண்மக்களை திருமணம் செய்து வைப்பதில் விரைந்து கொள்ளுங்கள்.

★ மரணம் வரும் முன்பு மறுமைககுரிய நற்செயல் ஆற்றுவதில் விரைந்து கொள்ளுங்கள்.

★ மனசஞ்சலம் உண்டாவதற்கு முன் உங்களுக்கிடையே ஏற்படும் சச்சரவுகளை சமாதானம் மூலம் தீர்த்துக் கொள்ள முயலுங்கள்.

# 49 தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம்

(கொழும்பு)

பொதுத் தேர்தல் முடிவுகள் வெளிவந்ததையடுத்து அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைப் பழி வாங்கும் நடவடிக்கைகள் இடம் பெற்ற நிலையில்.

இதற்கு எதிராக அங்குள்ள 49 தமிழ்க் கைதிகளும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்ததையடுத்து சிறைச்சாலை அதிகாரிகள் சிலர் தமிழ்க் கைதிகளுடன் கடுமையாக நடந்துகொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிய செல் ஒன்றுக்குள் 49 கைதிகளும் நெருக்கமாக அடைககப்பட்டுள்ளனர்.

இவர்கள் மலசல கூட்டத்தைப் பயன்படுத்துவதற்குக்கூட அனுமதிக்கப்படவில்லை எனவும்.அதற்குப் பதிலாக சிறிய ரின்கள் சில அவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதனையடுத்து சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் தமிழ்க் கைதிகளுக்கும் இடையில் கடுமையான வாக்கு வாதங்களும் இடம்பெற்றுள்ளன.

உங்களுடைய ஆட்களால்தான் நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது எனக் கூறி கைதிகளை கடுமையான முறையில் அதிகாரிகள் எச்சரித்திருப்பதாகத் தெரிகின்றது.

அனுராதபுரம் சிறையில் வைத்துத்தான் இரு தமிழ்க் கைதிகள் இரு வருடங்களுக்கு முன்னர் அடித்துக் கொல்லப்பட்டார்கள் என்பது தெரிந்ததே.

இதனால். நேற்றுமுன்தினம் முதல் தமிழ்க் கைதிகள் அச்சத்திலிருப்பதாகத் தெரிகின்றது.

இதனையடுத்து தம்முடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியும். தம்மை தமது சொந்த இடங்களில் உள்ள சிறைகளுக்கு மாற்றுமாறு கோரியும் தமிழ் அரசியல் கைதிகள் நேற்றுக் காலை முதல் உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பதாகவும் தெரியவந்திருக்கின்றது. (செ-12)



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## சுதந்திரமும் ஒழுக்கக் கட்டுப்பாடும்

சுதந்திரமும் ஒழுக்கக் கட்டுப்பாடும் நேர் எதிரானவை. அவை ஒன்றை ஒன்று அனுசரித்தும் இருப்பவை.

சுதந்திரத்தைப் பாதுகாப்பதுதான் தற்காப்பின் குறிக்கோள். ஆனால் தற்காப்பில் சுதந்திரம் இருக்கிறதா? போர் வீரர்களுக்கு சுதந்திரம் இருக்கிறதா? இல்லை. அவர்கள் முழுக்கட்டுப்பாட்டில் உள்ளவர்கள். இடது காலை எடுத்து வையுங்கள் என்று சொல்லும் போது வலது காலை எடுத்து வைக்கக்கூட சுதந்திரம் இல்லாதவர்கள் அவர்கள் எடுத்து வைக்கும் காலடிகள்கூட தீர்மானிக்கப்பட்ட அளவுக்கு உட்பட்டவை. இயற்கையான லயத்துடன் நடக்கக்கூட உரிமையில்லாதவர்களுக்கு தற்காப்புப் பணியில் சுதந்திரம் அறவே கிடையாது. ஆனாலும் இவர்கள்தான் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒழுக்கக் கட்டுப்பாடில்லா சுதந்திரம் தற்காப்பில்லாத ஒரு தேசம் போன்றது. ஒழுக்கக் கட்டுப்பாடு சுதந்திரத்தைக் காக்கிறது. அவை ஒன்றிற்கு ஒன்று உறுதுணையாக இருக்கின்றன. இதைப்புரிந்து வாழ்க்கையில் முன் செல்லுங்கள். உங்களுக்குச் சில கட்டுப்பாடுகள் உள்ளன. அவைதான் உங்களுக்குச் சுதந்திரம் தருகின்றன. நீங்கள் உங்கள் முழுக் கவனத்தையும் சுதந்திரத்திலோ ஒழுக்கக்கட்டுப்பாட்டிலோ செலுத்தலாம். மகிழ்ச்சியாகவோ. மகிழ்ச்சியில்லாமலோ இருப்பீர்கள்.

வேலிகள் வேலிகளாகத்தான் இருக்கவேண்டும். உங்கள் நிலத்தை எல்லாம் நிரப்பும் அளவுக்கு வேலிகள் இருந்தால் நீங்கள் வீடு கட்டுவது எங்கே? இருக்கவேண்டிய இடத்தில் வேலி இருந்தால் அது உடைமையைப் பாதுகாக்கிறது.

அன்பு உங்களைச் சரியான பாதையில் செலுத்துகிறது. பயம்கூட உங்களை மறுபடியும் சரியான பாதையில் செலுத்துகிறது. மதங்கள். பயத்தை வாழ்க்கையில் தூண்டுகோலாகப் பயன்படுத்துகின்றன.

குழந்தைக்கு ஒரு குறிப்பிட்ட வயதில் இயற்கையே பயத்தைத் தூண்டுகிறது. குழந்தை மிகவும் சிறிய வயதில் தன் தாயின் நூறுவீத நேசத்தையும் கவனத்தையும் பெறுகிறது. அப்போது அதற்குப் பயமே இருப்பதில்லை. குழந்தை சுதந்திரமாக வளரும்போது எச்சரிக்கையாக இருக்கக் கற்றுக்கொள்கிறது.இயற்கையே அதற்குச் சற்றுப் பயத்தைக் கொடுக்கிறது. சுதந்திரம் அதிகமாகும் போது குழந்தை மிகவும் ஜாக்கிரதையாக நடக்கத் தொடங்குகிறது.


முழுமையான சுதந்திரம் எல்லையற்ற பேரின்பம் என்ற ஒரு நிலையைப் பற்றி அத்வைதம் பேசுகிறது. ஆனால் அத்வைத ஞானமானது மக்களுடைய விருப்பங்களுக்கும் வசதிகளுக்கும் ஏற்றவாறு முழுக்க முழுக்கத் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. நாம் நடைமுறைக்கேற்றபடி இருத்தல் அவசியம். மனதில் சுதந்திரமும் இதயத்தில் அன்பும் செயலில் ஒழுக்கக் கட்டுப்பாடும் வேண்டும்.

சுதந்திரத்தை இழந்து விடுவோமோ என்ற பயம்தான் ஒழுக்கக் கட்டுப்பாட்டையும் தற்காப்பையும் கொண்டுவருகிறது. பயத்[illegible] இப்பாதையில் ஞானம் உங்களின் சுதந்திரம் மற்றும் உங்களின் பாது[illegible] தத்துவம் ஆதிசங்கரரால் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.பிறிமியர்லீக் வெற்றிக்கிண்ணம் யாழ்.சென்றல் இரண்டாவது வெற்றி





யாழ்.பிறிமியர் லீக் வெற்றிக் கிண்ணத்திற்காக யு.ஆர். பவுண்டேசன் 3ஆவது வருடமாக நடத்தும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டு துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் பிரிவு II இல் யாழ். சென் றல் அணி பற்றீசியன்ஸ் அணியை 46 ஓட்டங்களால் வெற்றி பெற்று தமது 2 ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

பூவா தலையா நிகழ்வில் வெற்றி பெற்ற யாழ். சென்றல் அணி துடுப்பாட்டத்தை தீர்மானித்தது. யாழ். சென்றல் அணி 20 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பாலேந்திரா-14, வி.றஜீவ்குமார் ஆட்டமிழக்காது -70, சுதர்சன்-22, சலிஸ்ரன் ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் பற்றீசியன்ஸ் சார்பாக அஜித் டார்வின் -01, அலஸ்ரின்-01, ஜக்ஸன்-01, கஜேந்திரன் -01 இலக்குகளைக் கைப்பற்றினர். பதிலுக்கு களமிறங்கிய பற்றீசி யன்ஸ் அணி 20 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றனர். ஜக்ஸன்-27, டானியல்-23, நோபேட்-13, அலஸ்ரின் -31 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் யாழ்.சென்றல் அணி சார்பாக சலிஸ்ரன், காலெல், சுபாதீஸ், றஜீவ்குமார், கஜீபன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியில் யாழ்.சென்றல் அணியை சார்ந்த வி.றஜீவ்குமார் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட் டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து 6 ஆவது ஆண்டாக நடத்திவரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு யாழ்.சென்றல் விளையாட்டுக் கழ கம் 4.99 புள்ளிகளையும் பற்றீசியன்ஸ் அணி 1.67 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது. (கு)



## நவசக்தி வி.கழகத்தை வீழ்த்தி வல்வை அரையிறுதிக்கு தகுதி

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் நேற்றைய காலிறுதி ஆட்டத்தில் வல்வெட்டித்துறை வல்வை வி.கழகம் மற்றும் கரவெட்டி நவசக்தி வி.கழகம் ஆகியன மோதின.

இதில் வல்வை வி.கழகம் 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்ட த்திற்கு தகுதி பெற்றுள்ளது.

மேலும் இப்போட்டிக்கான ஆட்ட நாயகனாக வல்வை வி.கழக வீரர் பிரதீபன் தெரிவானார்.

இவருக்கான இராசா ஈஸ்வரன் ஞாபகார்த்தமான வெற்றிக் கேடயத்தை கழக வீரார் நிமல்ராஜ் வழங்கி வைத்தார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## அம்லா சதம்

# உலகக்கிண்ண தோல்விக்கு பதிலடி; நியூசிலாந்தை வென்றது தென்னாபிரிக்கா



நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் "திரில்" வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா- நியூசிலாந்து அணிகள் மோதிய முதல் ஒருநாள் போட்டி டர்பனில் நேற்றுமுன்தினம் நடந்தது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனையடுத்து முதலில் விளை யாடிய தென்னாபிரிக்கா அதிரடி ஆட்டத்தால் 50 ஓவரில் 7 விக் கெட் இழப்புக்கு 304 ஓட்டங்கள் குவித்தது.

தொடக்க வீரராக களமிறங்கிய ஹசிம் அம்லா 21வது சதம் அடித்தார்.

இவர் 126 பந்துகளுக்கு 124 ஓட்டங்கள் (13 பவுண்டரி, 3 சிக்சர்) எடுத்தார்.

ரூசோ 89 ஓட்டங்கள் (6 பவுண்டரி, 3 சிக்சர்) குவித்தார். மிலின், மெக்லகன் தலா 2 விக் கெட் கைப்பற்றினார்கள்.

இதைத் தொடர்ந்து கடின இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணி பதிலுக்கு அதிரடி காட்டி ஓட்டங்கள் சேர்த்தது.

இருப்பினும் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் பறிபோனதால் நியூசிலாந்து 48.1 ஓவரில் 284 ஓட்டங்களுக்கு 'ஓல்அவுட்' ஆனது. இதனால் தென்னாபிரிக்கா 20 ஓட்டங்களால் "திரில்" வெற்றி பெற்றது.

டாம்லதம் (66) அரைசதம் எடுத்தார். அணித்தலைவர் வில்லிய ம்சன் (47), நீசம் (41) ஓரளவு ஓட்டங்கள் எடுத்தனர்.

ஸ்டெய்ன், பிலான்டர், இம்ரான்தாகீர், டேவிட் வைஸ் தலா 2 விக்கெட் கைப்பற்றினார்.

இந்த வெற்றி மூலம் உலகக் கிண்ண அரையிறுதியில் ஏற்பட்ட தோல்விக்கு தென்னாபிரிக்க அணி பதிலடி கொடுத்துள்ளது.

3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் தென்னாபிரிக்கா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காவின் கடைசி டெஸ்ட்; இந்தியா சிறந்த ஆரம்பம்

இலங்கை அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட்டுக்கு 319 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இந்தியா- இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி கொழும்பு பி.சாரா மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது. நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் விராட் கோலி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

இலங்கை அணியில் நுவான் பிரதீப்புக்குப் பதில், துஷ்மந்த சமர அழைக்கப்பட்டிருக்கிறார். அதேவேளை இந்திய அணியில் ஷிகர் தவான், ஹர்பஜன் சிங், வருண் ஆரோன் ஆகியோர் இடம்பெறவில்லை. முரளி விஜய், ஸ்டுவார்ட் பின்னி, உமேஷ் யாதவ் ஆடும் லெவனில் இடம் பெற்றுள்ளனர்,

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. காயத்தில் இருந்து மீண்டு வந்த தொடக்க ஆட்டக்காரர் முரளி விஜய் டக்-அவுட்டாக வெளியேறினார்.

இவரைத் தொடர்ந்து வந்த ரஹானே 4 ஓட்டங்களில் நடையை கட்டினார். இதனால் 12 ஓட்டங்களுக்கே 2 முக்கிய விக்கெட்டுகளை இந்திய அணி இழந்தது.

இந்நிலையில் ஜோடி சேர்ந்த ராகுல், அணித்தலைவர் கோலி நெருக்கடியில் இருந்த இந்திய அணியை சிறப்பான ஆட்டத்தால் நிலைநிறுத்தினர். இந்த ஜோடி 3வது விக்கெட்டுக்கு 164 ஓட்டங்கள் எடுத்தது. சிறப்பாக விளையாடி வந்த நிலையில் கோலி (78) சதத்தை தவற விட்டார். மறுமுனையில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய ராகுல் சதம் அடித்தார். அவர் 108 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

பின்னர் ரோஹித், பின்னி ஜோடி சேர்ந்தனர். பின்னி 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சிறப்பாக விளையாடி வந்த ரோஹித் அரைசதம் அடித்தார். அவர் 5 பவுண்டரி 3 சிக்சர் உட்பட 79 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

இந்திய அணி 87.2 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டு க்கு 319 ஓட்டங்கள் எடுத்துள்ளது. சஹா (19) ஆட்ட மிழக்காமல் இருக்கிறார்.

இலங்கை சார்பில், பிரசாத், ஹேரத் தலா 2, மத்யூஸ், சமீர தலா ஒரு விக்கெட்களை வீழ்த்தினர். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# தேசிய அரசாங்கம்...

ந்திரக் கட்சியினால் செய்ய முடியுமான பொறுப்புக்கள் குறித்து இங்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமையப்போகும் தேசிய அரசாங்கத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியாக இருந்து எடுக்கப்படும் சகல தீர்மானங்களும் நாட்டினதும் மக்களினதும் வெற்றியை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டு மெனத் தெரிவித்தார்.

தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்களிலும், நாட்டுக்கு [illegible]பட முடியுமான ஏனைய சவால்களின்போதும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சரியான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி, உடன்பாட்டுடன் செயற்படுவதனால் மட்டுமே நாட்டு மக்களை வெற்றிப் பாதைக்கு கொண்டு வரமுடியும் எனவும் ஒன்றுபட்டு ஒரு அரசாங்கம் என்ற வகையில் செயற்படுவதே அதற்கு பொருத்தமான வழிமுறையாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஒரு திறந்த கலந்துரையாடலாக நடைபெற்ற இச் சந்திப்பில் ஒரு தேசிய அரசாங்கமாக எதிர்காலத்தில் செயற்படுவது தொடர்பாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கருத்தை பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் விரிவாகக் கலந்துரையாடி தமக்கு ஒரு அறிக்கையை வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இதற்காக ஜோன் செனவிரத்னவின் தலைமையில் ரஞ்சித் சியம்பலப்பிட்டியவை செயலாளராகக் கொண்டு ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இந் நிகழ்வில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் புதிதாக பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (செ-11)


## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.)(Bid fee) | Security Deposit(Rs.) | Validity Period of Bid Security(Days) | Approximate Direct cost of the work(Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Drug Stores | 500.00 | 70,000.00 | 91 | 3.42 | C 8 |
| Renovation of NTS Demonstration Room and Painting of NTS Boundary Wall | 500.00 | 45,000.00 | 91 | 2.22 | C 9 |
| Construction of NTS Bicycle park, Repair works at NTS Tutors Quarters and Aluminium Partition for Ward No 11 | 500.00 | 20,000.00 | 91 | 0.95 | C 10 |

2.Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

4.Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

5.A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 24.08.2015 up to 03.09.2015 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

6.Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 04.09.2015, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
21/08/2015.

(CF03692)


# பொறுப்பு கூறலை...

ஐரோப்பிய ஒன்றியப் பேச்சாளர், சிறந்த முறையில் தேர்தலை நடத்தி முடித்த தேர்தல் ஆணையாளர், உள்நாட்டு வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினருக்கும் பாராட்டுக்களை தெரிவிப்பதாகத் தெரிவித்துள்ளார். (எ-12)

# அரசியல் வேண்டாம்...

துள்ளார்.

கடந்த சில மாதங்களாக பசில் ராஜபக்ஷஅரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. எனினும், நாடாளுமன்றத் தேர்தலில் தனது சகோதரர் மகிந்த ராஜபக்ஷ போட்டியிட்டதனைத் தொடர்ந்து அவரது அரசியல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முயற்சி எடுத்த போதிலும் அதற்கு உரிய சந்தர்ப்பம் கிடைக்காது ஓரம் கட்டப்பட்டேன் என தெரிவித்துள்ளார்.

தேர்தலின் பின்னர் பல்கலைக்கழக பேராசிரியர்கள், உப வேந்தர்கள், சட்டத்தரணிகள், முன்னாள் அமைச்சு செயலாளர்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை சந்தித்த போது தாம் அரசியலை விட்டு விலகிக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் ரீதியான தொடர்புகள் இல்லாத போதிலும் அரசியல்வாதிகளுடனான நட்பு தொடரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# ஸ்ரீஸ்கந்தராஜா சாந்திக்கு தேசியப் பட்டியலில் இடம்கொடுங்கள்

## வன்னி பொது அமைப்புக்கள் கூட்டாக கோரிக்கை

(மல்லாவி)

வன்னி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் பெண்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தி, நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு பெரும்பான்மை விருப்பு வாக்குகளைப் பெற்றபோதும் சில நூறு வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிவாய்ப்பை இழந்துள்ள திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா சாந்திக்கு தேசியப்பட்டியல் மூலம் ஆசனம் ஒன்றை வழங்க வேண்டுமென வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த பல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதியின் கீழுள்ள முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெண்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா சாந்தி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு இருந்தார்.

இவர் முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவியை வாழ்விடமாகக் கொண்டிருந்ததுடன் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது எறிகணை வீச்சின் தாக்குதலுக்கு உள்ளாகி மாற்றுத்திறனாளியாக ஆக்கப்பட்டார்.

இந்நிலையில் வட பகுதியிலுள்ள 31 ஆயிரம் குடும்பத் தலைவரை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பிரதிநிதியாகவும் வட பகுதியில் வாழ்கின்ற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பிரதிநிதியாகவும் மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்து செயற்பட்டதுடன் தேர்தல் களத்திலும் அவர் இறங்கியிருந்தார்.

இந்நிலையில் அவர் 18 ஆயிரத்து 80 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தபோதும் சில நூறு வாக்குகளினால் தமது வெற்றி வாய்ப்பை இழந்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி திருகோணமலை, யாழ்ப்பாணம், அம்பாறை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் போட்டியிட்டிருந்த பெண் பிரதிநிதிகள் உட்பட மொத்தம் நான்கு பேரில் இவருக்கே அதிகூடிய விருப்பு வாக்குகள் கிடைக்கப்பெற்றன.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட அனைத்துப் பெண்களும் தமது வெற்றி வாய்ப்பை இழந்துள்ள நிலையில், பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா சாந்திக்கு தேசியப்பட்டியல் மூலம் ஒரு உறுப்பினர் பதவியை வழங்குமாறு கோரி வன்னி மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது கோரிக்கை அடங்கிய மகஜரினை அனுப்பி வைத்துள்ளனர். (செ-15)

# கூட்டமைப்பின் 5 "எஸ்" கள்

நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) வேட்பாளர்களுக்கிடையில் ஒரு ஒற்றுமை காணப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள சுமந்திரன், சேனாதிராசா, சிறீதரன், சரவணபவன், சித்தார்த்தன் ஆகிய ஐவருமே ஆங்கில எழுத்தான "எஸ்" ஐ முதல் எழுத்தாக கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்

### கல்வியாண்டு 2013/2014 விரிவுரைகள்

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட 1-ம், 2-ம், 3-ம், 4-ம் வருட மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு 2013/2014 இற்கான விரிவுரைகள் 24.08.2015 திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. மாணவர்கள் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்
18.08.2015

(சி-187)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய அரசா...

டன் இணைந்து தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு மத்தியகுழு அனுமதி வழங்கியதாகத் தெரிவித்தார்.

இந்த தேசிய அரசாங்கம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் சிறப்புக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த குழுவில் முன்னாள் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா , சரத் அமுனுகம, மகிந்த சமரசிங்க, எஸ்.பி. திசாநாயக்க, சுசில் பிரேமஜயந்த ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழு தேசிய அரசாங்கம் அமைப்பது சம்பந்தமான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்றும் துமிந்த திசாநாயக்க கூறினார்.

குறைந்தபட்சம் இரண்டு வருடங்களுக்காவது இந்த தேசிய அரசாங்கம் செயல்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(செ-12)

## எதிர்க்கட்சித்...

வுள்ளதாகவும், அதில் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு பிரதி பிரதமர் பதவி வழங்கப்படலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து புதிய அரசாங்கத்தை அமைக்குமாயின், அடுத்ததாக அதிகூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தவகையிலேயே சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைக்கும் என கூறப்படுகின்றது.

அதேவேளை, தேர்தல் வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாவை சேனாதிராஜா, தாங்கள் புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்கப்போவதில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

1977ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## வாக்குகளில்...

மாவட்டத்தில் சிறப்பாகவும் உண்மையாகவும் நடைபெற்றது.

தேர்தல் கடமையில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்கள், பொலிஸார், கடற்படையினர், விமானப் படை அதிகாரிகள், வேட்பாளர்கள், பொது மக்கள் மற்றும் ஊடகங்கள் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கினர்.

இத்தேர்தலில் வாக்கெண்ணும் பணி எந்தவொரு அசம்பாவிதம் நடைபெறாத வகையில் மிகவும் வெளிப்படைத்தன்மையாகவும் இரகசியத் தன்மையின்றியும் செய்யப்பட்டது.

யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதி வாக்குகளை எண்ணுவதற்காக 41 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதில் அலுவலக உத்தியோகத்தர்கள் மட்டுமன்றி கட்சிகள், சுயேட்சைக் குழுக்களின் முகவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்கள் அதில் கலந்து கொள்வதற்கும் பார்ப்பதற்கும், பிழைகளை சுட்டிக்காட்டுவதற்கும் உரிமை அளிக்கப்பட்டிருந்தது.

கட்சிகளின் வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர் கட்சிகளின் நிலை அறிவிக்கப்பட்டது. அதன்போது ஒரு சில கட்சிகள் தமது வாக்குகளை மீள எண்ணுவதற்கு கோரியிருந்தன.

அவர்களின் கோரிக்கையை மறுத்து திருப்தியின்மை இருப்பின் நீதிமன்றை நாடுமாறு கூறியிருந்தோம்.

விருப்பு வாக்கு எண்ணும்போது கட்சிகள், சுயேட்சைக் குழுக்களின் முகவர்கள், அபேட்சகர்களும் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு விஜயம் செய்ய முடியும் என தேர்தல் ஆணையாளரால் விசேடமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி கட்சி வாக்கு எண்ணப்பட்டபோதும், விருப்பு வாக்கு எண்ணப்பட்டபோதும் அவை காட்சிப்படுத்தப்பட்டன.

அதில் திருப்தியின்மை இருந்தால் பிரதான வாக்கெண்ணும் அதிகாரிகளுக்கு அறிவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் வேட்பாளர் ஒருவர், வாக்கு எண்ணுபவர் வாக்குச்சீட்டை பார்க்காமல் பிழையாக எண்ணுகிறார் என்று கூறியிருந்தார்.

உடனடியாக மேலதிக தேர்தல் ஆணையாளரின் கட்டளைப்படி அதிகாரி ஒருவரால் குறித்த வேட்பாளருக்கு அதுதொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. அன்றைய தினம் எவரும் முடிவுகள் அறிவிக்கப்பட்டபின் வாக்குகளை மீள எண்ணுவதற்கு எம்மிடம் கோரவில்லை. அத்துடன் எழுத்து மூலமான முறைப்பாடுகளும் இதுவரை எமக்கு கிடைக்கவில்லை.

எனினும் இரகசியத்தன்மை இன்றி சிறப்பான தேர்தல் செயற்பாடுகளை மேற்கொண்ட அதிகாரிகளுக்கு வாக்கெண்ணுவது தொடர்பாக சில மாறுபட்ட தகவல்கள், கருத்துகள் வெளியாகியிருப்பது மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே அநீதிகள் இழைக்கப்பட்டதாக சந்தேகப்படும் வேட்பாளர்கள், கட்சிகள் நீதிமன்றத்தை நாடும் உரிமையை பெற்றுள்ளனர்.

இதன்படி அவர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் கட்டளை பிறப்பிக்கப்படுமாயின் வாக்குகளை மீள எண்ண முடியும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார். (செ-9)

## ரணில் இன்று பதவிப்...

கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சுமார் 38 வருட கால நாடாளுமன்ற பின்னணியைக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க, கடந்த 1993ஆம் ஆண்டு முதலாவது தடவையாக பிரதமராக பதவியேற்றார். இன்றைய தினம் அவர் பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்துகொள்வதோடு, நான்கு தடவைகள் பிரதமர பதவி வகித்த முதலாவது இலங்கையர் என்ற பெருமையை தனதாக்கிக்கொள்வார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியானது 106 ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. அத்துடன், ரணில் 5 இலட்சத்துக்கும் அதிகமான விருப்பு வாக்குகளை பெற்று முன்னிலையில் உள்ளார்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்க நேற்றைய தினம் பிரதமராக பதவியேற்பார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதால் அவர் இன்றைய தினமே பதவியேற்பார் என தெரியவருகிறது.(செ-12)


B.A பேராதனை
புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள்
ஆரம்பம்
29.08.2015
சனிக்கிழமை 9 am

G.A.Q பேராதனை
துரித மீட்டலும் வினாவிடையும்
விரிவுரைகள்
ஆரம்பம்
29.08.2015
சனிக்கிழமை 9 am

பட்டப்படிப்புக்கள் பிரிவு
BEACON
யாழ்.நகர்
(C-1867)

இறுதிச் சந்தர்ப்பம்!

பட்டத்துடன் தொழில் அனுபவம் உள்ள எவரும்
கனடாவில் குடும்பத்துடன் குடியேறும் அரிய வாய்ப்பு
150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு
180,000*க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்
கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பிரதிநிதி ஊடாக
100% பாதுகாப்பான சேவை
FREE Assessment
Send your CV to info@sikaram.lk
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
www.sikaram.lk
SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd., 275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004
021 222 00 11
(சி-1874)

O/L உடன்
சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய
Business & Hotel Management
3ஆம் அணி

யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!
SEGi | B.H.M.S. | nmit | William Angliss Institute
MALAYSIA | SWITZERLAND | NEW ZEALAND | AUSTRALIA
அனுமதிகளுக்கு
077 3616 798
021 222 0011
கற்கைநெறி ஆரம்பம்
27-08-2015
வியாழன் 10 மணி
SIKARAM
Any Visa to Any Country
FREE ENGLISH COURSE
வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.
Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம்) (சி-1874)

British College of Higher Studies
வழங்கும் மிகக்குறைந்த கட்டணங்களில்
மாணவர்களுக்கான விடுமுறை காலப் பயிற்சி நெறிகள்
அன்பார்ந்த மாண்வர்களே,
உங்கள் ஒரு மாத பாடசாலை விடுமுறையினை மிகவும் பயனுள்ளதாக்க விரும்புகிறீர்களா? நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாக ஒரு மாதத்தில் பேச விரும்புகின்றீர்களா? நவீன தொழில் நுட்ப்ப போதனாமுறையின் கீழ் உங்களை மெருகேற்ற முனைகிறீர்களா? சரளமாக ஆங்கிலத்தில் கதைக்க முடியவில்லையென்று ஏக்கத்துடன் இருக்கின்றீர்களா? கவலையை விடுங்கள் இப்பொன்னான விடுமுறை காலத்தில் உங்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறியை நாம் வழங்கக் காத்திருக்கின்றோம். உங்களின் நேரத்திற்கேற்ப அனைத்து வகுப்புகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.
Spoken English with Grammar
Duration : 80 Hrs
வகுப்புகள் யாவும் நவீனமயப்படுத்தலின் கீழ் Speaking, Reading, Writing & Listening என வகைப்படுத்தி ஒவ்வொரு பிரிவும் பிரத்தியேக விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும்.
(Tutes, CD Lessons, Dictionaries, etc என்பன இலவசமாக வழங்கப்படும்)
Batches Start on
Batch I : 22/08/2015 09.00am to 12.00pm Batch III : 26/08/2015
Batch II : 24/08/2015 02.00pm to 05.00pm Batch IV : 28/08/2015
Students from Grade 9 can Join
BCHS
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935
(சி-1868)

விளம்பரத்துறையில் வேலை வாய்ப்பு
ஊதியம் சராசரியாக மாதம் 30,000
யாழ்ப்பாணத்தினை தலைமையகமாக கொண்ட எமது நிறுவனத்திற்கு முழுநேரமாக / பகுதிநேரமாக விளம்பரம் செய்யக்கூடியவர்கள் வடமாகாணத்தின் அனைத்து ஊர்களிலிருந்தும் தேவைப்படுகிறார்கள்.
● அடிப்படை கல்வித்தகமை : O/L ● சிறந்த தொடர்பாடல் திறமை ● நேர்த்தியான உடையலங்காரம்
● வாடிக்கையாளரிடம் அன்பாகவும் மரியாதையாகவும் நேர்த்தியாகவும் பழகும் திறமை ● நாணயம்
● வேலை நேரம்: உங்கள் விருப்பப்படி எந்தநாளும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் செய்யலாம்.
● ஊதியம் சராசரியாக மாதத்திற்கு 30,000 (உங்களின் திறமைக்கும் உழைப்பிற்கும் ஏற்ப கூடலாம், குறையலாம்)
திறமையான 20 பேர் சேர்த்துக்கொள்ளப்படுவர். 10 நாட்கள் பயிற்சியின் பின்னர் வேலை ஆரம்பம். 6 மாதத்தின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

V2 TRAVELS & TOURS
(1546)
நேர்முகத்தேர்வு : 22-08-2015
காலை 10 மணி முதல் 3 மணிவரை (சனிக்கிழமை) சுயவிபரக்கோவையுடன் வரவும்
தொடர்புகளுக்கு : 0768226243
யாழ்ப்பாணம் 49A,சப்பல் லேன்,யாழ்ப்பாணம்.

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
aat [ Sri Lanka]
Foundation, Intermediate, Final
AA1, AA2, AA3
Qualification:- GCE O/L 6 PASSES
MEDIUM – TAMIL & ENGLISH
ஆரம்பம் :- 22-08-2015 சனிக்கிழமை. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
Further Details:
JAFFNA COLLEGE
Undergraduate Dept
Contact Tel Number : 0212223382, 0212229149
(C-1866)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org